# தமிழரசு

16-11-1987 ரூ. 1




இந்தியர் என்பதில்

பெருமிதம் கொள்வோம் ;

இணைந்தே இனும்பல

சாதனை புரிவோம் .



மாண்புமிகு இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு கே. நட்வர்சிங் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை 8-11-87 அன்று சென்னையில் முதல்வரின் இல்லத்தில் சந்தித்து உரையாடினார்.

ஏர் இந்தியா, ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ், தினத்தந்தி மற்றும் தினமணி இணைந்து நடத்திய தமிழ்ப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு சென்னை கலைவாணர் அரங்கில் 4-11-87 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பரிசு வழங்கினார். அத்துடன் பரிசு பெற்ற ஒவ்வொரு வருக்கும் தமது சொந்தப் பொறுப்பில் தலா ரூ.5,000 வழங்கினார்.



# தேசிய ஒருமைப்பாடு

இந்திய ஐக்கியம் இந்தியர் ஒவ்வொருவரின் உயிர் மூச்சாகும். இந்திய சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் உடல் வெவ்வேறாக இருந்தாலும் உயிரும் உணர்ச்சியும் ஒன்றுதான். கட்டுப்பாடும் ஐக்கியமுமே நமது தேசத்திற்கு முதலில் தேவை.

—நேரு





# கூட்டுறவு

மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சி யடையும்போது கூட்டுறவு உணர்வும் மலர்ச்சி அடைகிறது. வேளாண்மைப் பெருக்கத்தில் முனைப் பாக ஈடுபட்டுள்ள நேரத்தில் தேவைக்கேற்ப கூட்டுறவு' இயக்கப் பணிகளும் விரிவடைவது அவசியம்.

—பேரறிஞர் அண்ணா

# கா. சு. பிள்ளை

தம்முடைய பெருஞ் செயலால் தமக்கு விளையும் பயனையோ பாராட்டையோ காசு அவர்கள் ஒரு பொருளாக மதிக்கமாட்டார்கள். அவர்களுடைய தனிப்பெரும் குணங்களை எண்ணும் போது என் உள்ளத்தே புதிய ஊக்கமும் உணர்ச்சியும் கிளர்ந்தெழுகின்றன.

எம். பக்தவத்சலம்
(காசுவின் மாணவர்)



திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ - ஐப்பசி 30

தமிழரசு

மலர் : 18 16-11-1987 இதழ் : 10

# ஒற்றுமையே நமது உயிர் நாடி

அமரர் திருமதி **இந்திரா காந்தி**

நாடு முழுவதும் பலமுடையதாகவும், ஒற்றுமையுடையதாகவும்,ஒன்றாகப் பணியாற்றுவதாகவும் இருந்தால்தான் ஒவ்வொரு அங்கமும், ஒவ்வொரு மாநிலமும் முறைப்படி உதவ முடியும்; அதுவும் முன்னேற முடியும்.

மத்தியிலுள்ள எங்களுக்கு, எல்லா மாநிலங்களும் எங்களது குழந்தைகள் மாதிரி; எல்லோரும் சமம். எங்களிடம் உள்ள எல்லாம் மாநிலங்களுக்குச் சொந்தம். ஏனெனில் இந்தியா என்பது என்ன? இந்தியா என்பது மாநிலங்கள் சேர்ந்த ஒன்று. எல்லோரும் முன்னேறினால், மக்களுடைய துன்பங்க்ள் நீக்கப்பட்டால் இந்தியாவும் வளமுடையதாக முடியும்.

பெரிய நாட்டினைச் சேர்ந்தவர்களாக இருப்பதன் பெரிய அனுகூலம் என்னவெனில், நெடுங்கால ஏழ்மையின் காரணமாகவும், பொருளாதாரப் பிற்போக்குகளினாலும், தற்சமயம் நாம் பலமில்லாதவர்களாகயிருப்பினும், நாம் பலமுடைய நாடாக வளர வளர, மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கள், சிறிய நாடு அல்லது சிறிய பகுதியைவிடப் பல மடங்கு அதிகமாயிருக்கும். எனவே தான், பல்வேறு பகுதிகளிலுள்ள எல்லா மக்களுக்கும் உதவிடும் வகையில் நமக்கு வருவாய்களுக்கான வழி வகைகளை ஏற்படுத்தவும், போதுமான பலமுள்ளவர்களாகவும் முயன்று வருகிறோம்.

எல்லா மக்களுக்கும்-செல்வாக்குள்ள சில மக்களுக்கு மட்டுமல்ல-எல்லா மக்களுக்கும் உண்மையான சுதந்திரம் கிடைக்கப் பெற தேவையான ஆர்வம், உள்ளுணர்வு என்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான். அத்துடன் முக்கியமாகச் சேர்க்கப்பட வேண்டியது என்னவென்றால் மக்களின் பொறுப்புகளும், கடமைகளும் ஆகும். கடமையும், உதவும் பண்பும் இல்லாமல் சலுகையும், உரிமையும் இருக்க முடியாது என்பதனை மகாத்மா காந்தி நமக்கு அடிக்கடி சொல்லித் தந்துள்ளார். மக்கள் தங்களுக்காகச் செயலாற்ற வேண்டும், சுயசார்புடையவர்களாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லும் போது, அவர்களுக்குத் தங்கள் நல்வாழ்வுக்கான பொறுப்பு உணர்ச்சியிருக்க வேண்டுமென்பதுடன் மட்டுமின்றி, தங்களுக்கு அருகிலுள்ளவர்கள், சுற்றுப்புற சமுதாயம், நாடு முழுவதற்கும் அவர்கள் செயலாற்ற வேண்டிய கடமைகள் உண்டு என்ற பொறுப்புணர்ச்சியும் வேண்டும்.

தமிழ்நாடு உயர்ந்த தரத்திற்குப் பெயர் பெற்று வந்திருக்கிறது. அந்தப் புகழைத் தமிழ் நாட்டிற்காக மட்டுமல்ல, அனைத்து இந்தியாவிற்காகவும் நிலை நிறுத்த வேண்டும். ஏனெனில் நாம் நமது நாடு முழுவதையும் உயர்த்த விரும்புகிறோம்.

கடின உழைப்பு, ஒற்றுமை உணர்வு, சரியான பாதையில் செல்லுதல் போன்றவைகளால் மட்டுமே இந்தியாவைப் பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் - வெளிநாடுகளிலிருந்து கிளம்புகின்ற சவால்களையெல்லாம் பலமாக எதிர்க்கின்ற-சக்தி மிக்க நாடாக ஆக்க முடியும்.

மொழி விஷயமானாலும் சரி, சாதி, மதப் பாகுபாடானாலும் சரி எவ்விதக் குறுகிய நோக்கத்துக்கும் நாம் ஆளாகக்கூடாது.



பரந்த மனப்பான்மையுடனும் பெருநோக்குடனும் பிரச்சனைகளை நாம் அணுகுவோமேயானால், உறுதியாக நிலைத்த பயனை நாம் பெறுவது எளிதாக இருக்கும்.

நல்ல இந்தியாவை உருவாக்க வேண்டுமென்று நாம் கூறும்போது, அதற்கு என்ன பொருள்? நல்ல வீடு உருவாக்கப்படவேண்டும் என்பதுதான் அதற்கு உண்மையான அர்த்தம். வீடு முன்னேறினால், பின் நகரமும் ,கிராமமும் முன்னேறுகின்றன. நகரமும், கிராமமும் முன்னேறினால், தானாக நல்ல நாடு உருவாகிறது!

நாம் ஒரே மாதிரியான அமைப்பையோ, கட்டுப்பாடான வாழ்க்கையையோ விரும்பவில்லை. இந்த மாறுபாடுகள் நமது வாழ்க்கையை வளமாக்குகின்றன, நமது நாட்டை மேலும் இனிமையானதாக்குகின்றன என்று நாம் நம்புகிறோம். இதற்கு என்ன பொருள் என்றால், ஒரு பிரிவினர், ஒரு மாநிலம், ஒரு மதம், ஒரு மொழியினர் பிறருடன் அமைதியாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும், மற்றவர்களுடன் ஒத்துழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

நாம் முயற்சி செய்து ஒருவரோடொருவர் ஒத்துழைப்புடன் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையையும் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் ஓரளவுக்கு அண்டை மாநிலங்களைச் சார்ந்தே உள்ளது.

ஒரு பெரிய நாட்டை நாம் சேர்ந்துள்ளது ஒரு பெரிய நன்மையாகும். ஏனெனில், பெரிய நாடாக இருப்பதனால் வாய்ப்புகள் பெரிய அளவில் உள்ளன. ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்ள,சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன. நம்முடைய வேலைத்திட்டங்களில் சில அரசு நடவடிக்கைகளால் மட்டுமே இயக்கப்படுபவை. ஆனால், பல திட்டங்கள் வெற்றி பெறுவது மக்களுடைய ஒத்துழைப்பையும், மக்கள் உஷாராகஅவற்றைக் கவனிப்பதையும். திட்டங்களைச் செயல்படுத்துவதில் மக்கள் ஏற்கும் பங்கினையும் பொறுத்தேயுள்ளது.

**(1976 செப்டம்பர் திங்களில் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது ஆற்றிய உரைகளிலிருந்து)**



# ஒருமைப்பாடு பேணுவோம்

மாண்புமிகு பிரதமர்


## —திரு ராஜீவ் காந்தி

தேசிய ஒருமைப்பாடு என்பது, நமது கட்சி ஈடுபாடுகளை, பிராந்திய மற்றும் குறுகிய கண்ணோட்டங்களை மறந்து நாம் ஒவ்வொரு வரும் செயலாற்றி அடைய வேண்டிய ஒன்று. சுதந்திரத்திற்கும், அதனைக் காப்பதற்கும் என்றுமே விழிப்புணர்வு தேவை. நம்முடைய ஒற்றுமை, ஒருமைப்பாடு பேண, இடையறாத முயற்சி தேவை,

ஜனநாயக அமைப்புமுறை என்பது, மாறு பட்ட அரசியல் கருத்துக்களோடு, மாறுபட்ட சமுதாய, பொருளாதார இலக்குகளோடு, கொள்கைகளோடு இயங்கிடும் ஓர் அமைப்பு ஆகும். நாடு என்கிறபோது, அதன் ஒருமைப் பாடு, தன்னாட்சி உரிமை, பாதுகாப்பு, நிலை பெறும் தன்மை ஆகியவை நாம் மேற்கொள்ளும் எந்த ஒரு கொள்கையையும் விட முக்கியமான வையாகும். இந்தியா முதலிடம் பெற வேண்டும்.

ஒற்றுமை என்பதன் பொருள் ஒன்று போலிருப்பது என்பதல்ல. வேறுபாடுகளை, தனித்தன்மைகளைத் தத்தம் செய்துவிடுவதும் அல்ல. நம்முடைய ஒவ்வொரு கலாச்சார அமைப்பையும், முழுமையாக ஒருங்கிணைப்புக்குள் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக, தனித்தனியே மேம்படுத்துவதில்தான் அது அர்த்தமுள்ளதா கிறது. சகிப்புணர்வு, சகவாழ்வு, இணைந்து செயலாற்றல், வளம்பெறுதல் ஆகியவை நமது அமைப்பிற்கு வலிமை சேர்ப்பவையாகும்.





பண்டித கோவிந்த வல்லப பந்த்

# தேசிய ஒருமைப்பாடு வார விழா

நவம்பர் 19 முதல் 25 வரை தேசிய ஒருமைப்பாடு வார விழாவைத் தமிழக அரசு கொண்டாடுகிறது.

நவம்பர் 19ஆம் நாள், தேசிய ஒருமைப்பாடு நாளாகவும், 20 ஆம்நாள் சிறுபான்மையினர் நல நாளாகவும், 21ஆம் நாள் மொழி ஒற்றுமை நாளாகவும், 22ஆம் நாள் நலிவடைந்தோர் நல நாளாகவும், 23 ஆம் நாள் பண்பாட்டு ஒற்றுமை நாளாகவும், 24ஆம் நாள் மகளிர் நல நாளாகவும் 25 ஆம் நாள் தேசிய ஒருமைப்பாடு வார நிறைவு நாளாகவும் பண்டித கோவிந்த வல்லப பந்த் அவர்களின் நூற்றாண்டு விழாவாக வும் கொண்டாடப்பட உள்ளன.

சென்னை கலைவாணர் அரங்கில் நடை பெறும் ஒருமைப்பாடு வார விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் அறிஞர் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்கின்ற னர். கல்லூரி - பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

ஒருமைப்பாட்டு உணர்வை அனைவரின் இதயங்களிலும் பதிப்பதற்கு இந்த ஒரு வார விழா பயன்படுவது உறுதி.

# மனித இனத்தின் மாபெரும் விடுதலை வீரர்

நமது தலைமுறையின், மிகப் பெரிய தலைவர் ஜவகர்லால் நேரு தன்னிகரற்ற அரசியலறிஞராக விளங்கினார். மனித இனத்தின் சுதந்திரத்திற்காக அவர் செய்த சேவை மறக்க முடியாததாகும். சுதந்திரப்போராட்ட வீரராக அவர் ஈடு இணையற்று விளங்கினார். நவ இந்தியாவை உருவாக்குவதில் அவர் செய்த சேவை ஒப்பு உவமை அற்றதாகும். நமது மனப்பான்மை, சமூக அமைப்பு, அறிவு வளர்ச்சி ஆகியவைகளை நல்ல முறையில் உருவாக்குவதில் அவருடைய வாழ்வும் பணியும் சிறந்த பயனை அளித்துள்ளன.



கூரிய மதி நுட்பமும், மென்மை உணர்வும், பெருகிப் பரந்த உணர்ச்சி வேகமும் நிறைந்த ஒரு கூட்டுப் பொருளாக நேரு விளங்கினார். நலிவுற்ற மக்களுக்கு அவர் ஆழ்ந்த அனுதாபம் காட்டி வந்தார். அவர் ஒரு பெருமை வாய்ந்த எழுத்தாளர்; அவருடைய சுயசரிதம், அவருடைய வாழ்க்கையையும், சுதந்திரப் போராட்டத்தையும், நடுநிலைமையுடன் எடுத்துக்கூறும் மிகச் சிறந்த நூலாகும்.

இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து அவர் பிரதமராகப் பதவி வகித்தார். நம்முடைய நாட்டை முற்போக்கான, அறிவியல் வளர்ச்சி பெற்ற, சக்தி வாய்ந்த நாடாகவும், நமது சமுதாயத்தை வகுப்பு வேற்றுமையற்ற சமுதாயமாகவும் உருவாக்க முயன்று வந்தார். அடிப்படைச் சுதந்திரக்கொள்கைகளில் அவருக்கிருந்த நம்பிக்கை, நமது சிந்தனைக்கும் வாழ்வுக்கும் நல்ல வழிகாட்டியாகும். அவருடைய குணத்தின் வியக்கத்தக்க தன்மையும், செயலும் நாம் எளிதில் புரிந்துகொள்ளுமாறு அமைந்தவைகளாகும்.

அவர் மதித்து வந்த உயர்ந்த தத்துவங்களைச் சொற்பொழிவுகளின் மூலம் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறினார். மனித வாழ்வின் உயர்நிலைக்காக அவர் போராடினார். சாதாரண மக்களும் அவருடைய லட்சியங்களைப் புரிந்துகொள்ளும்படி செய்தார். அவர், முக்கியக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்தியாவின் இந்தத் தலைமுறையை உண்டாக்கினார். கேட்டார்ப் பிணிக்கும் சக்தி வாய்ந்த இனிய குரலோசையின் மூலம் மக்களுக்கு விழிப்பூட்டினார்.

செல்வமும் சிறப்பும் மிக்க சூழ்நிலையில் தோன்றிய அவர், தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தன்னையே அர்ப்பணம் செய்தார். காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக, உன்னதத் தலைவராக விளங்கினார். தேசியப் போராட்டத்திலும் சுதந்திர உதயத்தின் போதும் அவர் புரிந்த சேவை இந்திய வரலாற்றின் முக்கியமான பகுதியாக விளங்குகின்றது.

திட்டமில்லையென்றால் நமது பொருளாதார வளர்ச்சியும், முன்னேற்றமும் புதுவாழ்வும் நமக்குக்

**தத்துவமேதை**
**டாக்டர்**
**எஸ். ராதாகிருஷ்ணன்**

கிடைக்காது என்பதை நேரு சுதந்திரம் வருவதற்கு முன்பே உணர்ந்துவிட்டார். சுதந்திரம் அடைந்த பின்பு திட்டக் கமிஷனின் தலைவராக இருந்து, பல்வேறு திட்டங்களுக்குப் புது வலிமையும் புத்துணர்ச்சியும் ஊட்டினார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த ஆரம்ப காலத்தில் தேசத்தை உருவாக்குகின்றவர் என்ற முறையில் நேருஜி எத்தனையோ துன்பங்களையும், துயரங்களையும் சந்திக்க வேண்டி வந்தது. நாட்டுப் பிரிவினையின் விளைவாகக் கலகங்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. இலட்சக்கணக்கான மக்கள், துணைக்கண்டத்தின் ஒரு பகுதியிலிருந்து, மற்றொரு பகுதிக்குக் குடியேற வேண்டியிருந்தது. இதனால் எழுந்த அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகள் மிகப் பல. இந்தச் சவால்களை ஏற்று எளிதில் தீர்த்தவர் நேரு.

பிற நாடுகளிலிருந்து விலகி, இந்தியா மட்டும் தனித்து விளங்க முடியாது என்பது நேருவின் கொள்கையாகும். காலனி ஆதிக்கத்தை எதிர்த்து உலகெங்கும் நடக்கும் பெரிய இயக்கத்தின் ஒரு பகுதி இந்தியப் பிரச்சனையாகும் என்பதைச் சுதந்திரம் வருவதற்கு முன்னதாகவே உணர்ந்திருந்தார். சுதந்திரமே அவரது உயிர் மூச்சு. தன்னுடைய மக்கள் மட்டுமின்றி உலக மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ வேண்டுமென்று விரும்பியவர் அவர். ஆகவே, ஆப்பிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்கா முதலிய நாடுகளின் சுதந்திர இயக்கங்களுக்கெல்லாம் அன்பும் ஆதரவும் காட்டினார். வேற்றுமை இல்லாமல் அனைவரும் சுதந்திரமாக வாழும் வாழ்க்கையில் அவருக்கு மகத்தான நம்பிக்கை உண்டு.

உலக அமைதியிலும் ஒரே உலகச் சமுதாயம் காணும் கொள்கையிலும் நேரு அசையாத நம்பிக்கை கொண்டவர். உலக நாடுகளின் சாசனத்துக்கு நேருவைக் காட்டிலும் அதிக நம்பிக்கையும் மரியாதையும் காட்டிய தலைவர் யாரும் இருக்க முடியாது. இந்த அணுசக்தி யுகத்தில் போர் என்பது எல்லா நகரங்களின் அழிவையும் குறிக்கும் என்பதை உணர்ந்தவர் நேரு. ஆகவே, உண்மையில் அரசியல்வாதியின் வலிமையானது, பகைமையையும், போராட்டங்களையும் குறைத்து ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒத்துழைக்கும் சூழ்நிலையை உருவாக்குவதாகும். இதைச் செயலில் காட்டியவர் நேரு.


அஞ்சாமை, அறிவுடைமை, பண்புடைமை என்ற அவருடைய குணங்கள், இந்த நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டின. இவை நாம் போற்றிப் பின்பற்ற வேண்டியவைகளாகும்.

அரசியல் அடிமைத்தனம், பொருளாதார வேற்றுமைகள் சமூகக் கொடுமைகள், கலாச்சாரத் தேக்கம் ஆகியவற்றிலிருந்து மக்களின் மனம் விடுபட வேண்டும் என்று அவர் விரும்பினார். அதற்காக, தன் வாழ்வு அனைத்தையும் அர்ப்பணித்துவிட்ட மனித இனத்தின் மாபெரும் விடுதலை வீரர் அவர்.

# கூட்டுறவில் வளரும் தமிழகம்

மாண்புமிகு நிதியமைச்சர்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்



**த**னி மனிதனின் சுரண்டலைத் தடுக்கவும், லாபத்தைப் பரவலாக்கவும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி ஒரு நிலையில் நிலைநிறுத்தவும், நியாயமான விலைகளை நிலைப்படுத்தவும், தொழில்களை வளர்க்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், வாணிகத்தை வளர்க்கவும், வருவாயைப் பெருமளவில் திரட்டவும், நலிவுற்ற மக்களுக்கு உறுதுணையாக நின்று பயன்பட்டு வருபவை கூட்டுறவு நிறுவனங்களேயாகும்.

தமிழகத்தில் கூட்டுறவியக்கம் வறுமைப் பகுதியிலுள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பணிகளை ஆற்றி வருகிறது. தமிழகத்தில் பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல்வேறு வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் சேவை செய்து வருகின்றன. குறிப்பாக, விவசாயிகளுக்குத் தேவையான கடன்களையும், இடுபொருட்களையும் வழங்கியும், விளைபொருட்களை விற்பனை செய்தும், நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்தும், சிறு தொழில் புரிய உதவியும், சுய வேலை வாய்ப்புக்கு வழி வகுத்தும், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் அரும்பணியாற்றி வருகின்றன.

வேளாண்மைத் தொழிலை வளர்த்து, வேளாண்மைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு, அதனையே நம்பி வாழும் இந்த நாட்டில், உழவர் பெருங்குடியினர்க்குக் கடன் வசதி, தரமான விதைகள், உயர் ரக உரம், வலிமை மிக்க பூச்சி கொல்லி மருந்து, பயனுள்ள உழவுக் கருவிகள் போன்ற பல்வேறு உதவிகளை 4,700 கிராம வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன. இத்தகைய துறைகளில் கடந்த பல ஆண்டுகளாகக் கூட்டுறவு நிறுவனங்கள் பாராட்டத் தகுந்த பணிகளையாற்றிச் சாதனைகள் புரிந்துள்ளன. வேளாண்மைப் பணிகளுக்குக்குறுகிய கால, மத்திய காலக் கடன்களாக 1986-87-ல் ரூ.188 கோடி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நீண்டகால வேளாண்மைக் கடன்களாக ரூ.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள மொத்த வேளாண்மைக் குடும்பங்களின் முக்கால் பகுதிக் குடும்பங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் இணைந்து பயன் பெற்று வருகின்றன.

இதுவரை ஒரு இலட்சம் ஆதி திராவிடக் குடும்பங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்வதற்கு, பங்கு மூலதனமாக ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வீதம் தமிழக அரசு மான்யமாக வழங்கியிருக்கிறது.

வறட்சி நிலைமைகளின் காரணமாக வாங்கிய கடன்களையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாமல் அவதியுற்ற ஏழை உழவர்களின் கடன் சுமையைக் குறைக்க, தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆணையின் பேரில் வட்டி, கூடுதல் வட்டி, அபராத வட்டி ஆகியவை ரூ.135 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்களில் 57 சதவீதம், நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது, மேலும் வழங்கப்பட்ட மத்திய காலக் கடன்களில் 90 சதவீதமும், நீண்ட காலக் கடன்களில் 48 சதவீதமும் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**" ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் அரும்பணி ஆற்றி வருகின்றன ".**

இயற்கைச் சீற்றத்தின் கொடுமை மற்றும் பிற இடையூறுகளிலிருந்து விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் சாதனமாகப் பயிர் ஈட்டுறுதித் திட்டம், தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்குச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் விரிவான பயிர் ஈட்டுறுதித்திட்டம், நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்களுக்கு 1985ஆம் ஆண்டிலிருந்தும், சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற பயிர்களுக்கு 1986 ஆம் ஆண்டிலிருந்தும், செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் நலிந்த பிரிவினர் சிறு மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்வதற்காகச் சலுகை வட்டியில் (4 சதவீதம்) கூட்டுறவுக் கடன்கள் 1986-87-இல் ரூ.174




கோடியளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் இது இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது.

கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும், தமிழகம் முழுவதும், குடும்பச் செலவிற்காக 2468 கூட்டுறவு வங்கிகளும், கிளைகளும் நகையீட்டின் பேரில் கடன்களை வழங்கிவருகின்றன. நலிந்த பிரிவினர் அதிக அளவு பயன்பெற வசதியாக வழங்கப்படும் கடனின் அளவு 1000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக 1.5.1987 முதல் உயர்ந்துள்ளது. இத்தகைய கடன்கள் 16 சதவீத வட்டியில் வழங்கப்படுகின்றன.

இத்தகைய கடன்கள் 1986-87-ல் ரூ.332 கோடியளவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் மூன்று மடங்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவு நகர வங்கிகள் நகைக்கடன் மற்றும் சொத்துக்களின் ஆதாரங்களின் பேரில் கடன் வழங்கும் வட்டிக்கடைகள் என்ற நிலை மாற்றப்பட்டு, ஒரு புதிய கோணத்தில் மறுமலர்ச்சித் திட்டத்துடன் இயங்கி வருகின்றன. நடுத்தர மக்களின் - அதிலும் வறுமைக்கோட்டிற்கும் கீழுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்கள் சிறுதொழில்கள் செய்து நாட்டின் உற்பத்தியைப் பெருக்க, சுயதொழில் புரிய, அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. நலிந்த பிரிவினருக்கு முன்னுரிமைக் கடன்கள் சிறு தொழில் புரிய வழங்கப்படுகின்றன.

தமிழகம் முழுவதும் பரவியுள்ள 3848 நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் தமிழக மக்களுக்குத் தரமான பொருட்களை நியாய விலையில் சீராக வழங்கி வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்ந்து முன்னேற்றம் காட்டி நாட்டிலேயே முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இச்சங்கங்கள் 1986-87-இல் செய்தசில்லறை விற்பனையின் மதிப்பு ரூ.715 கோடியாகும். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 கோடிக்கு மேல் விற்பனை செய்யும் பெரிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 19 தமிழ்நாட்டிலுள்ளன. இந்தியாவில் இரண்டாவது சிறந்த கூட்டுறவுப் பண்டகசாலையாக வடஆர்க்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்தப் பண்டகசாலை சிறப்புற்றுத் திகழ்கிறது.

இது தமிழகத்திற்குத் தனிப் பெருமை அளிப்பதாகும்.

நகர்ப்புற மக்களுக்கு இன்றியமையாத பண்டங்கள் கிடைப்பதைப் போலவே கிராமங்களிலும் தரமாகக் கிடைக்கும் பொருட்டு, 12,990 கிராம கூட்டுறவுக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 1986-87-இல் ரூ.243 கோடியளவுக்கு நுகர்பொருள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாணவர் சமுதாயத்திற்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் 1986-87 ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்குப் பாட நூல்களையும் குறிப்பேடுகளையும் சுமார் ரூ.7 இலட்சம் அளவிற்கு, கூட்டுறவுச் சங்கங்கள் நியாயவிலையில் விநியோகித்துள்ளன.


நுகர்வோர்கள் தாங்கள் விரும்பும் பொருட்களை உரிமையுடன் எடுத்து, தரத்தையும், விலைகளையும் கண்டறிந்து வாங்க விரும்புகிறார்கள். நுகர்வோரின் இந்த மனப்பான்மையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 34 சுயசேவைப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நவீன சுய சேவைப்பிரிவு சென்னை நகரில் 1985-முதல் இயங்கி வருகின்றது. இது பழம் பெரும்

நுகர்வோர் கூட்டுறவு நிறுவனமான டி.யூ.சி. எஸ்.ஸின் அங்கமாகும்.

மலைவாழ் பெருங்குடி மக்களின் இருண்ட வாழ்வில் ஒளியேற்றும் நோக்கத்துடன் 17 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றுகின்றன. இவற்றில் 48,194 உறுப்பினர்கள் சேர்ந்து பயன் பெறுகிறார்கள். இச்சங்க உறுப்பினர்கள் பயிர்த் தொழில் செய்யவும், இதர உற்பத்திக் காரியங்களில் ஈடுபடவும், உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன்கள்1986-87 இல் ரூ. 124 இலட்சமளவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

படித்து வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான கடன்களை வழங்குவதற்காகத் தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள், சென்னை, கோயம்புத்தூர், சேலம், மற்றும் தஞ்சாவூர், ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொறியியல் பட்டதாரிகளுக்கும், பொறியியல் பட்டயக்காரர்களுக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தரும் பொருட்டுச் சென்னையிலும், மதுரையிலும் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுவருகின்றன. இந்த இரண்டு சங்கங்களும் சுமார் ரூ.215 இலட்சம் மதிப்புள்ள 187 ஒப்பந்தப் பணிகளை ஏற்று நிறைவேற்றி வருகின்றன. இதுவரை இச்சங்கங்கள் சுமார் ரூ.110 இலட்சம் அளவிற்குப் பணிகளை நிறைவேற்றியுள்ளன.

பல சோதனைகளுக்கிடையே கடந்த பல ஆண்டுகளில் கூட்டுறவு மூலம் தமிழகத்தில் வளர்ச்சிப்பணி நடைபெற்றுள்ளது. சாதனைப் பணிகளையும் செய்திருக்கின்றோம். ''எல்லோரும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரும் எல்லோருக்கும்'' என்ற கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையை உணர்ந்து, கூட்டுறவு மனப்பான்மையுடன் உறுதியாக உழைத்தால்



வருங்காலங்களில் கூட்டுறவு மூலம் தமிழகத்தில் சமுதாய, பொருளாதார மலர்ச்சியும், மறு மலர்ச்சியும் ஏற்படும் என்பது உறுதி. இந்த நேரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

''கூடித்தொழில் செய்வோர்
கொள்கை வருவாய் பெற்றார்,
பாடம் அதை உணர்ந்தால்
பயன் பெறலாம்''

---

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 80-வது பிறந்த நாள் விழா தமிழக அரசு செய்திமக்கள் தொடர்புத்துறையின் சார்பில் 30.10.1987 அன்று மதுரை கோரிப்பாளையம் பசும் பொன் தேவர் சிலை அருகில் கொண்டாடப்பட்டது. விழாத் தொடக்கத்தில் அரசின் சார்பில் மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் திரு என். வாசுதேவன் பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏ. தெய்வநாயகம், திரு பி.கே. எம். முத்துராமலிங்கம் அகில இந்திய பார்வார்டு பிளாக் செயலாளர் திரு எஸ். தவமணி ஆகியோர் மாலை அணிவித்தனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி ச. கோவிந்தம்மாள் வரவேற்புரை நிகழ்த்த விழா தொடங்கப்பட்டது.

விழாவிற்குத் தலைமை வகித்த மாவட்ட வருவாய் அலுவலர் திரு என். வாசுதேவன் அவர்கள் தமது உரையில் பின் வருமாறு கூறினார்கள்: ''பசும்பொன் தேவர் அவர்கள் மிகச்சிறந்த தேசியவாதி என்பதோடு மட்டுமல்லாமல் தலை சிறந்த ஆன்மீக வாதியாகவும் திகழ்ந்தார்கள். பத்தாம் வகுப்புவரை மட்டுமே படித்திருந்தாலும், தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் மிகச் சிறந்த ஆற்றல் மிக்க பேச்சாளராக விளங்கினார். பசும்பொன் தேவர் அவர்கள் காசி சர்வகலாசாலையில் மாணவர்கள் மத்தியில் இந்து மதப் பண்புகள் பற்றி மூன்று மணி நேரம் ஆங்கிலத்தில் அரியதொரு உரையை ஆற்றினார்கள். அச் சமயம் அப்பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த திரு சி.பி. ராமசுவாமி ஐயர் அவர்கள் பசும்பொன் தேவர் உரையைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது ''உலகின் பெரும் பகுதியை ஆங்கில மொழி ஆளுகிறது. உலகாளும் அம்மொழியை எங்கள் பசும்பொன் தமிழ்நாட்டுச் சிங்கம் மூன்று மணி நேரம் அடக்கி ஆண்டு விட்டது.''

விழா முடிவில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு ம. அரிகிருஷ்ணன் நன்றி கூறினார்.





# தமிழக வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு அரசின் உதவி


மாண்புமிகு வேளாண்மை மற்றும் தொழில் அமைச்சர்

**க. இராசாராம்**


**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர். (குறள்)**

வான்புகழ் வள்ளுவர் போற்றும் தொழில் உழவுத் தொழில்-இந்த உழவுத் தொழிலைத் தமிழக வேளாண் பெருங்குடி மக்கள் தலையாய தொழிலாகக் கொண்டுள்ளனர்.

தமிழகத்தில் எக்டருக்கு 4,170 டன் நெல் மகசூல் அளவில் விவசாயிகள் பெற்று வருகின்றனர். அதற்கு முதற்காரணம் அரசின் உதவிகளும், தொழில் நுணுக்கமும் இணைந்து உருவாக்கப்பட்ட சாதனையாகும். அதிலும் 10 ஆண்டுகளுக்கு முன், எக்டருக்கு 2,769 டன் நெல் மகசூல் எடுத்து வந்த அதே விவசாயிகள் இன்று அதே எக்டர் நிலப்பரப்பில் 66.4% அதிக மகசூல் பெறும் நிலை, நுணுக்கமும் அரசு உதவியும் இணைந்ததன் அளவுகோலாகும். இப்படியே பல்வேறு பயிர்களின் மகசூல் திறனும் தமிழகத்தில் உயர்ந்து கொண்டே வருகிறது. பயறுகளின் மகசூல் திறனும் தமிழகத்தில் உயர்ந்து கொண்டே வருகிறது. பயிறுகளின் மகசூல் 46% அதிகரித்ததென்றால், நிலக்கடலையின் உற்பத்தித் திறன் 27% என, ஒவ்வொரு பயிரிலும் பெருமளவில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக, இன்றைக்கு, தமிழகத்தில், வேளாண்மையில், உற்பத்தி அதிகரிப்பு சட்டெனப் பெருகி, பட்டென முடியும் திட்டமாக இராமல், ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது இலக்குகளை எட்டிக்கொண்டிருக்கும் ஒரு உயிரூட்டமுள்ள இயக்கமாக மலர்ந்துள்ளது என்பதைக் கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன்; ஏன், இச்சாதனைகளை நிறைவேற்றி வரும் தமிழன் ஒவ்வொருவனுமே பெருமைப்பட வேண்டியதொன்றாகும்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பொய்த்ததால், நீர்த்தேக்கங்கள் நிரம்பவில்லை. கழனிகளுக்கு நீர் கிடைக்கவில்லை. நமது வளர்ச்சிக்கு, இந்த நிலை ஒரு சவாலாக எழுந்துள்ளது. எனினும், தளர்ச்சிக்கு இடம் கொடாமல், புதிய உத்திகளை உருவாக்கி மேலும் வளர்த்திட முற்பட்டோம். நீர்த்தேக்கத்து நீரை நம்பியிராமல், மழை நீரைக் கொண்டே நெற்சாகுபடியைத் துவக்கிடத் தீர்மானித்து, இன்று தமிழகத்தில் சுமார் 7 இலட்சம் ஏக்கரில், குறிப்பாக தஞ்சையில் மட்டும் 5 இலட்சம் ஏக்கரில், நேரடி நெல் விதைப்பு நடைபெற்ற சாதனை தமிழனின் ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தமிழக அரசு இந்த நுணுக்கத் திட்டத்தை உருவாக்கி, வேளாண் துறையை மக்களிடம் எடுத்துச் சொல்லிப் பணிக்கப்பட்டதன் காரணமாக, இன்று பழக்கமான நடவுப் பழக்கத்திலிருந்து, புதிய நேரடி விதைப்பு முறை பரவியுள்ளது. அந்த அளவிற்கு உழவர் பெருமக்கள் மனமுவந்து, முன்வந்துள்ளது கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வளர்ச்சியிலேயே, இத்தகைய திருப்பு முனையிலும் பெரும் சாதனை செய்த பல்லாயிரக் கணக்கான தமிழக விவசாயிகளுக்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக வேளாண்மை வளர்ச்சிக்கு, ஆராய்ச்சியும், விரிவாக்கமும் இரு தூண்களாகும். தமிழக அரசு ஆராய்ச்சிக்கு ஆதரவு அளித்து, தீவிரமாகச் செயல்பட உதவி வருகிறது. இவ்விதம் தீவிரமாக ஆராய்ந்து வெளிவரும் நுணுக்கங்களை உடனுக்குடன், தமிழகத்தின் மூலைமுடுக்குகள் எங்கும் சிதறிக் கிடக்கும் பல்லாயிரக் கணக்கான விவசாயிகளுக்கு எட்டும்படி செய்திட, பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தைத் தமிழக அரசு நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளது. குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட கிராமம் என்று பயிற்சி வழித் தொடர்புத் திட்ட அலுவலர்கள் தமிழகமெங்கும் விவசாயிகளைச் சந்தித்து வருவதன் காரணத்தால், இன்று விஞ்ஞான அறிவு பரவி, நுணுக்கங்களை எங்கும் பின்பற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. அதன் மூலம் மக்களுக்குச் செய்யும் சேவை பெருமளவில் பெருகியுள்ளது.

தமிழகத்தில் எண்ணெய் வித்துத் துறையும், தோட்டக்கலைத் துறையும் உருவாக்கப்பட்டு, விவசாயிகளுக்கு இப்பயிர்களுக்கான நுணுக்க உதவியும், மற்றும் அவற்றைச் செயலாற்றுவதற்கான இதர உதவிகளும் இன்று

**“ஏழை நடுத்தர விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அளித்துள்ள பல்வேறு திட்டங்கள், வேளாண் பெருங்குடி மக்கட்கு வரப்பிரசாதமாகும்.”**

பெருமளவில் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விதம் புதிய துறைகள் மற்றும் துறைகளின் செயலாற்றலிலே புதிய நடைமுறைகள் எனக் கொண்டு வந்ததுடன் கூட, நுணுக்கப் பரிந்துரைகளைக்கழனிகளிலே செயலாற்றிக் காண்பித்திட, விளக்கப் பண்ணைகள் அமைத்திடவும், தமிழக அரசு பணித்துள்ளது. அதிக உற்பத்தி, அதிக லாபம், அதிக வளம் என்றழைக்கப்படும் விளக்கப்பண்ணைகள் ஆண்டுக்கு 198 இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. மற்றும் குக்கிராமங்களில் ஒரு எக்டேர் விளக்கத் திடல்கள் 32,000 அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பயறு உற்பத்தியிலே புதியதொரு எழுச்சி ஏற்படுத்துவதற்காக மைய அரசு உதவியுடன் ஆண்டுக்கு 5040 ஏக்கரில் விளக்கப்பண்ணை அமைத்திட ரூ.13.75 லட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது. அதிக அளவில் பரவியிராத மக்காச் சோளத்திற்குக் கூட, ஆதிவாசிகள், ஆதி திராவிடர் ஆகியவர்களுக்காக, விளக்கப் பண்ணைகள் அமைத்திடவும் தமிழக அரசு தொகை வழங்கியுள்ளது.

விளக்கப் பண்ணைகள் அளிக்கும் பயிற்சியுடன் கூட, விவசாயிகளுக்கும் நேரடியாகப் பயிற்சியளிக்கத் தமிழக அரசு 12 மாவட்டங்களில் ஆண்டுக்கு ரூ.6.95 லட்சம் செலவில் உழவர் பயிற்சி நிலையங்களையும் நடத்தி வருகிறது. தினமும் ரூ.7.50 வீதம் உதவிப்பணம் கொடுத்து 34,500 விவசாயிகளுக்குத் தனித்த பயிற்சியும் இந்த நிலையங்கள் வழங்கி வருகின்றன.

பெண்களின் வளர்ச்சிக்காக, இந்த ஆண்டில் டென்மார்க் நாட்டு அரசு உதவியுடன் கூட, ரூ.3.2 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டுப் பெண்களுக்கான வேளாண் பயிற்சி அளிக்கும் திட்டமும் துவக்கப்பட்டுள்ளது. இது தவிர, விவசாயிகளின் பிள்ளைகளுக்குப் பயிற்சியளிக்க, மாதம் ஒன்றிற்கு ரூ.100 உதவித் தொகை கொடுத்து, 12 மாவட்டங்களில் 300 பேர்களுக்குத் தமிழக அரசு ஓர் ஆண்டுப் பயிற்சி அளித்து வருகிறது.

உற்பத்திக்கு, நுணுக்கமும் பயிற்சியும் மட்டும் போதா. எந்தெந்த இடு பொருட்களுக்கு எத்தகைய உதவிகள் தேவை என்பதைத் தமிழக அரசு ஆழ்ந்து ஆராய்ந்து, இடுபொருள்களைத் தந்து, மேலும் பல்வேறு உதவிகளையும், தமிழக விவசாயிகளுக்கு உதவி வருகிறது.

இந்த ஆண்டில் வறட்சியின் கடுமையினால், சிறு, குறு விவசாயிகளிடம் பண வசதி இராது என்பதைத் தமிழக அரசு உணர்ந்துள்ளது; எனவே, இச்சிறு, குறு விவசாயிகளும் சாகுபடி செய்திட, விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவை பெறுவதற்காக, தமிழக அரசு ரூ.420 இலட்சம் அளவிற்கு இடுபொருட்கள் வழங்கி வருகிறது. மேலும் காலாகாலமாக அவதியுறும் ஆதித்திராவிடர்களுக்காக, தனித்ததொரு திட்டத்தின் கீழ் நிரந்தரமாக வசதி கிடைக்க 25% மானிய உதவியில், விதை மற்றும் பூச்சி மருந்துகள் வழங்கிட ரூ.39 லட்சம் தமிழக அரசு அனுமதித்துள்ளது. இருப்பினும், திடீரென்று பூச்சி நோய்கள் நெற்பயிரைத் தாக்கினால், உடனடியாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகத் தேவையைப் பொறுத்து, 50 சதவீத மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்கிடவும் தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. பூச்சிகள் பயிர்களை அழிக்காமலிருக்க கண்காணிப்புத் திட்டத்தைச் செயலாற்றி வருகிறது; அத்துடன், குறைந்த விலையில் வழங்கும் ஒட்டுண்ணிப் பூச்சிகள் வளர்ப்புத் திட்டத்தைத் தமிழகத்தில் ஆண்டுக்கு ரூ.2.20 லட்சம் செலவில் தமிழக அரசு நடத்தி வருகிறது. இதன் மூலம் கரும்பில் இடைக்கணுப்புழு, தென்னையில் கருந்தலைப்புழு எனபவை ஒரு கட்டுக்குள் அடைக்கப்படுகின்றன. இது தவிர, கரும்பில் இளம் தண்டுப் புழு, பருத்திக் காய்ப்புழுக்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் உயிர் எதிரிகள் வளர்க்கும் திட்டம் ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டு வருகிறது; கூடிய விரைவில், இந்த உயிர் எதிரிகளையும் கொண்டு பயிரைக் காத்திடும் திட்டம் உருவாக்கப்படும் என்பதை இது சமயம் தெரிவித்துக் கொள்கிறேன்.



பயிரை நலிவடையச் செய்யாமலிருக்க இரசாயன களைக்கொல்லிகளை இன்று பரவச் செய்ய, தமிழக அரசு 50% மானிய விலையில் வழங்கிடுவதற்காக ரூ.4.75 லட்சம் அனுமதித்துள்ளது.

பயிரை வளர்க்க, உரங்களின் பங்கு மிகவும் அதிகம். செயற்கை உரங்கள் தங்குதடையின்றி இன்று தமிழகத்தில் கிடைக்கின்றன. நெல், கரும்பு, பருத்தி போன்ற பலப்பல பயிர்களுக்கும் பரிந்துரைகளின்படி, உரமிட்டு நல்ல விளைச்சலைப் பெற்று, பஞ்சாப் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, தமிழகம் இடம் பெற்றுள்ளதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனுடன் நெற்பயிருக்கு மிகவும் தேவைப்படும் நான்காவது சத்தான துத்தநாக சல்பேட் உரமிடும் பழக்கமும் வெகுவாகப் பரவியுள்ளது. மேலும் பல்வேறு பயிர்களின் நுண் உரச்சத்துக்களை, குடுமியான் மலையில் தயாரித்து ஆண்டிற்கு 1000 டன் என்ற அளவில் தமிழக அரசு வழங்கி வருகிறது.

மண்ணைப் பரிசோதித்து மண்ணுக்கும் பயிருக்கும் ஏற்ப உரமிட்டுக் கூடுதல் வருவாய் பெருக்கும் நோக்கோடு 15 மாவட்டங்களில் ஏற்கனவே உள்ள மண் பரிசோதனை நிலையங்களைத் தவிர, பெரிய ஊர்திகளில் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களை அமைத்து, இன்று கிராமத்திற்குச் சென்று பணி செய்திட தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மிகக் குறைந்த செலவில் விண்ணிலிருந்து நைட்ரஜன் சத்தைப் பெற்றுப் பயிர்களுக்கு அளிப்பதற்காக, ரைசோபியம், அசோஸ்பைரில்லம், நீலப்பச்சைப் பாசி, அசோலா என்ற

நுண்ணுயிர்களையும் தமிழக அரசு தயாரித்து வழங்கி வருகிறது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இத்தேவைகளுக்காக ரூ.7.33 லட்சம் செலவில இராமநாதபுரத்தில் புதியதாக நுண்ணுயிர் தயாரிப்பு நிலையத்தையும் தமிழக அரசு நிறுவியுள்ளது. ஏற்கனவே கடலூரில் உள்ள நுண்ணுயிர் நிலையமும், இராமநாதபுரத்தில் நிறுவியுள்ள நுண்ணுயிர் நிலையமும் சேர்ந்து, இன்றைக்கு 15 லட்சம் நுண்ணுயிர் பொட்டலங்களும், 2500 டன் நீலப்பசசைப் பாசியும் வினியோகித்து வருகின்றன.

இருப்பினும், துவரையைப் பொறுத்த மட்டில், உரமிடும் பழக்கம் சரியான அளவில் இல்லாததால், ரூ.10.076 இலட்சம் செலவில் துவரைக்கு எனத் தனித் திட்டத்தை இந்த ஆண்டு, தமிழக அரசு நிறைவேற்றத் துவங்கியுள்ளது. துவரைக்கு உரம், பூச்சி மருந்து ஆகியவை 25 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும். நிலத்தடி நீர் வளம் குறைந்துள்ள நிலையில், உள்ள நீரில் உயர்ந்த வருவாய் பெற்றிட, சொட்டு நீர்ப்பாசன முறையாலும், தெளிப்பு நீர்ப்பாசன முறையாலும் தமிழகம் முழுவதும் உள்ள சிறு உழவர்களும் பயன்படத்தக்க வகையில் வேளாண்மைத் துறை மூலம் ரூ.7.5 இலட்சமும், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ரூ.20 இலட்சமும் மானியமாக வழங்கிட, தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதுதவிர, மைய அரசின் உதவியுடன், கோவை மாவட்டத்திலும், அண்ணா மாவட்டத்திலும் சொட்டுநீர்ப் பாசனத்தை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் முறைப்படுத்திட ரூ.95 இலட்சம் நிதியும், தேசிய எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சொட்டு நீர் மற்றும் சுழல் நீர்ப்பாசன முறைகளைச் செயல்படுத்த ரூ.35 இலட்சம் நிதியும் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.30 கோடி முதலீடு செய்யும் ஒரு மாபெரும் திட்டமும் அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாசனக் குளங்கள் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் இருப்பினும், பயன்பெறும் நிலங்களைச் சீராக்கவும், சாகுபடி செய்திடவும், ஐரோப்பிய பொருளாதாரக் குழு உதவியுடன் கூட ரூ.87.71 இலட்சம் சென்ற ஆண்டில் வழங்கியது போல் இந்த ஆண்டும் அத்திட்டம் அமல் செய்யப்படும். பாசன நிலங்களில் களர் என்ற மண் கோளாறு இருந்தால், இந்த நிலங்களை ஜிப்சம் இட்டுச் சீராக்கிட, ஜிப்சத்தின் விலையில் 50% மானியம் வழங்கிட, சென்ற ஆண்டு ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது போல் இந்த ஆண்டும் அத்திட்டம் செயலாற்றப்படும்.



மண் அரிப்பைத் தடுத்து, மழை நீரைச் சேமிக்கும் மானாவாரிப் பகுதிகளில் அதிக வருவாய் பெறும் நோக்கத்தோடு அருப்புக்கோட்டையில் தனித்ததொரு ஆராய்ச்சி நிலையத்தையே தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. மேலும், மானாவாரியில் புதிய விதைப்புக் கருவி வழங்கிட, பாதி விலையில் வினியோகிப்பதற்காக சென்ற ஆண்டு ரூ.12 இலட்சம் வழங்கியுள்ளது.

மரங்களை வளர்த்து உபரி வருவாயும் மற்றும் இதரப் பயன்களையும் பெறுவதற்காக, ஸ்வீடன் நாட்டு உதவியுடன் கூட, ஒரு பெருந்திட்டம் செயலாற்றப்பட்டு வருகிறது. எனினும், வறட்சிக்குக் காப்பாக, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், தமிழக அரசு ரூ.11.25இலட்சம் அனுமதியளித்து மரக்கன்றுகளை இலவசமாகத் தருகின்றது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் வரும் ஆண்டில் இதற்கென்று தனித்திட்டம் செயல்பட இருக்கிறது.

தஞ்சைத் தரணியில் உள்ள விவசாயிகளுக்குக் கொள்முதல் செய்யும் போது பிற இடங்களில் கிடைக்கும் விலை கிடைக்காது என்பதையும் கண்ணுற்று, அரசு கொள்முதல் செய்யும் ஒவ்வொரு குவிண்டால் நெல்லுக்கும் ரூ.35 மானிய உதவியை அளித்து வருகிறது. இதற்காக, ஆண்டிற்குச் சுமார் ரூ.20 கோடி வழங்கி வருகிறது. அதனைப் போலவே, நீண்ட நாள் வயதுடைய கரும்பிற்கும் தக்க விலை கிடைக்க தமிழக அரசு இவ்வாண்டு டன்னுக்கு 8.5% சர்க்கரைச்சத்து அடிப்படையில் ரூ.210 என நிர்ணயம் செய்துள்ளது. மற்றும் எல்லா விளைபொருட்களுக்கும் நல்ல விலை கிடைக்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும் சிறப்பாக நடத்தி வருகிறது. சென்ற ஆண்டில் பயறுகளுக்காக, பருப்பு ஆலை ஒன்றைத்துடியலூரில் நிறுவிட அரசு ரூ.6.89 இலட்சம் மானியம் அளித்துள்ளது. இதன் மூலம் பயறு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும்.

இவ்விதமாகத்தமிழகம் சீரும் சிறப்புமாக வளர்ந்திட, தமிழக அரசு ஒவ்வொரு பயிரின் தேவையையும் ஆய்ந்து, சிறு, குறு விவசாயிகளின் நலனையும் கவனித்து, இப்படிப் பலப்பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. நுணுக்க உதவி, மானிய உதவி, இடுபொருட்கள் வழங்குதல் எனப் பலப்பல வழிமுறைகளின் மூலம் தமிழக அரசு விவசாயிகளின் நலனை மேம்படுத்தி வருகிறது. அதற்கு ஏற்ப, தமிழக விவசாயிகளும் பெரும் ஆதரவு தந்து வருகின்றனர்.

ஏழை, நடுத்தர விவசாயிகள் பயன் பெறும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் அளித்துள்ள பல்வேறு திட்டங்கள் தமிழக வேளாண்பெருங்குடி மக்கட்கு ஒரு வரப்பிரசாதமாகும். மேலும், இத்திட்டங்களைப் பயன்படுத்திப் பெரும் பயன் பெறத் தமிழக விவசாய மக்களை வாழ்த்துகிறேன்.

வணக்கம்.

**(2-11-87 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை)**




# பயண அனுபவம் அறிவை வளர்க்கும்

மாணவ மணிகளின் பேச்சுத் திறமையை வெளிப்படுத்தும் போட்டி ஒன்று அண்மையில் நடந்தது.

ஏர் இந்தியா நிறுவனம், ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ், தினத்தந்தி மற்றும் தினமணி ஆகிய நாளிதழ்களுடன் இணைந்து நடத்திய பேச்சுப் போட்டி 4.11.87 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் நடந்தது. பேச்சுப் போட்டியின் தலைப்பு: 'பயண அனுபவம் அறிவை வளர்க்கும்'.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பரிசுகளை வழங்கியதோடு, தமது சொந்தப் பொறுப்பில் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 5,000 அன்பளிப்பாக வழங்கினார். அமெரிக்கா சென்று தாயகம் திரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன் முதலில் கலந்து கொண்ட நிகழ்ச்சி இது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழில் நடந்த இந்தப் பேச்சுப் போட்டியில், ஆறுபேர் கலந்து கொண்டனர். இவர்களில் நால்வர் மாணவியர். இருவர் மாணவர்கள். பரிசு பெற்றவர்கள் விவரம் வருமாறு:

முதற்பரிசு: பி.அழகாம்பிகை, ஒட்டன்சத்திரம், அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி; அண்ணா மாவட்டம்.

இரண்டாம் பரிசு: ஆர்.கீதா, முருக தனுஷ்கோடி மேல்நிலைப் பள்ளி, சென்னை.

மூன்றாம் பரிசு: வி.கிரீஷ் நாராயணசாமி, என்.எஸ்.எம்.வி.பி. எஸ்.மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

நான்காம் பரிசு: என்.மினு, செவன்த்டே அட்வெண்டிஸ்ட் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை மாவட்டம்.

ஐந்தாம் பரிசு: ஆர்.ரகு, பாரதி உயர்நிலைப்பள்ளி, ரெட்டிப் பட்டி, சேலம் மாவட்டம்.

ஆறாம் பரிசு: எம்.எஸ். ரம்யா தேவி, கிருஷ்ணசாமி முதலியார் மேல்நிலைப்பள்ளி, வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம்.

முதல்பரிசு பெற்றவர், சென்னையிலிருந்து அமெரிக்காவுக்கு விமானத்தில் சென்று வரவும், ஆர்லாண்டில் நான்கு நாட்கள் ஓட்டல் வசதியுடன் தங்கவும், டிஸ்னி லேண்டு, எப்கோட் சென்டர் ஆகியவற்றை மூன்று நாட்கள் சுற்றிப் பார்க்கவும் வசதி செய்யப்படும். மாணவியுடன் தாய் அல்லது தந்தை அல்லது ஆசிரியர் இலவசமாகச் செல்லலாம்.

இரண்டாம் பரிசு பெற்றவர், சென்னையிலிருந்து பம்பாய் மற்றும் டெல்லி சென்று வரலாம். அவருடன் பள்ளி முதல்வர், அல்லது தலைமையாசிரியர் இலவசமாகச் செல்லலாம்.

மூன்றாவது பரிசு பெற்றவர், சென்னையிலிருந்து பம்பாய்க்கு இலவசமாகச் சென்று வரலாம். அவருடன் பள்ளி ஆசிரியரும் இலவசமாகச் செல்லலாம்.

தொடக்கத்தில், மாணவிகள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்து ஆரத்தி எடுத்து உற்சாகத்துடன் வரவேற்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடைக்கு வந்ததும் மக்கள் பலத்த கரவொலி எழுப்பித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். பரிசு பெற்ற மாணவர்களைத் தட்டிக் கொடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது பாராட்டைத் தெரிவித்தார். முதற் பரிசு பெற்ற மாணவிக்கு ஆட்டோகிராபில் 'அண்ணா நாமம் வாழ்க' என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

பரிசு பெற்ற மாணவ, மாணவியர் நன்றி தெரிவித்துப் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்பியல்புகளைப் புகழ்ந்தார்கள்.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.சி. பொன்னையன் அவர்கள் பேசுகையில், ''கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்ட போட்டியை ஆங்கிலத்தில் நடத்தினார்கள். அந்தப் பரிசளிப்பு விழாவுக்கு நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி ஆர் அவர்கள் வந்திருந்தார். அப்போது 'அடுத்த ஆண்டு தமிழிலும் பேச்சுப் போட்டி நடத்தினால் சிறப்பாக அமையும்' என்று கூறினார். அதனை ஏற்று ஏர் இந்தியா நிறுவனம் இந்த ஆண்டு கிட்டத்தட்ட 4 ஆயிரம் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளை அறிவுப் பரிசோதனை செய்து, இந்தப் பேச்சுப் போட்டியை நடத்தி உள்ளது'' என்று கூறினார்.

விழாவில், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு கே.கோபாலன், ஏர் இந்தியா நிறுவனத்தின் தென்னிந்திய மேலாளர் திரு பி.ஆர். சத்தியநாராயணராவ் ஆகியோர் மாணவ மணிகளைப் பாராட்டிப் பேசினர்.

இந்தப் பேச்சுப் போட்டிக்கு நீதிபதி திரு ஆர்.செங்கோட்டுவேலன், அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர், திரு வி.சி. குழந்தைசாமி, சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு ஜி. சுப்பிரமணியன், எழுத்தாளர் திருமதி சிவசங்கரி, பரத நாட்டியக் கலைஞர் செல்வி டாக்டர் பத்மா சுப்பிரமணியம் ஆகியோர் நடுவர்களாக இருந்தனர்.

தொடக்கத்தில், ஏர் இந்தியா நிறுவன விற்பனைப் பிரிவு மேலாளர் திரு கே.சிவராமன் அனைவரையும் வரவேற்றார். திரு எஸ். எம். மஜருல்லா நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

# விடுதலை தேடித் தந்த விடிவெள்ளி



இந்தியா அடிமை நீக்கி
    இணையிலா அமைச்சர் ஆனாய்
வந்தனைக் குரிய காந்தி
    வாரிசாய் தலைமை பூண்டாய்
இந்தமா உலக மெல்லாம்
    இசைந்திட இனிதே ஆண்டாய்
உந்தனின் நாமம் இந்த
    உலகிடை உயரச் செய்தாய்

செல்வத்தின் சிறப்பில் தோன்றி
    தேசமே பெரிதென் றெண்ணி
சொல்லொணாத் தியாகம் செய்து
    சுதந்திரம் ஈட்டித் தந்தாய்
கல்வியில் மிக்கத் தேர்ந்து
    காலத்தைக் கணித்து வென்றாய்
வல்லதோர் தலைவன் ஆனாய்
    வான்புகழ் வாரிக் கொண்டாய்

பலகோடி பிறப்பி னூடே
    பாரினில் உயர்ந்து நின்றாய்
உலவிய அயலார் ஆட்சி
    ஒழிந்திடத் தொண்டு செய்தாய்
உலகெலாம் போற்றும் காந்திக்(கு)
    உண்மையாம் வாரி சானாய்
தலைமையாய் இந்தி யாவில்
    தனிமுடி தரித்தே ஆண்டாய்

புலவர் சீ. துரைசுவாமி

பாரத சுதந்தி ரத்தைப்
    பாருளோர் துதிக்கச் செய்து
வீரமாய் நாடு போற்ற
    விவேகத்தில் ஆட்சி செய்தே
கோரமாம் இன்னல் போக்கி
    கொஞ்சிடும் வளங்கள் சேர்த்தாய்!
பாரெலாம் போற்றப் பெற்ற
    பண்புள்ள தலைவா வாழி!

விண்ணிலே ஆதவன் பூத்து
    விளங்கிடும் ஒளியாய், ஞால
மண்ணிலே மோதி லாலின்
    மகவென வந்தே தோன்றி
எண்ணிய சுதந்தி ரத்தை
    இந்தியா பெறவும் ஆற்றி
விண்புகழ் படைத்த நேரு
    வேதம்போல் விளங்க நன்றே!

அடிமைகொள் ஆங்கி லேயர்
    ஆட்சியை அறவே போக்க
விடிவெள்ளி போலத் தோன்றி
    விடுதலை தேடித் தந்தாய்!
முடிசூடா மன்னன் ஆனாய்!
    முழுமதி எனவே தோன்றி
குடிமக்கள் போற்ற வாழ்ந்த
    குணக்குன்றே நின்பெயர் வாழ்க!




# மக்கள் திருவிழா

**பா. சாந்தலிங்கம், கூடுதல் பதிவாளர், தனி அதிகாரி**
**தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்**

மக்கள் இயக்கமாம் கூட்டுறவு இயக்கம் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகளை, இவ்வியக்கத்தில் இணைந்துள்ளோர் அடைந்து வரும் நன்மைகளை, இவ்வியக்கம் ஏற்படுத்தியுள்ள சாதனைகளை ஒவ்வொருவருக்கும் எடுத்துக் கூறி மேலும் பலரைக் கூட்டுறவு இயக்கத்தில் இணைந்து நன்மை பெறத் தூண்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் கூட்டுறவு வார விழா நவம்பர் 15 முதல் 21 வரை கொண்டாடப்பட்டு வருகிறது.

உலக அளவில் கூட்டுறவு நாள் கொண்டாடும் எண்ணம் 1920-லேயே உதித்தது. அகில உலகக் கூட்டுறவு அமைப்பு, உள்நாடு மற்றும் உலக அளவில் ஏற்படும் மோதல்களால் கூட்டுறவு இயக்கம் பாதிக்கப்படாமல் இருக்கவும், அகில உலகக் கூட்டுறவு அமைப்பின் ஒற்றுமையைப் பலப்படுத்தவும் செயல் முறைகளைத் தேடிக் கொண்டிருந்தது 1922இல் மிலான் என்ற இடத்தில் கூடி இதன் பொதுக் குழு "கூட்டுறவாளர் நாள்" கொண்டாட வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொண்டது. அதன்படி முதலாவது அகில உலகக் கூட்டுறவு நாள் 1923-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் ஏழாம் நாள் கொண்டாடப்பட்டது. இப்பொழுதும் அகில உலகக் கூட்டுறவு நாள் ஒவ்வோர் ஆண்டின் ஜூலைத் திங்கள் முதல் சனிக்கிழமையன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

## உலக அரங்கில் கூட்டுறவு

கூட்டுறவு இயக்கத்திற்கு வித்துக்களை முதன் முதலில் ஊன்றியோர் 'ராக்டேல் முன்னோடிகள்' எனப்படும் 28 நெசவுத் தொழிலாளிகள்தான். 1844-ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள லங்காஷயரில் டோட்லேன் என்னுமிடத்தில் துவக்கப்பட்ட கூட்டுறவுப் பண்டக சாலையே முதல் கூட்டுறவு முயற்சியாக அமைந்தது. கூட்டுறவு என்றும், எப்போதும் இன்றியாமையின் குழந்தையாகவே வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி காரணமாக ஏழைத்தொழிலாளத் தோழர்கள் சுரண்டப்பட்டார்கள். அதுவே நுகர்வோர் கூட்டுறவுக்கும் பாதை அமைத்துக் கொடுத்தது. ஜெர்மனியில் ஏழை உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும், லேவாதேவிக்காரர்களால் சுரண்டப்பட்டபோது கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. டென்மார்க் நாட்டு கிராமப்புறக் குடியானவர்கள் தானிய உற்பத்தியைக் கைவிட்டு விடுமளவு அமெரிக்க நாட்டினின்று இறக்குமதி தானியத்தைக் குவித்து அச்சுறுத்தியபோது அவர்கள் பால் பண்ணைத் தொழிலில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டு வெற்றி கொள்ளக் கூட்டுறவுப் பால்பண்ணைகள் வழி காட்டின. கனடா நாட்டின் அபரிமிதமான உற்பத்தி கூட்டுறவு விற்பனையில் முழுக் கவனம் செலுத்திட அடிப்படையாக இருந்தது. இத்தகைய இன்றியமையாமை என்ற காரணத்தால் மகிழ்ந்து வளர்ந்த கூட்டுறவுக் குழந்தை இன்றைய உலகில் ஆல்போல் பரந்து வேரூன்றி உள்ளது. இன்று உலகில் 50 கோடி உறுப்பினர்களைக் கொண்டு 7,40,656 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருவது இத்தத்துவத்தின் வெற்றிக்கும், அதனால் பயன் பெறும் மக்களின் ஆர்வத்திற்கும் சான்றாக விளங்குகிறது.

## இந்திய நிலை

அந்நிய நாடுகளினின்று கடல் கடந்து இந்தியத் திருநாட்டிற்கு வந்த இவ்வியக்கம் 1904-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 83 ஆண்டுகளாக நமது நாட்டில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இக்காலக் கட்டத்தில் இவ்வியக்கம் இந்நாட்டின் சமூகப் பொருளாதார மாற்றத்துக்கான சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உலக அளவிலேயே இந்தியக் கூட்டுறவு இயக்கம் தான் மிகப் பெரும் இயக்கமாக இயங்கி வருகின்றது. இந்தியக் கூட்டுறவு இயக்கத்தில் மட்டும் 3.5 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்களில் 14 கோடி உறுப்பினர்கள் பங்கு பெற்றும் பயனடைந்தும் வருகிறார்கள். இவ்வியக்கம் ஆரம்ப காலத்துல் உழவர்களுக்கு விவசாய உற்பத்திக்காகவும், கடன் தொல்லைகளில் இருந்து விடுவிக்கக் கடன் வழங்குவதற்காகவும் துவக்கப்பட்டாலும், கடந்த 25 ஆண்டுகளில் இதன் செயல்திறன் பல்வேறு துறைகளிலும் பரவி விட்டதனை அறியலாம். மிகப் பெரும் கூட்டுறவு ஆலைகள் பதனிடவும், உற்பத்திப் பொருட்களைச் செய்திடவும் அமைக்கப்பட்டது. அவற்றில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் கூட்டுறவு உரத் தொழிற் சாலைகள் போன்றவைகள் முக்கியமானவைகளாகும். தமிழ்நாட்டில் 30036 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

## மக்கள் திருவிழா

எண்பத்தி மூன்று வயதாகும் இந்தியக் கூட்டுறவியக்கம் இந்த நாட்டில் வாழும் பல்வேறு பிரிவினருக்கு ஆற்றியுள்ள அரும் பணி கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு கோணத்தில் பார்த்தால் இந்தக் கூட்டுறவு வார விழாவென்பது இதனைக் கட்டிக் காத்த, இன்னும் காத்து வருகின்ற கூட்டுறவாளர்களுக்கு இவ்வியக்கத்தால் பயனடைந்தோர் செலுத்துகின்ற நன்றி விழா என்று கூடச் சொல்லலாம். இன்னொரு கோணத்தில் இவ்வியக்கத்தை எதிர்காலத்தில் சிறப்புற நடத்திச் செல்ல இளைய தலைமுறையினருக்கு வேண்டுகோள் விடுக்கும் விழா என்று கூடச் சொல்லலாம். எப்படிப் பார்த்தாலும் இது மக்களின் நலனுக்காக மக்களே நடத்தும் மக்கள் திருவிழா என்பதே உண்மை.

# வளமான வாழ்வுக்கு
# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
## அளிக்கும்



# விஜய்
உரங்கள்

# 14-28-14




# டி.ஏ.பி




# யூரியா




உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப் பெற தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களும் தேவை. மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள். மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். மண் பரிசோதனை செய்ய இயலாவிடில் பொது சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

இறவை நிலக்கடலை — ஏக்கருக்கு/கிலோ

| அடியுரம் | | |
|---|---|---|
| விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| 50 | — | 25 |
| அல்லது | | |
| விஜய் டி.ஏ.பி. | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| 30 | 5 | 35 |

## சமச்சீர் உரமிட
# விஜய்



MFL-2060 R

மேலும் விவரங்களுக்கு :
வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

**மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்**
இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600068



# சரிதம் படைக்கும் சர்க்கரைத் தொழில்

வேளாண்மையை மையமாகக் கொண்ட கிராமியச் சூழ்நிலையே சர்க்கரை ஆலைகள் உருவாக ஒரு முதன்மையான அம்சமாகும். சர்க்கரைத் தொழில் ஊரக வளர்ச்சி மேம்பாட்டுக்குப் பெரிதும் உறுதுணையாக உள்ளது. தமிழகத்தில் விவசாயம் மற்றும் கைத்தறித் தொழிலுக்குப் பின், சர்க்கரைத் தொழில் ஒருமுக்கிய இடத்தைப் பெறுகிறது. சர்க்கரைத் தொழிலில் பல மேம்பாடுகளைப் புகுத்தியதன் விளைவாகத் தமிழகத்தில் இத்தொழில் சிறப்புற்று விளங்குகிறது.

1947-48-ஆம் ஆண்டில் தமிழகத்தில் மூன்று சர்க்கரை ஆலைகளே இயங்கி வந்தன. இவற்றின் பிழிவுத்திறன் நாளொன்றுக்கு 3,000 டன்களுக்குக் குறைவாக இருந்துள்ளது. ஐந்தாண்டுத் திட்டப் பணிகளின் விளைவாக இம்மாநிலத்தில் மேலும் பல சர்க்கரை ஆலைகள் உருவாயின. முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் கால ஆரம்பத்தில் நான்கு சர்க்கரை ஆலைகள் இயங்கி வந்தன. 1969-70-ஆம் ஆண்டில் இவை 16 சர்க்கரை ஆலைகளாகப் பெருகியுள்ளன. இவற்றில் கூட்டுறவுத் துறையில் 6 ஆலைகள் இயங்கி வந்தன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் மொத்தப் பிழிதிறன் நாளொன்றுக்கு 8450 டன்களாகும். அவ்வாண்டில் இம்மாநிலத்திலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளும் 36.56 இலட்சம் டன்கள் கரும்பினை அரவை செய்து, 7.87 சதவீத சர்க்கரைக் கட்டுமானத்தில் 2.88 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன. இவ்வாண்டில்தான் சர்க்கரைத் தொழிலுக்கு என்று தனியான ஒரு துறை ஒதுக்கீடு செய்யப்பட்டு, அது சர்க்க்ரைத் துறை இயக்க்மாக இயங்கி வருகிறது.

சர்க்கரை இயக்ககம் ஆரம்பித்து 10 ஆண்டுகளில்-அதாவது 1979-80 இல்-சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்தது. இவற்றில் 10 ஆலைகள் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவை. மாநிலத்தின் சர்க்கரை ஆலைகளின் மொத்தப் பிழிதிறன் நாளொன்றுக்கு 41.350 டன்களில் 16950


**ச. மெய்கண்டதேவன் இ.ஆ.ப**


**இயக்குநர், சர்க்கரைத்துறை.**


டன்கள் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தது. தற்போது கூட்டுறவு துறையில் 12 சர்க்கரை ஆலைகளும், பொதுத்துறையில் 3 ஆலைகளும் மற்றும் தனியார் துறையில் 10 ஆலைகளும் ஆக மொத்தம் 25 சர்க்கரை ஆலைகள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இவற்றின் நாளொன்றைய பிழிதிறன் 47650 டன்களாகும். இதில் கூட்டுறவு ஆலைகளின் பிழிதிறன் 20200 டன்களாகும். 1985-86-ஆம் ஆண்டில் தமிழகத்தில் 84.91 இலட்சம் கரும்பு அரவை செய்து 8.11 இலட்சம் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இதில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 35.91 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்து 3.49 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் சர்க்கரை உற்பத்தி மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தியில் 43 விழுக்காடு ஆகும். மேலும் இது நாட்டின் உற்பத்தியில் சுமார் 5 விழுக்காடாகும். 1986-87 சர்க்கரைப் பருவத்தில் அனைத்து ஆலைகளும் 85.2 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்துள்ளன. இதில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு சுமார் 49.61 விழுக்காடாகும்.

தமிழகத்தில் கரும்பு 1.80 இலட்சம் எக்டேர்களில் பயிரிடப்பட்டு, ஆண்டொன்றுக்கு 190 இலட்சம் டன்கள் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் ஒரு எக்டேருக்கு அதிகப்படியான கரும்பு மகசூல் செய்யப்படுகிறது. தமிழகத்தில் உற்பத்தியாகும் கரும்பில் ஏறக்குறைய 50 விழுக்காடு சர்க்கரை ஆலைகளால் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் பதிவு செய்த கரும்பின் மொத்தப் பரப்பில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், 45 முதல் 48 விழுக்காடு வரை பதிவு செய்துள்ளதோடு, ஆண்டுதோறும், இவற்றின் அளவையும் அதிகரித்துள்ளது.

தமிழகத்திலுள்ள சர்க்கரை உற்பத்தி ஒரு நிலையான அளவாக இருந்து வருகிறது. 1969-70ஆம் ஆண்டில் 7.87 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானமாக இருந்தது. 1979-80-ஆம் ஆண்டில் 9 சதவிகிதமாகவும், 1986-87-ஆம் ஆண்டில் 9.40 சதவிகிதமாகவும்



**சர்க்கரை மனித சமுதாயத்தில் சிலருக்குத் தேவைப்படாதிருக்கலாம்! ஆனால் சர்க்கரைத் தயாரிப்புத் தொழிலில் தமிழகம் தனிச் சரிதம் படைத்துவரும் செய்தி அனைவருக்கும் விருப்பமானதுதானே!**

உயர்ந்துள்ளது, குறிப்பிடத் தக்க அம்சமாகும். இதில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானம் வியத்தகு முறையில் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. 1969-70ஆம் ஆண்டில் சர்க்கரைக் கட்டுமானம் 7.99% இருந்தது. 1979-80ஆம் ஆண்டில் 9.40 சதவீதமாகவும், 1986-87-ஆம் ஆண்டில் 9.86 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் கரும்பு வளர்ச்சி முயற்சியில் புதிய முறைகளைப் புகுத்தியும், உயர் தரச் சர்க்கரைக் கட்டுமானக் கரும்புப் பயிர்களை உருவாக்கிய தன் மூலமாகவும் சர்க்கரைக் கட்டுமானம் அதிகரித்துள்ளது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அதன் திட்ட மூலதனச் செலவுகளைச் சரிக்கட்ட அதன் அங்கத்தினர்களான கரும்புச் சாகுபடியாளர்களிடமிருந்தும், அரசிடமிருந்தும் பங்கு முதலீட்டைப் பெறுகின்றன. 1985-86-ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகளிலுள்ள மொத்தப்பங்குமூலதனம் ரூ. 3039.47 இலட்சங்களாகும். இதில் 1344.45 இலட்சம் அரசின் பங்கு மூலதனமாகும், ரூபாய் 1695.02 இலட்சம் விவசாய அங்கத்தினர்களின் பங்கு மூலதனமாகும். 1985-86-ஆம் ஆண்டில் அனைத்துக் கூட்டுறவு ஆலைகளும் இலாபத்தை ஈட்டியுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்தில் பல சர்க்கரை ஆலைகள் அமைக்கத் தமிழக அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. மத்திய அரசின் புதிய சர்க்கரைக் கொள்கையின் படி இனி நாளொன்றுக்குக் குறைந்தபட்சம் 2500 டன்கள் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலைகளே அமைக்க இயலும். இம்மாநிலத்தில் ஆறு புதிய சர்க்கரை ஆலைகளை அமைக்க மைய அரசு அனுமதியளித்துள்ளது. இவற்றில் இரண்டு ஆலைகள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் அமைக்கப்படும். இதைத் தவிர ஏற்கெனவே இயங்கிவரும் ஏழு சர்க்கரை, ஆலைகளின் அரவைத் திறனை விரிவாக்கம் செய்ய மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. நான்கு சர்க்கரை ஆலைகளின் விரிவாக்க விண்ணப்பங்கள் மைய-மாநில அரசுகளின் பரிசீலனையில் உள்ளன. மேற்கண்ட உரிமங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இம்மாநிலத்தில் மொத்தக் கரும்புப் பிழிதிறன் நாளொன்றுக்கு 78400 டன்களாக உயரும்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கோ-ஜெனரேஷன் பிளாண்ட் (Co-generation Plant) என்ற இயந்திர சாதனம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்தக் கொதிகலன்களைப் பொருத்தி, தற்போது எரிபொருளாக உபயோகப்படுத்தும் அதே அளவு கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி, மின்சாரம் தயாரித்து, ஆலையின் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, மின்சார வாரியத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு சுமார் ரூ. 10 கோடி ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், நம் நாட்டிலேயே கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலேயே இது ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.




கரும்பு பயிரிடும் நிலத்திலிருந்து சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பை எளிதாகவும், விரைவாகவும் எடுத்துச் செல்லச் சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளை மேம்படுத்தவும், கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம் சர்க்கரைத் துறையின் கீழ் இயங்கி வருகின்றது. சர்க்கரை ஆலைகள், தாம் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கரும்பு மீதான அரசுக்குச் செலுத்தும் மேல்வரி இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று சர்க்கரைத்தொழில் பணியாளர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளிக்கும் பொருட்டு சர்க்கரைத் துறையில் இயங்கி வருகிறது.

சர்க்கரைத் தொழில், கிராமப் பகுதியில் வாழும் பெரும்பாலான மக்களுக்கு நேரடிவேலை வாய்ப்பு வழங்குவதுடன், ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. இதில் தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பெரும் பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# கிராமப்புறங்களில் வீட்டு வசதி!

**கிராமப்புற மக்களும், கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக, வசிப்பதற்குரிய வீடு பெற முடியும் என்பது இங்கே விவரிக்கப்படுகிறது.**

நண்டுக்கும் வளையுண்டு; நரிக்கும் பொந்துண்டு; காட்டுக் குருவிகட்கும் கூடக் கூடுண்டு, இந்த மனித மகன் தலைசாய்க்க ஓர்' இடம் இல்லையே!

—என்றோர் வாசகம் புனித பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்து எனன தெரிகிறது? உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான இந்த வீட்டுப் பிரச்சனை இன்று நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளாய் இருந்து வருகிறதென்று அறிகிறோம் அல்லவா?

இந்தப் பிரச்சனையைத் தீர்க்க மைய அரசும், மாநில அரசும் எத்தனையோ திட்டங்களைத் தீட்டிச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றன. சொந்தத்தில் வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகள் வழங்கும் இந்த முயற்சியில் பொது நல அமைப்புகளின் பங்கும் போற்றத்தக்கதாகும்.

ஐக்கிய நாடுகளின் சபை இந்த 1987-ஆம் • ஆண்டை அகில உலக வீட்டுவசதி ஆண்டாக அறிவித்துள்ளது. இதனையொட்டி அனைத்து நாடுகளிலும் வீட்டுவசதித்திட்டம்இப்பொழுது விரைவுபடுத்தப்படுகிறது - விரிவுபடுத்தப்படுகிறது. இதன் நோக்கம் கி.பி. 2000 அளவில் யாருக்கும் குந்த ஒரு குடிசை இல்லையென்ற அவலநிலை அகில உலகத்திலேயே இருக்கக்கூடாதென்பதாகும்.

**தனி ஒருவனுக்கு உணவில்லை**
**எனில் இந்த**
**ஜகத்தினை அழித்திடுவோம்—**

என்றார் அன்று பாரதியார்.

அது முடியாவிட்டாலும், கி.பி. 2000-க்குள் எந்த ஒரு குடும்பத்திற்கும் வீடில்லை என்றால் இந்த உலகத்தில் வீடு கட்டித்தர இத்தனை அமைப்புகள் இருந்தும்


**மு கிருஷ்ணசாமி**
**தனி அலுவலர்,**
**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம்,**


பயனில்லை என்ற நிலையாவது உருவாக வேண்டும். வானமே கூரையாய், வையகமே மெத்தையாய் நடைபாதையில் படுத்துறங்கும் ஏழை எளிய மக்கள் எல்லார்க்கும் தலைக்குமேல் ஒரு கூரையைக் கட்டாயம் தந்துவிட வேண்டும். ஏற்கெனவே சுகாதாரச் சுற்றுப்புறச் சூழ்நிலை இல்லாமல் ஏதோ பேருக்கு வீடென்று சொல்லிக்கொண்டு உள்ளோர்க்கு அவர்களது சக்திக்கேற்ப இந்தக் குடிசைகள் ஓரளவிற்கு வசதியான - நிரந்தரமான வீடுகளாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.


இதனை நிறைவேற்ற அரசுமட்டுமல்ல, அனைவரும், கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டால் தான் இந்த அரிய பெரிய காரியத்தைக் கி.பி. 2,000 ஆண்டு அளவிலாவது நிறைவேற்ற முடியும். இந்திய மக்கள் தொகையில் 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். அதனால் இந்த வீட்டு வசதிப் பிரச்சனை நகர்ப்புறங்களைவிடக் கிராமப்புறங்களிலேயே அதிகமாக உள்ளது. சரியான வீட்டு வசதியில்லாமல் இன்றளவில் இந்தியா முழுவதுமாக இருக்கின்ற மக்கள் எண்ணிக்கை 210 இலட்சமாகும். அதில் வீடுகள் இல்லாமல் 160 இலட்சம் பேர் கிராமப்புறங்களிலும், 50 இலட்சம் பேர் நகர்ப்புறங்களிலும் இருக்கிறார்கள்.

இந்த மாபெரும் பிரச்சனையைத் தீர்க்கத்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மூன்று ஆண்டுகளில் முப்பது இலட்சம் வீடுகள் என்ற மாபெரும் வீடு கட்டும் திட்டத்தை அறிவித்து, செயலாக்கி வருகிறார்கள். 'எண்ணுவதெல்லாம் உயர்வாக' இருக்க வேண்டும் என்பார் திருவள்ளுவர். அப்படி உயர்ந்த அளவில் பரந்த மனத்துடன் தீட்டப்பட்டிருக்கும் இத்திட்டத்தில் கூட்டுறவின் பங்கு சிறப்பானதாகும். அதுவும் குறிப்பாக, கிராமப்புறங்களில் இந்தக் கூட்டுறவு வீட்டுவசதித் திட்டம் மிக மிகத் தேவையான ஒன்றாகும்.

ஆண்டுதோறும் 40 ஆயிரம் வீடுகள் என்ற அளவில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் கிராமப் புறங்களில் வீடு கட்டக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென்று வட்டம், மற்றும் கோட்ட அளவில் 104 கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்தக் கிராமியச் சங்கங்களுக்குத் தலைமைச் சங்க

மாகத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் நிதிவசதி செய்து தருகின்றது.

தமிழ்நாட்டில் இதுவரை 2,24,000 பேர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்று வீடுகள் கட்டிக் கொண்டுள்ளார்கள். இவர்களில் 1,68,000 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களாவர். அதாவது பயன் பெற்றுள்ளோரில் 75 சதவிகிதப் பேர் இந்த ஏழை எளிய மக்களே. இதுவரைக்கும் இவர்களுக்கு மொத்தத்தில் ரூ. 90 கோடி கடனாகவும், அரசு மானியமாகவும் வழங்கப் பெற்றுள்ளது. இதில் மானியமாக ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை மட்டும் ரூ.13.00 கோடியாகும். குடும்ப வருமானம் மாதத்திற்கு ரூ.700-க்கும் குறைவாக உள்ளவர்களைப் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் என்று சொல்கின்றோம். அவர்களுக்காகத்தான் இந்தக் கிராமிய வீட்டு வசதித் திட்டம் செயல்படுகிறது.



வீடு கட்டக் கடன் பெறுவதற்குச் சிறப்பாக எந்தத் தகுதியும் தேவையில்லை. சொந்தத்தில் இரண்டு செண்ட் அளவிற்கு வீட்டுமனை இருந்தால் போதுமானது. பெரும்பாலோருக்கு அரசே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி வருகிறது. வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்குவதையும், அத்துடன் வீடுகள் கட்டுவதன் முன்னேற்றத்தினையும் இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர்களும், அரசும் கண்காணித்து வருகிறார்கள். கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தற்பொழுது தனி அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு வீட்டு வசதித்துறையில் இந்தத் திட்டத்தை மண்டலத் துணைப் பதிவாளர்களும் மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதிப் பதிவாளரும் கண்காணித்து வருகிறார்கள்.

கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் கடன் பெற்றுக் கட்டப்படும் வீடு 200 சதுர அடி கொண்டதாகும். அதன் மதிப்பீடு ரூ.6000 ஆகும். இதில் 4,500 கடனாக வழங்கப்படுகிறது மீதி ரூ. 1,500 இந்தத் திட்டத்தில் பயன் பெறுவோர் தங்கள் சொந்த நிதியிலிருந்து முதலீடு செய்ய வேண்டும். அதற்கு மேலும் கொஞ்சம் கூடுதலாய் முதலீடு செய்து சற்று வசதியாய் வீடு கட்டிக் கொள்வோரும் உண்டு.

இதற்கு, குறைந்த வட்டியே வசூலிக்கப்படுகிறது. நிலமற்ற விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி 9 சதவிகிதத்துக்கும் குறைவு. மற்றவர்களுக்கு 9.5 சதவிகிதம்தான். இவர்கள் இந்தக் கடன் தொகையை 20 ஆண்டுகளில் 6 மாதத்திற்கு ஒருமுறையாக 40 தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். மாதா மாதம் கடன் தொகையை இவர்கள் திருப்பிச் செலுத்துவது என்றால், மாதம் ரூ. 40. செலுத்தினால் போதும். சிறுகக் கட்டிப் பெருக வாழவேண்டுமென்றஅடிப்படையில் இந்தக் கிராமப்புற வீடுகள், ஆங்காங்கு கிடைக்கும் பனைமரம், ஓடுகள், மண்சாந்து போன்றவற்றைக் கொண்டே கட்டப்படுகின்றன. சிமெண்ட் வெளிப்பூச்சுக்கு மட்டும்தான் பயன்படுகிறது. அப்பொழுது தான் ரூ. 6,000-க்குள் இந்த வீட்டினைக் கட்டி முடிக்க முடியும்.


கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு அகில இந்திய அளவில் டெல்லியிலிருந்து செயல்பட்டு வரும் அட்கோ நிறுவனம் பெருமளவில் கடன் உதவி செய்து வருகிறது. அந்த நிறுவனம் இதுவரை ரூ. 27 கோடி கடனாக வழங்கியுள்ளது. இந்திய ஆயுள் காப்புறுதிக் கழகமும், பொதுக் காப்புறுதிக் கழகங்களும் அரசின் மூலம் இந்தத் திட்டத்திற்குக் கடன்கள் வழங்கி வருகின்றன. ஒவ்வொருவரும் கடனாகப் பெறும் ரூ. 4,500-ல் ரூ3,000-ஐ அட்கோ நிதிநிறுவனம் வழங்குகிறது. ரூ. 1,500 மாநில அரசு தனது நிதியிலிருந்து வழங்குகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தத் திட்டம் ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்கே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டத் தரப்படும் திட்டம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனங்கள் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகளை இலவசமாய்க் கட்டித் தருகின்றன. அதனால், ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்குக் கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் குறைந்த வட்டியில் கடனாக வழங்கி வருகின்றன. வட்ட அளவிலுள்ள இந்தச் சங்கங்களின் தனி அலுவலர்களை அணுகி வீடு கட்டக் கடன் பெறலாம்.

அகில உலக வீட்டு வசதி ஆண்டான 1987இல் நகர்ப்புற மக்கள் மட்டுமல்ல கிராமப்புற மக்களும் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் பயன்பெற வேண்டும்.

# பால் கூட்டுறவில் மகளிர் பங்கு

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, வெற்றிச் சரிதத்தை உருவாக்குவதில் மகளிர்க்கும் பங்கு உண்டு என்னும் அரிய செய்தியை இக்கட்டுரை விளக்கிக் கூறுகிறது.**

'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் நீங்காத செல்வம்' நிறைந்தது நம் நாடு. ஆநிரைகள்பெருஞ் செல்வமாகக் கருதப்படுகின்றன. 'கனைத்திளம் கன்றுக்கு இரங்கி நினைத்து முலை வழியே நின்று பால் சோரும் கற்றெருமைகளும்' தமிழ்நாட்டில் மலிந்திருந்த குறிப்புகளும் நிறைய உண்டு. பெண்களால் பிற கிராமியத் தொழில்களை விடவும் பால் மாடுகள் வளர்ப்பும், பால் விற்பனையும், பால் பொருள்கள் உற்பத்தியும்தாம் மிகப் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. 'ஆய்ச்சியர் மத்தினால் கடையும் தயிரரவம்' ஊர்த் தெருக்களில் எங்கும் கேட்கப்படுகிற ஒன்று. இப்படிப் பரவலாகவும் இருந்து அமைப்பு ரீதியான செயல்பாடின்றிச் சிதறுண்டு கிடந்த இத்தொழில், கூட்டுறவுச் சங்கங்களால் மிகவும் பயனுள்ள இலாபகரமான நடவடிக்கையாக



வளர்ச்சி கண்டுள்ளது. கிராமப்புறத்துப் பெண்களுக்குப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் புதுப்பொலிவையும் தொடர்ந்த வருவாயையும் அளித்து ஒரு நம்பிக்கையூற்றாக விளங்குகிறது.

1983-'84-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மகளிருக்கு எனத் தனியான பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் சமூக நலத்துறையின் வழி காட்டுதலுடனும், தாட்கோ நிதி அமைப்பின் ஆலோசனையுடனும் ஆராயப்பட்டது. இதற்கான சரகதுணைப் பதிவாளர் (பால்பதம்)களின் கூட்டம் ஒன்று கூடி, மகளிர்க்கென தனியாக பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தால் அவை நன்கு இயங்க வாய்ப்பு உள்ளதா என ஆராய்ந்து, இச்சங்கங்கள் அமைக்க வாய்ப்பு உள்ள இடங்களில் அமைக்க அறிவுறுத்தப்பட்டது.

இதுவரை தமிழ்நாட்டில் 28 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இந்தச் சங்கங்களில் 1,518 அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் ஆதி திராவிட மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சங்கத்தின் மூலம் கடன் பெற்று வாங்கும் மாடுகளுக்கு மானியம் வழங்க 'தாட்கோ' முன் வந்துள்ளது.

**மதுரையில்**

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டத்திலுள்ள திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது வடபழஞ்சி கிராமம். இக்கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 702 ஆகும். இவர்களில் மகளிர் 339 பேர். இவர்களில் 80 சதவீதம் பேர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விவசாயக் கூலிகள் ஆவர். இக்கிராமத்தில் உபதொழிலாக வேறு கைத்தொழில் ஏதுமில்லை. தனியார் நிலங்களில் கூலிவேலை செய்து, மீதமுள்ள நேரங்களில் எவ்வித வேலையுமின்றி, வருவாயுமின்றி இக்கிராமத்தில் இருந்து வந்தனர். குறிப்பாக மகளிர், வருடத்தில் 6 மாதத்திற்கு மேல் விவசாயக்கூலி வேலை கூடக் கிடைக்காமல் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்து வந்தனர். எனவே இக்கிராமத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் ஏழை, எளியவர்களின் வருவாயை மேன்மைப்படுத்தவும், குறிப்பாக மகளிரின் நலனை முன்னிட்டும் மகளிருக்கென வடபழஞ்சி மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 1-12-'85-ல் செயல்புரியத் துவங்கியது. இச்சங்கம் 'அமுல்' பாணி சங்கங்களை ஒத்தது.

இச்சங்கம் உறுப்பினர்களிடமிருந்து கொழுப்புச் சத்தின் அடிப்படையில் பால் கொள்முதல் செய்து வருகிறது. உறுப்பினர்களிடமிருந்து கொழுப்புச்சத்தின் அடிப்படையில் பால் கொள்முதல் செய்ய மதுரை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் பயிற்சி பெற்ற பால் பரிசோதகர் ஒருவர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். பால் அளவை முறையில் அல்லாது கொழுப்புச் சத்தின் அடிப்படையில் பாலுக்குக் கிரயம் வழங்கப்படுவதால், பாலின் தரத்திற்குத் தகுந்தாற்போல் உறுப்பினர்கள் அதிகபட்சமாக லிட்டருக்கு ரூ. 2.66-ம், குறைந்தபட்சமாக ரூ. 2.30-ம் பெறுகிறார்கள். எனவே தரமுள்ள பாலை உற்பத்தி செய்ய உறுப்பினர்கள் கறவையினங்களை மிகுந்த கவனத்துடன் பராமரித்து வருகிறார்கள்.

கடந்த ஆண்டில் (1986) சங்கம் உற்பத்தி செய்த பால் தினமும் சராசரி 120 லிட்டராகும். சங்கம் தற்போது தினமும் சராசரியாக 115 லிட்டர் பால் உற்பத்தி செய்து வருகிறது. இவற்றில் தின சராசரியாக 105 லிட்டர் பால் (மொத்த உற்பத்தியில் 91 சதவீதம்) மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பி வருகிறது. உள்ளூர் விற்பனை தின சராசரி 10 லிட்டராகும். இது மொத்த உற்பத்தியில் 9 சதவீதம். சங்கம், கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு, குழந்தைப் பாலாக லிட்டருக்கு ரூ. 4 என விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருகிறது.



மகளிர் சங்கம் அமைத்ததனால் இதுவரை இக் கிராமத்தில் 48 குடும்பங்கள் பொருளாதார மேம்பாடடைந்துள்ளன. 34 உறுப்பினர்களுக்கு இரண்டு கறவை மாடுகளும், 14 உறுப்பினர்களுக்கு ஒரு கறவை மாடும் சொந்தமாகியுள்ளன. கன்றுகள் மூலம் பிற்காலத்தில் மேலும் இவர்கள் வாழ்வு மேம்பாடடையவுள்ளது. உற்பத்தியாகும் பாலின் தரத்திற்கு ஏற்பப் பாலின் கிரயம் வழங்கப்படுவதால் சராசரியாக ஓர் உறுப்பினர் பால் மாட்டுக்கான செலவு பிடித்தம் போக அதிகபட்சமாக மாதம் ரூ. 100 வரை வருமானம் ஈட்டி வருகிறார்.

**பெரியார் மாவட்டத்தில்**

பெரியார் மாவட்டத்தில் கீழ்க் காணும் பால் உற்பத்தியாளர்-ளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிரைத் தலைவர், மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினராகக் கொண்டு இயங்கி வருகின்றன.

சிக்கனாபுரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்.

பள்ளியூத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்.

கிக்கரசம்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்.

மேற்கண்ட சங்கங்களில் நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகள் பாராட்டத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளன. இச் சங்கங்களில் மகளிர் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், சங்கங்களின் நிர்வாகத்தில் பங்கேற்று, சங்கங்களின் முன்னேற்றத்திற்காக ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

**கோவையில்**

தெனமநல்லூர் மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது.

இச்சங்கம் தெனமநல்லூரிலுள்ள நேரு காலனியின் ஆதிதிராவிடர் பெண்களுக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கத்தில் தற்பொழுது 50 உறுப்பினர்கள் உள்ளனர்.

இச்சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் தாட்கோ நிறுவனம் கறவை மானியம் ஆக ஒவ்வொருவருக்கும் ரூ. 2,500 வீதம் மொத்தம் ரூ. 1,23,750 வழங்கியுள்ளது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு கறவை மாடுகள் வீதம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தொண்டாமுத்தூர் கிளை மூலம் மொத்தம் 99 மாடுகள் வாங்கிக் கொடுத்துள்ளது.

இச்சங்கத்திற்குத் தமிழகஅரசு இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் மானியமாக ரூ. 2,000 கோவை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மூலமாக வழங்கியுள்ளது.

ஆரம்ப காலத்தில் 500லிட்டர் வரை பால் கொள்முதல் செய்து வந்த இச்சங்கம், தற்போதுள்ள இந்த வறட்சியிலும் தினசரி 100 லிட்டருக்குக் குறையாமல் பால் கொள்முதல் செய்து வருகிறது.

இச்சங்கம் உறுப்பினர்களிடம் கொள்முதல் செய்யும் பால் அனைத்தையும் கோவைமாவட்ட பால் உற்பத்திக் கூட்டுறவு ஒன்றியத்திற்கு விற்பனை செய்து வருகிறது.

தெனமநல்லூர் மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம், தெனமநல்லூர் நேரு காலனி ஆதிதிராவிடர் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**வடஆர்க்காட்டில்**

வடஆர்க்காடு மாவட்டத்தில் வேலூருக்குச் சுமார் 9 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சாத்து மதுரை கிராமத்தில் முழுதும் பெண்களாலேயே நடத்தப்படும் சாத்துமதுரை மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் பாராட்டிற்குரியது.

இச்சங்கத்தின் உறுப்பினர்கள் (106 பேர்) அனைவரும் மகளிர். நிர்வாகக் குழுவினர் (9 பேர்) செயலர், பால் பரிசோதனையாளர் ஆகிய அனைவரும் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாளொன்றுக்குச் சுமார் 150 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறது இந்தச்சங்கம்.

பாலிலுள்ள கொழுப்புச் சத்தை மிகவும் துல்லியமாகவும் விரைவாகவும் கண்டறிய எலக்ட்ரானிக் கருவியை இந்தச் சங்கம் பயன்படுத்துகிறது.

**சேலத்தில்**

சேலம் மாவட்டத்தில் மஞ்சினி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மகளிரால் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. 1966 முதல் மாதர் சங்கமாக இயங்கி வந்த இது 1976-இல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. மொத்தம் 1416 உறுப்பினர்கள் கொண்ட இச்சங்கம் 115 ஆதி திராவிடர் பெண்களும், 1,089 பிற பெண்களும் எனப் பெண் உறுப்பினர்களையே அதிகமாகக் கொண்டது. 34,000 ரூபாய்க்கு மேல் பங்குத்தொகையுள்ளது. 12 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பால் 1985-'86-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்து 13 இலட்சரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கால் நடை பராமரிப்பு, செயற்கை முறைக் கருவூட்டல், கன்று வளர்ப்பு, தீவனப்பயிர் வளர்த்தல் ஆகிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகின்றன. 75,000 ரூபாய் அளவுக்கு இலாபம் ஈட்டியுள்ள இச்சங்கம் தமிழ்நாட்டில் சிறந்த சங்கத்துக்கான பரிசை 1974-75, 1979-80, 1980-81 ஆகிய மூன்றாண்டுகளில் பெற்றுள்ளது என்பது மகளிரின் முயற்சிக்குக் கிடைத்த பாராட்டாகும்.


தங்களால் முடியும் எனமகளிர் சாதனை புரிந்து நிரூபித்துள்ள துறை பால் கூட்டுறவுத்துறையாகும்.

# துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து...

இசை, இறைவனை நம் கண் எதிரே கொண்டு வரும் அற்புதக் கலையாகும். ஏழு சுரங்களில் ஏழு கோடி ராகங்களைத் தந்திடும் வீணைக்குக் கலையுலகிலிருக்கும் மதிப்பே தனி. ஏழிசையில் இறைவனை வழி பட்டனர் நம் முன்னோர். இசையே இறைவனை மயங்கச் செய்யும் தாலாட்டு!

அத்தகைய இசையை உருவாக்கும் இசைக்கருவிகளைத் தயாரிக்கும் தஞ்சை இசைக்கருவி செய்வோர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 35 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டது. உறுப்பினர்களின் வீணை நரம்புகள் போன்ற இணையிலா ஒற்றுமையால் இசைக்கருவி தயாரிப்பில் இந்தச்சங்கம் தஞ்சை கோபுரத்தையும் விஞ்சும் வண்ணம் உள்ளது. கலை நுணுக்கத்தோடு கூடிய இசைக் கருவிகளைப் படைப்பதில் புகழ் பெற்றது இந்தச்சங்கம்.

வீணை, தம்புரா, மிருதங்கம், கஞ்சிரா போன்ற இசைக்கருவிகளை இந்தக் கூட்டுறவுச் சங்கம் தயாரிக்கிறது. ஆர்டர்களுக்கு ஏற்ப ஆர்மோனியம், சுருதிப் பெட்டி, வயலின் போன்ற இசைக் கருவிகளையும் வெளிச்சந்தையிலிருந்து வாங்கித் தருகிறது. பல மேனாட்டினர்கூட இந்தச் சங்கத்திற்கு வந்து அந்தப்படைப்புகளைப் பார்வையிட்டுப் பாராட்டிச் சென்றுள்ளனர். வீணையின் விலை அதன் தரத்தைப் பொறுத்து ஆயிரம் முதல் நாலாயிரம் ரூபாய் வரையுள்ளது. சாதாரணமாக ஒரு வீணை 100 ஆண்டுக்காலம் உழைக்குமாம்.



வீணை தயாரிப்புக்கலையில் ஈடுபட்டிருப்போர் குறைந்து வருவதால் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு இத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். முதியோர் இத் தொழிலில் பெரும் ஆர்வமுடன் ஈடுபட்டு,முதிர்ந்த கலைஞானமும் அனுபவத்திறனும் கைவண்ணமாக வெளிப்படுகின்றன.

இலாபத்திலேயே இயங்கி வரும் இந்தச் சங்கம், ஆண்டு முழுவதும் அதன் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்து அவர்கள் உற்பத்தி செய்யும் இசைக் கருவிகளை நல்ல விலைக்கு விற்றுத் தருகின்றது.

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா" என்பது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய பொன்னான கவிதைவரிகளாகும்.

துன்பத்தை மறந்து இன்பத்துக்கு வரவேற்பு அளிக்க வீணையின் நாதம் என்றுமே பயன்பட்டுள்ளது. இலங்கேஸ்வரன் இராவணன் இசையிலும் வீணை மீட்டுவதிலும் வல்லவனாக இருந்தான். அவனது கொடிக்கு வீணை சின்னமாக இருந்தது. வீணைக்கொடியோன் என்பதுகூட இராவணனுக்கு இன்னொரு பெயராகும்.

வீணையின் மெல்லிய நரம்புகளை மெல்லிய செங்காந்தள் விரல்களால் மீட்டும்போது எழுகின்ற இன்பம் கல்லையும் கனியச் செய்யும்.

# பனையே சிறந்த துணை

கோடைக் கால வெயிலுக்கு இதம் அளிப்பது பதநீர். மதுரைக்கு அந்தப் பருவச் சூழலில் சென்று வந்தால் ஆங்காங்கே உள்ள சிறுசிறு விற்பனை நிலையங்கள் இதமான பதநீரை விற்பனை செய்வதைக் காணலாம். இந்த ஏற்பாட்டைச் செய்வது இராமநாதபுரம், மதுரை, மாவட்டப் பனைப்பொருள் கூட்டுறவு விற்பனை இணையம் தான்.

இராமநாதபுரம் மதுரை மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு இன்றைக்கு வயது 33. இராமநாதபுரம், காமராசர், பசும்பொன்முத்துராமலிங்கம், மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களை விவகார எல்லையாகக் கொண்ட இந்த இணையத்தில் 203 பிரதம சங்கங்களும், 2,544 தனி நபர்களும் உறுப்பினர்கள். சுமார் 5 இலட்ச ரூபாய் செலுத்தப்பட்ட பங்கு முதலீட்டுடன் இந்த இணையம் இயங்கி வருகிறது.

இந்த இணையத்துடன் இணைந்த பிரதம பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்த அதன் கூட்டுறவுக்கரங்களை நீட்டுதல், பிரதம சங்கப் பனைத் தொழில் வல்லுநர்களுக்குக் கடன் வழங்குதல், கருப்பட்டி உற்பத்தி, பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி, பனந்தும்பு உற்பத்தி ஆகியவற்றை நவீனப்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை உறுப்பினர்களுக்கு ஆதாயமான விலையில் விற்பனை செய்தல், பனைத் தொழில் வல்லுநர்களுக்குப் புது வாழ்வு அளித்தல் ஆகிய உயரிய நோக்கங்களை இந்த இணையம் கொண்டுள்ளது.

7 கிளைகள், 5 விற்பனை நிலையங்கள், 3 தும்பு உற்பத்தி நிலையங்கள் ஆகியவை பிரதம பனை வெல்லச் சங்க உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை நல்ல விலையில் விற்க உதவுகின்றன.

பிரதம சங்க உறுப்பினர்களிடமிருந்து கருப்பட்டி கொள்முதல் செய்து விநியோகிப்பதிலும், விற்பனை செய்வதிலும் மாநிலத்திலேயே முன்னணியில் உள்ளது. இந்த இணையம் இயங்கி வரும் 5 மாவட்டங்களிலும் உற்பத்தி செய்யப்படும் கருப்பட்டியில் கால் பகுதியை இந்த இணையம் கொள்முதல் செய்கிறது.

திருச்சுழி, கானாபூர், கிருங்காகோட்டை ஆகிய இடங்களில் தும்பு சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. தும்பு, மாநில இணையத்தின் குளச்சல் கிளைக்கு அனுப்பப்படுகிறது.

இராமநாதபுரம் பகுதியில் பல்வேறு சமூகத்தையும் மதத்தையும் சேர்ந்த 50 ஆயிரம் குடும்பங்கள் ஓலைப்பாய் முடைதல், கொட்டான் (கருப்பட்டி





வைக்கும் பெட்டி) செய்தல் போன்ற தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டுக்கு சுமார் 75இலட்ச ரூபாய் மதிப்புக்கு இப்பகுதியில் பாய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கூட்டுறவு மூலம் பாய் முடைவோர்க்கு ஆதாய விலை கிடைப்பதாக இப்பகுதியிலுள்ள உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

இராமேஸ்வரம், சேதுக்கரை செல்லும் வழியில் உள்ள திருப்புராணி என்னுமிடத்தில் பனை ஓலைப்பொருட்களை உற்பத்திப் செய்வதற்குப்பயிற்சி அளிக்கும் மையம் ஒன்றை இந்த இணையம் நடத்தி வருகிறது. இங்கு ஏராளமான பெண்கள், பயிற்சிபெற்றுப் பயனடைகிறார்கள்.

**பனை மரம் நமக்குப் பயன்படும் விதத்தை விளக்குகிறது இக் கட்டுரை.**

இந்த இணையம் 1981-'82-ல் 84 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு கருப்பட்டி விற்பனை செய்தது. 1981-'87-க்குள் இந்த இணையம் செய்த உச்சக்கட்ட விற்பனை இதுதான். நடப்பாண்டில் ஜனவரி இறுதிவரை 45 இலட்சம் ரூபாய் அளவுக்கு கருப்பட்டி விற்பனை செய்துள்ளது.

இணையத்தின் ஆதரவிலுள்ள சங்கங்களின் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் மாநிலப்பனை வெல்லம் மற்றும் தும்பு வாரியத்திடமிருந்து கடன் மற்றும் மானியமாக 1958-முதல் 85 வரை 87 இலட்சம் ரூபாயைப் பெற்றுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைப்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களை இந்த இணையம் அமல்படுத்தியுள்ளது. பனைமர வளத்தைப் பெருக்கும் நோக்கத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் நெடுஞ்சாலை மற்றும் வனத்துறைகளுக்குப் பனங்கொட்டைகளை இந்த இணையம் விநியோகித்து வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்



பனை ஓலையால் உருவாக்கப் பட்ட பல்வேறு பொருட்கள்.

மூலம் 1981-'84-ல்6,171பேருக்கு இந்த இணையம் - கடனுதவி செய்துள்ளது. மேலும் இத் திட்டத்தின் கீழ் பெண்களுக்குப் பனை ஓலையில் நவீன பொருட் களைத் தயாரிக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

அண்ணா மாவட்டம் கோவி லூரில்1981-'82ல்ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 6 இலட்சம் ரூபாய் செலவில் பனைப் பொருள் பெரு வளத்திட்டம். தயாரிக்கப்பட்டது. இதற்கு அரசு ஒப்புதலும் வழங்கி யுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் இங்கு பனங்கிழங்குத் தூள் தயாரித்தல், கட்டுமானப்பணிக் காகப் பனஞ்சட்டங்கள் செய்தல், இதர பனைப்பொருட்கள் உற் பத்தி செய்தல் ஆகியவை மேற் கொள்ளப்படும். இன்னும் சில



மாதங்களில் இந்தத் திட்டம் துவங்கப்பட இருக்கிறது. இத னால் 300 பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடும்.

ஆதிதிராவிடர் நலத்திட் டத்தைச் செயல்படுத்தும் நோக் கத்தில் இந்த இணையம் பகுதி வட்டத்தில் பனந்தும்பு சுத்தி கரிப்புச் செய்ய இவ்வாண்டு 150 பேருக்குப் பயிற்சி அளித்து வரு கிறது.

பனைநிழலில் ஒதுங்குவதைப் பற்றி நம் மக்கள் பழமொழி களைச் சொல்வர். ஆனால் பனையை நம்பி இலட்சக்கணக் கான மக்கள் தங்கள் பயணத்தை கூட்டுறவின் அடிப்படையில் மேற் கொண்டுள்ளனர். இந்த ஏழை எளிய வர்க்கத்தினரின் வாழ்வு மலர கூட்டுறவின் ஆதரவுக்கரம் என்றும் உண்டு என்பதை அந்த மக்கள் அறிவார்கள்.

இத்தகைய மக்களுக்கு நேசக் கரம் நீட்டி உதவி வரும் இராம நாதபுரம் மதுரை மாவட்டப் பனை வெல்லக்கூட்டுறவு உற் பத்தி விற்பனை இணையம், தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் மிகச் சிறந்த சங்க மெனத் தெரிவு செய்யப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தின் பாராட்டுக் கேடயம் பெற்றுள்ளது

# உழவர்களின் தோழன் டியூக்காஸ்

நாட்டின் பொருளாதாரம் மேம்பாடு அடைய நமது கிராமங்கள் முதலில் பொருளாதாரத்தில் மேம்பாடு காண வேண்டும். இந்த சீரியநோக்கத்தைச் சிரமேற்கொண்டுதான் முப்பது ஆண்டுகளுக்கு முன் துடியலூர் கிராமக் கூட்டுறவு வங்கி துவக்கப்பட்டது.

துடியலூர் கோவை மாவட்டத்தில், கோவையிலிருந்து உதகமண்டலம் செல்லும் சாலையில் 56 கிராமங்களை உள்ளடக்கிய ஐந்து மைல் சுற்றளவு கொண்ட கிராமம். ஒரு இலட்சத்திற்கும் கூடுதலான மக்கள் தொகை கொண்ட துடியலூர் இந்திய நாட்டிலேயே புகழ்மிக்க இடத்தைப் பெற்றுள்ளது. அன்று துடியலூர் கிராமக்கூட்டுறவு வங்கியாக ஒரு சிறுமுளையாகத் தோன்றிய அந்தக் கூட்டுறவு அமைப்பு துடியலூர் கூட்டுறவு விவசாயச் சேவா நிறுவனம் என்று புகழ்மிக்க அமைப்பாக 'டியூக்காஸ்' என்று செல்லமாக மக்கள் அழைக்கும் வண்ணம் ஆலமரமாய் வளர்ந்தோங்கியுள்ளது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கமே வேளாண் தொழிலுக்கு அடிப்படையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்பதாகும்.

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களை வழங்கி உறுப்பினர்களிடமிருந்து இட்டு வைப்புகளை பெறுதல் அதன் மூலம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல், விவசாயக் காரியத்திற்கு உரிய கடன்களை வழங்குதல், அவசரத் தேவைக்கு நகைக் கடன் வழங்குதல், உறுப்பினர்களின் விலை உயர்ந்த பொருட்களைப் பாதுகாப்புப் பெட்டகத்தில் பாதுகாத்தல், ஆகிய முக்கியப் பணிகளைச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான உரங்களையும், பூச்சிகொல்லி மருந்துகளையும் விற்பனை செய்து வருகின்றது. கடந்த ஆண்டு 21 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு பூச்சி மருந்துகளையும் டியூக்காஸ் விற்பனை செய்திருந்தது. தமிழகம் மட்டுமின்றி, கேரள மாநிலத்திலும் டியூக்காஸின் பெயர் இவ்வகையில் தனிச் சிறப்புப்பெற்றுள்ளது.

உழவுத்தொழிலுக்குத் தேவையான நவீன விவசாயக் கருவிகளைச் செய்து கொடுக்க தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவியுடன் நிறுவப்பட்ட விவசாயக் கருவிகள் பிரிவு விவசாயிகளுக்குத் தேவையான விசைத்தெளிப்பான்கள், கதிர் அடிக்கும் கருவி, விதைப்பதற்கான கருவி, களையெடுக்கும் கருவி போன்ற கருவிகளைத் தயாரித்து வழங்குவதுடன் அவற்றைப் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றையும் அமைத்துள்ளது. சாண எரிவாயுச் சாதனங்களும் இப்பிரிவின் மூலம் தயாரித்து வழங்கப்படுகின்றன. இதுவரை ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட சாண எரிவாயுச் சாதனங்கள் செய்து வழங்கப்பட்டுள்ளன.



டியூக்காஸின் சேவைகளில் இதன் பெட்ரோல் பங்க் மற்றும் சர்வீஸ் நிலையமும் ஒன்றாகும். ஆண்டுக்கு 65 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு பெட்ரோலியப் பொருட்கள் இங்கு விற்பனையாகின்றன.

கிராமத்திற்கு ஒரு அங்காடித் திட்டத்தின் கீழ் 8 கிராமங்களில் டியூக்காஸ் அங்காடிகளை அமைத்துள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர்ப் பொருட்கள் தட்டுப்பாடின்றி வழங்கப்படுகின்றன. இந்தக் கூட்டுறவு அமைப்பின் வசம் அச்சகம் ஒன்றும் ஸ்கிரீன் பிரிண்டிங் பிரிவு ஒன்றும் உள்ளது. தரமான பழவகைகள், மலர்ச் செடிகள் ஆகியவற்றின் நாற்றுக்கள் டியூக்காஸின் நாற்றுப் பண்ணையில் வளர்க்கப்பட்டு உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் வழங்கப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் தமிழக விவசாயிகளிடையே பெரும் புரட்சி ஏற்படுத்தியுள்ளன கோவை விதைகள். எளிய விவசாயிகள், தரமான விதைகளை நியாயமான விலையில் பெறுவதற்காக ஒரு கோடி ரூபாய் திட்ட முதலீட்டில் கோவை விதைகள் கூட்டுறவுக் கூட்டமைப்பு என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களிலுள்ள ஒன்பது விற்பனைச் சங்கங்கள் தமது உறுப்பினர்களது நிலங்களில் விதை உற்பத்தி செய்து அதற்குச் சான்றிதழ் பெற்று அதை டியூக்காஸ் மூலம் விற்பனை செய்து வருகின்றன.

இந்தத் திட்டத்தில் சேரும் உறுப்பினர்களுக்கு காய், விதை, உரம், உழவுக்கருவிகள், பூச்சிகொல்லி மருந்துகள் மற்றும் சாகுபடிக்கடன் ஆகியவை வழங்கப்படுகின்றன. விதைகள் விஞ்ஞான ரீதியில் உற்பத்தி செய்யப்படுவதால் கோவை விதைகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. விவசாயிகளுக்கும் கூடுதல் மகசூல் உறுதியளிக்கப்படுகிறது. அதிக மகசூல் பெறும் விவசாயிகள் பாராட்டுதலும் பெறுகிறார்கள்.

மரத்திலே சிற்பம் செய்து
மயக்கிடும் உறுப்பினர்க் கெல்லாம்
தரத்தொடு தொழிலில் மேன்மை
தக்கதோர் விதத்தில் நல்கி
சிறப்பினைச் சேர்க்கும் ஆற்றல்
கூட்டுற வினுக்கே உண்டு!
பொறுப்பொடு அதனைத் தேர்ந்தோர்
புகல்கிறார் வெற்றிச் சேதி :

# அருங்கலை வளர்க்கும் அரும்பாவூர்

திருச்சி மாவட்டத்தின் பச்சை மலை, கொல்லி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது அரும்பாவூர்.

அழகான சிற்பங்களை அற்புதமாகச் செய்வதால்தான் அரும்பாவூர் எனப் பெயர் பெற்றது.


இந்தச் சிறிய கிராமத்தில் மரச் சிற்பம் செய்யும் மரஒட்ட இனத்தவர்கள், பரம்பரை பரம்பரையாகச் சிற்பங்களைச் செதுக்கிவந்தனர். சிறந்த சிற்பங்களை உருவாக்கினாலும் குறைந்த விலைக்கு விற்று மிகக்குறைந்த வருவாயையே பெற்று வந்தனர். அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், பொருளாதார முன்னேற்றம் காணவும் ஏற்றவகையில் 1974-ஆம் ஆண்டு அரும்பாவூர் மரச்சிற்பங்கள் செதுக்குவோர் கைவினைத் தொழிற்கூட்டுறவுச் சங்கம் துவக்கப்பட்டது.

சங்கம் துவங்கியபோது 54 உறுப்பினர்களே இருந்தனர். தற்போது 149 பேர் உள்ளனர். கிட்டத்தட்ட தொழில் தெரிந்தவர்களில் 90 சதவீதம்பேர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். தினமும் தொழில் தந்துதவி உறுப்பினர்களுக்கு உதவி செய்து வருவதன் மூலம்,அவர்களுக்குப் பொருளாதாரத் தட்டுப்பாடு இல்லாத நிலை உருவாக்கப்படுகிறது.

சங்கத் தலைவர் திரு கே.வி. மகாதேவன் அவர்களைச் சந்தித்தோம். அவர் கூறுகிறார் :

"தமிழ்நாட்டிலேயே மரச் சிற்பங்கள் செய்ய உள்ள ஒரே கூட்டுறவுச் சங்கம் அரும்பாவூர் மரச்சிற்பம் செய்வோர் சங்கமே. முன் எங்கள் வீட்டிலேயே சிற்பங்களைச் செதுக்கி வந்தோம். மழைக்காலங்களில் சிற்பம் செய்யும் பணி தடைபட்டதோடு அல்லாமல், சிற்பங்களுக்குப் பாதிப்பு இருந்தது. தமிழக அரசு 'சிட்கோ' நிறுவனம் மூலம் இத்தொழிற் கூடத்தினை 34 உறுப்பினர்களுக்கு அமைத்துக் கொடுத்துள்ளது. ஒரு தொழிற் கூடத்தின் மொத்தமதிப்பு ரூபாய் 7,500. சுமார் ரூபாய் 1,800 மானியம். மிகுதியினை ஒரு நாளைக்கு 2 ரூபாய் வீதம் 60 மாதங்கள் கட்ட வேண்டும்.

மரச் சிற்பங்கள் செய்வதோடு அல்லாமல், கோவில்களுக்குத் தேவையான வாகனங்களையும், தேர்களையும்செய்துதருகிறோம். இவ்வகையில் திருச்சி மாவட்டம் திருவாசி அருள்மிகு மாற்றுரை வரதீஸ்வரர் திருக்கோயிலுக்கு 16 அடி உயரமுள்ள சுமார் ரூபாய் 60,000 மதிப்புள்ள புதிய தேர் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அகிலம் புகழ் திருவானைக்காவில் உள்ள அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலின் 2 தேர்ச் சக்கரங்கள் பழுது பார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு முன்பு நாங்கள் எவ்வளவு பாடுபட்டாலும் பலன் எங்களுக்குக் கிடைக்காது. ஆனால் தற்போது சராசரியாக மாத வருவாய் ரூ. 350 கொள் முதல் ரூ. 450 வரை வருகிறது.

சிற்பம் செதுக்க, துங்காவகை, மாவுலிங்கம், கொடுக்கபுளி ஒதியம், நொனா, மாமரம் ஆகிய மரங்களைச் சிற்பங்கள் செய்யப் பயன்படுத்துகிறோம். இதில் துங்காவகை - மாவுலிங்கம் ஆகிய மரங்கள்தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. வாடிக்கையாளர்கள் கேட்டுக் கொண்டால் தேக்கு மரத்திலும் செய்து தரப்படும். குறைந்தபட்சமாக 9.6" அளவிற்கும் அதிகப்பட்சமாக 8.2" அளவிற்கும் சிற்பம் செதுக்கப்படும். தொழில் முறையில் கணேஷ் எனப்படும் விநாயகர் சிற்பங்கள் அதிகமாக விற்பனை ஆகின்றன.

வாடிக்கையாளர்கள் ஆர்டர் தந்தால் பாவை விளக்கு, சரஸ்வதி போன்ற சிற்பங்கள் எல்லாவித அளவிலும் செய்து தரப்படுகின்றன. தற்போது சிறப்பம்சமாக, பூசைக்கு ஏற்ற வகையில் வெள்ளருக்கு வேர் என்ற மரத்தில் மிகச்சிறிய விநாயகர் சிற்பம் செய்யப்படுகிறது. இதன் விலை ரூ.40. சிற்பத்தின் குறைந்தபட்ச விலை ரூ. 15; அதிகபட்ச விலை ரூ. 1,500."

சங்கத்திற்கு நேரில் வந்து சிற்பங்களை வாங்கிச்செல்கின்றனர். அரும்பாவூர் சிற்பங்கள் மிக நுண்ணிய தொழில் நுணுக்கமும் அழகும் வனப்பும் நிறைந்து உள்ளன. குறிப்பாக வெவ்வேறு விதத்தில், அளவில், அமைப்பில் செய்யப்படும் கணேஷ் எனும் விநாயகர் சிற்பங்கள் காண்போரைக் கைகுவிய வைக்கின்றன.




# தையலும் தையலரும்

பெரியார் மாவட்டத்தில் வாழ்விழந்த கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள் மற்றும் ஆதரவற்ற அனாதைப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஈரோடு மாதர் நலச் சங்கத்தின் தையல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இது 12.4.1983-முதல் செயல்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் 243 உறுப்பினர்களுடனும், ரூ.24,500 பங்குத் தொகையுடனும் செயல்பட்டுவந்த இச்சங்கம், தற்போது 578 உறுப்பினர்களுடனும் ரூ.79,400 பங்கு மூலதனத்துடனும் சேலம், பெரியார், தர்மபுரி, கோவை, ஆகிய நான்கு மாவட்டங்களை விவகார எல்லையாகக் கொண்டு இயங்கி வருகிறது. அரசு பங்குத் தொகை கடன் ரூ.40.000 அளிக்கப்பட்டுள்ளது. நியமனம் செய்யப்பட்ட நிர்வாகக் குழுவினரால் சங்கம் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது.

சங்கம் தனது விவகார எல்லையில் உள்ள மாவட்டங்களில் உள்ள பிற்பட்டோர் நலத்துறை, ஆதி திராவிட நலத்துறை, சமூக நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள், விடுதிகளில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு இலவசச்சீருடைகளையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் பெறப்படும் சீருடைகளையும் தைக்கும் பணிகளையும் மற்றும் அரசு அலுவலர்கள், கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள், ஜீப் ஓட்டுநர்கள், நகராட்சி ஊழியர்களுக்குரிய சீருடைகளைத் தைக்கும் பணியினையும், விவசாயத்துறைக்குத் தேவையான விதைப் பை தைக்கும் பணியினையும் செவ்வனே செய்து வருகிறது.

சங்கம் 1983-84-மற்றும் 1984-85-ஆண்டுக்குரிய உறுப்பினர்களுக்குப் பங்குத் தொகையின் பேரில் 12% பங்கு ஈவும், உறுப்பினர்களுக்குக் கூலி மீதான போனஸ் இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து ரூ.43,787.36 வழங்கியுள்ளது. சங்கம் 1985-86-ல் தமிழகத்திலேயே நல்ல முறையில் இயங்கிய தலை சிறந்த தையல் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்று தேர்வு செய்யப்பட்டு, தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்தினிடமிருந்து கேடயத்தினைப் பெற்றுள்ளது.

சங்கம் தற்போது 1986-87- ஆண்டிற்குரிய தமிழக இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் நான்கு மாவட்டங்களில் சீருடை தைக்கும் பணியினைச் செவ்வனே செய்து முடித்துள்ளது. சங்கம் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக எல்லா வகையான முயற்சிகளும் எடுத்துச் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது.

# கறிவேப்பிலை மணக்கும் கல்ராயன் மலை

தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலிருந்து 110 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளது கல்ராயன் மலை. அடுக்கடுக்கான மலைத்தொடர்கள் சில பகுதிகளிலும், சிறு சம வெளியைச் சுற்றிலும் மலைத் தொடர்கள் சில பகுதிகளிலுமாக மனதைக் கவரும் காட்சிகள் இந்த மலைகளில் ஏராளம், இதர மாவட்டத்து மலைப்பகுதிகளைப் போல் அவ்வளவு மக்கள் நெருக்கம் இல்லாத மலை கல்ராயன் மலை என்று கூறப்படுகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த மலைப்பகுதியில் மோட்டாம்பட்டி, கிளாக்காடு, வெள்ளிமலை ஆகிய மூன்று பகுதிகளில் மூன்று பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (லாம்ப்ஸ்) இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 13 லாம்ப்ஸ் சங்கங்களில் 3 சங்கங்கள் கள்ளக்குறிச்சி வட்டத்தில் நிறுவப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சங்கங்கள் இந்த மலைப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு சீரிய பணியாற்றி, மலை மக்களின் மணி விளக்காய் ஒளி விடுகின்றன.

ஜமீன்தார்களின் ஆட்சியிலே அல்லலுற்று வந்த இந்த மக்கள் கூட்டுறவின் மூலம் சுதந்திரப் பறவைகளாயினர்.

மலை வாழ் மக்களின் எந்தத் தேவைகளையும் இந்தச் சங்கங்கள் பூர்த்தி செய்யாமல் விடுவதில்லை. மலைமக்களுக்குச் சேவை புரிந்திட ஒவ்வொரு லாம்ப் சங்கமும் போட்டி போட்டுக்கொண்டு இயங்குகின்றன.

இந்த மூன்று சங்கங்களின் கடந்த ஆண்டுச்சேவையைக் கவனிப்போம்.

மோட்டாம்பட்டி லாம்ப் கடந்த ஆண்டில் 56 உறுப்பினர்களுக்கு 1.60 இலட்சம் ரூபாய் அளவுக்கு குறுகிய காலக்கடனை வழங்கியுள்ளது. மேலும் பெருத்த நிதித்திட்டத்தின் கீழ் கிணறு வெட்டவும், ஆயில் என்ஜின் வாங்கவும் 9 உறுப்பினர்களுக்கு சுமார் 1.25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 50 சதவிகித மானியம் கொண்ட கடனாகும். தவிரவும் 75 சதவீத மானியத்தில் கால்நடைகள் வாங்க 69 பேருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. முழுவதும் மானியம்கொண்ட உதவியில் இடு பொருட்கள் 250 பேருக்கு வழங்கப்பட்டன. இதன் மதிப்பு ரூ. 1.70 இலட்சமாகும்.

மேலும் உறுப்பினர்களின் விவசாய உற்பத்திப் பொருட்களைச் சேகரம் செய்வதிலும் இந்தச் சங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.


இந்த லாம்ப் போன்றே கிளாக்காடு வெள்ளிமலை சங்கங்கள் 112 பேருக்கு சுமார் 1.15 இலட்சம் ரூபாய் குறுகிய காலக் கடனையும், 7 பேருக்கு பெருத்த நிதித் திட்டக்கடனாக 50ஆயிரம் ரூபாயும் வழங்கியுள்ளது. இந்த இரு சங்கங்களும் 160 பேருக்கு சுமார் 4 இலட்சம் ரூபாய் மலை மக்கள் கால்நடை வாங்க கடன் வழங்கியுள்ளன. 465 பேருக்கு சுமார் 3.25 இலட்சம் ரூபாய் அளவுக்கு இடு பொருட்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.



கறிவேப்பிலை இல்லையென்றால் சாம்பார் மணக்காது. கல்ராயன் மலைப்பகுதிகளில் அடர்ந்த முட்புதர்களிடையே மணமிக்க கறிவேப்பிலை பெருமளவு காணப்படுகிறது. காலை 6 மணிக்குப்புறப்பட்டுச் செல்லும் இந்த மலைப் பெண்கள் சுமார் 12 மணியளவில் கறிவேப்பிலை மூட்டைகளுடன் லாம்ப்க்கு வந்து சேருகிறார்கள். இந்தக் கறிவேப்பிலைச் சேகரத்தை அவர்கள் செய்ய தினமும் சுமார் 25 கிலோ மீட்டர் தூரம் நடக்க வேண்டியுள்ளது.

கெண்டிக்கல், கொட்டபுதூர் போன்ற மலைக்கிராமங்களுக்குச் செல்ல ஓரளவு மண்பாதை இருப்பினும் பெரும்பாலும் ஊர்திப் போக்குவரத்து ஆபத்து நிறைந்ததாகவே உள்ளது.

கல்ராயன் மலைகளிலிருந்து கிடைக்கும் கறிவேப்பிலை நல்ல மணமிக்கதாகும். சென்னை மற்றும் சேலம் பகுதிகளுக்கு லாரிகளில் தினமும் கறிவேப்பிலை இந்த லாம்ப்களிலிருந்து அனுப்பப்படுகிறது. 1 கிலோ 50 காசுகள் வீதம் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இது மிகவும் குறைவான விலை. லாரி வாடகை, இதர செலவுகளைக் கணக்கிடும் போது இந்த விலையையே நிர்ணயிக்க முடிகிறது.




"ஒரு கொள்ளை
நோய் என் கால்
நடைகள் எல்லா
வற்றையும் பறித்துக்
கொண்டு போய்
விட்ட போது..."

# "என் பிழைப்பிற்குப் புத்துயிர் விரைவாகக் கிடைத்தது, யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸின் உதவியால்".

"நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தைக் கொண்டு மாடு கன்றுகளை வாங்கினேன். அவைகளை அக்கறையுடனும் மருத்துவ கவனிப்புடனும் வளர்த்தேன். அத்துடன் நான் ஒரு முக்கியமான காரியமும் செய்தேன். யுனைடெட் இந்தியாவில் கால்நடை இன்ஷூரன்ஸையும் எடுத்துக் கொண்டேன். அதனால், என் மாடுகளையெல்லாம் நான் இழந்தபோது, யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் எனக்கு முழு பண உதவியைக் கொடுத்ததால் மறுபடியும் என் ஜீவனத்தை என்னால் துவங்க முடிந்தது."

நெருப்பு, மின்னல், பாம்புக்கடி, வெள்ளம், நோய்கள் என்று பலவிதத்தில் கொடிய விதி உங்கள் கால்நடைகளைப் பறித்துச் செல்ல முடியும். யுனைடெட் இந்தியாவின் கால்நடை இன்ஷூரன்ஸ் மூலமாகப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏற்கனவே கால்நடை இன்ஷூரன்ஸ் செய்து கொள்ளும் 100 பேரில் 40 பேர் யுனைடெட் இந்தியாவில் செய்து கொள்ளுகிறார்கள்.

**யுனைடெட் இந்தியா**
**இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**
(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் ஒரு துணை நிறுவனம்)
24, ஒயிட்ஸ் ரோடு, சென்னை 600 014.

**யுனைடெட் இந்தியா கால்நடை இன்ஷூரன்ஸ்**
அருகில் உள்ள யுனைடெட் இந்தியாவின் அலுவலகத்தையோ ஏஜன்டையோ அணுகுங்கள்.

HTA-7052

# பாத்திரத் தயாரிப்பில் கூட்டுறவு

கோவை மாவட்டம் திருப்பூர் நகருக்கு அருகிலுள்ள அனுப்பர் பாளையம் கிராமத்தில், தொன்மை வாய்ந்த குடிசைத் தொழில்களில் ஒன்றான உலோகப் பாத்திர உற்பத்தித் தொழில் சிறப்புடன் நடைபெற்று வருகின்றது.

சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இத்தொழிலைப் பரம்பரையாகச் செய்து வருகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினையும், அதன் நிமித்தம் நிலையான வருவாயையும் ஏற்படுத்திக் கொடுத்து அவர்தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்கத்துடன் அனுப்பர் பாளையம் உலோகத் தொழிலாளர் கூட்டுறவுக்குடிசைத் தொழில் சங்கம் துவக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் 57 உறுப்பினர்களுடன் செயல்பட்டது. தற்சமயம் 106 உறுப்பினர்களுடன் இது தமிழ் நாட்டில் உள்ள உலோகத் தொழிலாளர் கூட்டுறவுத் தொழில் சங்கங்களிலே' மிகப் பெரிய சங்கமாகத் திகழ்ந்து வருகிறது.

இச்சங்கம் துவங்கப்பெற்ற பின்னர் இப்பகுதியிலுள்ள பாத்திரத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. அவர்கள் பெருமளவில் பொருளாதாரமேம்பாடடைந்துள்ளனர். குறைந்த அளவு வருவாயில் குடும்பத்தைப் பராமரிக்கவே தத்தளித்தவர்கள், இன்று சொந்த வீடு, சொந்த பட்டறை வைத்துக் கொள்ளுமளவிற்கு வசதி பெற்றுள்ளார்கள்.

1982-83-ஆம் ஆண்டில் இச்சங்கம் மிகுந்த நல்ல முறையில் இயக்கியமைக்காகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பாராட்டுக் கேடயம் வழங்கப்பட்டது.

1985-86-ஆம் ஆண்டில் இச்சங்கம் ரூ.40,29,731 மதிப்பிற்கு மிக உயர்ந்த அளவு விற்பனையும் செய்துள்ளது. நிகர லாபமாக ரூ.2,49,718 ஈட்டியுள்ளது.

இச்சங்கத்தின் உற்பத்திப் பொருட்களான பித்தளை, செம்பு மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள் அவற்றின் உறுதிமிக்க தரத்திற்கும், நிகரற்ற வேலைப்பாட்டிற்கும் பெயர் பெற்றவை. பொதுமக்களின் மத்தியில், மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. இச்சங்கம் ஆரம்ப காலத்தில் பித்தளை, செம்புப் பாத்திரங்களின் மொத்த விற்பனையைப் பெருமளவில் மேற்கொண்டிருந்தது.


தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலுள்ள சில்லறை வியாபாரிகளும் மற்றும் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களின் முக்கிய வியாபாரிகளும் இச்சங்கத்தின் வாடிக்கையாளர்களாக விளங்கினர். அச்சமயம் தனித்துறைப் பெரும் வியாபாரிகளிடையே வரி ஏய்ப்பு அதிக அளவில் நடைபெற்றதால், இச்சங்கம் தனது உற்பத்திப் பொருட்களின் தரத்திற்காக மட்டுமின்றி, நியாயமான விலைகளின் அடிப்படையிலும் சில்லறை வியாபாரிகளின் பெரும் ஒத்துழைப்பைப் பெற்று மொத்த விற்பனையில் சந்தையில் பெரும் பங்கினைப் பெற்றவுடன், சந்தை நிலவரத்தையே தன் வசம் ஆக்கிக்கொள்ளும் நிலை பெற்றிருந்தது. ஆனால் காலப்போக்கில் தனியார் துறை மொத்த வியாபாரிகளிடையே வரி ஏய்ப்பு அதிக அளவில் நடைபெறத் தொடங்கியவுடன், புதிய வரி விதிப்புகள் சங்கத்தின் விற்பனை விலையை அதிகரிக்கக் காரணமான நிலையில், சில்லறை வியாபாரிகள் பெரும் லாபத்தைக் கருத்திற் கொண்டு சிறுகச் சிறுகத் தனியார் துறை வியாபாரிகளிடம் வியாபாரம் செய்ய ஆரம்பித்து, சங்கத்தின் கொள்முதல் செய்வதை முற்றிலுமாக நிறுத்திக் கொண்டுவிட்டனர். இவ்வாறாக, சில்லறை வியாபாரிகளின் ஒத்துழைப்பை இழந்த நிலையில், சங்கம் தனது சில்லறை விற்பனையைப் பெருக்குவதில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. இதன் விளைவாகத் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் சொந்தக் கிளை விற்பனை நிலையங்களையும், இதர கூட்டுறவு நிறுவனங்களோடு சேர்ந்து கிளை விற்பனை நிலையங்களையும் ஏற்படுத்தி, அதன் மூலம் சில்லறை விற்பனையை அதிகரிக்கத் தொடங்கியது. இந்த விற்பனை மூலம் ஓரளவு லாப சதவிகிதமும் அதிகமாகக் கிடைத்தது. பொதுமக்களின் ரசனை பெருமளவில் எவர்சில்வர் பாத்திரங்களின்பால் ஏற்பட்டதால் சங்கமும் எவர்சில்வர் பாத்திரங்கள் உற்பத்தியைத் தொடங்கியதுடன், பிரஸ் மூலம் தயாரிக்கப்பட்ட இதர எவர்சில்வர்



பொருட்களையும் வாங்கி விற்பனை செய்யத் தொடங்கியது.

சங்கத்தின் உற்பத்தி முழுவதும் சில்லறை விற்பனை மூலம் விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டபொழுது, சங்கம் இதர கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன் மூலம் விற்பனை செய்யும் முயற்சியை மேற்கொண்டது. இம்முறை நன்கு பயனளித்தது. தமிழகத்தின் முக்கிய கூட்டுறவுச் சிறப்பங்காடிகளும், இதர கூட்டுறவுப் பண்டகச் சாலைகளும், ஸ்தல ஸ்தாபனங்களும், பல்வேறு அரசுத் துறைகளும், அரசு சார்புடைய கழகங்களும் தங்களது தேவைகளுக்கு அதிக அளவில் சங்கத்திலிருந்து கொள்முதல் செய்ய ஆரம்பித்தன. தற்போதைய சங்கத்தின் வளர்ச்சிக்கு இவைகளின் ஒத்துழைப்பே பெரும் காரணமாகும்.

தமிழக அரசின் சிறப்புத் திட்டங்களாக முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவுக் கூடங்களுக்குத் தேவையான பாத்திரங்களையும் இச்சங்கம் வழங்கியுள்ளது. குடும்ப நலத்திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களுக்கு இச்சங்கம் எவர்சில்வர் பாத்திரங்களை வழங்கி வருகிறது.



பொதுவாக தீவிர நடவடிக்கைகளின் வாயிலாக, தனியார் துறையினரின் வரி ஏய்ப்பைத் தடுப்பதன் மூலம் அரசிற்கு அதிக வருவாய் கிட்டுவதுடன், இச்சங்கம் போன்ற கூட்டுறவு நிறுவனங்கள் நன்கு பணியாற்றும் வாய்ப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

தமிழகத்திலுள்ள உலோகத் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பதன் மூலம் அச்சங்கங்களுக்குப் புத்துயிர் ஊட்டி, தனியார் துறையினரோடு நன்கு போட்டியிட்டு வெற்றி கொள்ளவும், பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் தரம் நிறைந்த பொருட்களை வழங்கி சேவை புரியவும் வாய்ப்பு ஏற்படும்.



# நேருவின் பொன்மொழிகள்

## மாயப் பிரிவுகள்

பழமை நம்மைச் சேர்த்து வைத்திருக்கிறது; நிகழ்காலமும் எதிர்காலமும் நம்மை ஏன் பிரிக்க வேண்டும்?

## என் குருவின் போதனை

என் பொது வாழ்க்கையில் சென்ற முப்பது, நாற்பது ஆண்டுகளாக நான் ஏதேனும் அனுபவம் பெற்றிருந்தால், அல்லது நமக்குப் பல விஷயங்களைப் போதித்த குருநாதரிடமிருந்து நான் ஏதேனும் பாடம் கற்றிருந்தால், அது இதுதான்: நேர்மையற்ற சூழ்ச்சி முறை முடிவில் வெற்றியளிப்பதில்லை. தற்காலிகமாக மட்டும் அதனால் இலாபமிருக்கலாம்.

## அழகும் கலையும்

சுதந்திரமில்லாத ஒரு நாட்டில் அழகும் கலையும் எப்படிச் செழித்து வளரும்? அவை அடிமை இருளிலும், அடக்குமுறையிலும் வாடிப்போய் விடுகின்றன.

## திறமை, ஆர்வம் தேவை

நாடாளுமன்ற ஜனநாயகத்திற்குப் பல குணங்கள் தேவை. முதலில் திறமை வேண்டும். வேலை செய்வதற்கு ஆர்வம் வேண்டும். ஒத்துழைப்பு வேண்டும். தன்னடக்கமும், தானே தனக்கு விதித்துக் கொள்ளும் ஒழுங்கு முறையும் வேண்டும்.

## சமூகநீதி

இன்று உலகில் முதன்மையான நோக்கங்களாயுள்ளவை சமூகநீதியும், சமத்துவமும்.

## திட்டமிடுதல்

விஞ்ஞானத்தைச் செயற்படுத்துவதுதான் திட்டமிடுதல். திட்டமிடுதல் வளைந்து கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும்; விழிப்போடு எப்பொழுதும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

## மக்களைத் தொழில்களில் திருப்பவேண்டும்

நிலங்களை நம்பிக்கொண்டு அதிகமான மக்கள் இருக்கிறார்கள்—நிலங்களின் மீதுள்ள இந்தச் சுமை குறைய வேண்டும். மக்களைப் பெரிய தொழில், நடுத்தரத் தொழில், சிறுதொழில், குடிசைத்தொழில்களுக்கு மாற்ற வேண்டும். இதைச் செய்யமுடியும் என்றும், விரைவிலே செய்யலாம் என்றும் நான் எண்ணுகிறேன்.

## காட்சிச் சாலைகள்

ஒரு பெரிய நகரிலிருக்கும் கலைக் காட்சிச் சாலைகளும் பொருட்காட்சிச் சாலைகளும், வாழ்க்கையின் விரிவான, செழிப்புள்ள, ஆழ்ந்த பொருட்களை எட்டிப் பார்ப்பதற்குரிய சாளரங்களாக விளங்குகின்றன.

## விஞ்ஞானம்

பசி, வறுமை, சுகாதாரக் குறைவு, எழுத்தறிவின்மை, மூடநம்பிக்கை, மூடப்பழக்கங்கள், பரம்பரை வழக்கங்கள் என்ற கனமான சுமைகளை விஞ்ஞானம் ஒன்றுதான் நீக்க முடியும். மூலாதாரமான பொருள்கள் வீணாவதையும், செல்வம் மிகுந்த நாட்டில் வறுமையால் வாடும் மக்கள் வசிப்பதையும் அதுவே தடுக்க வல்லது.

## சத்தியமே வெல்லும்

உண்மையைச் சில சமயங்களில் அடக்கி வைக்க முடியும். ஆனால் அதை ஒடுக்கிவிட முடியாது.

சத்தியமாகிய பாதையின் மீதுதான் நிலையான வெற்றிக்குரிய அடிப்படைகளை அமைக்க முடியும்

தொகுப்பு

டாக்டர் இராம. சுப்பிரமணியன்

# பேராசிரியர் கா.சு.பிள்ளை

புலவர் இரா. இளங்குமரன்

''காசு'' என்பதற்குப் 'பொன்' என்பது பொருள். தமிழுக்குக் 'காசு' எனத் திகழ்ந்தவர் பேராசிரியர் கா.சு.பிள்ளை ஆவர். கா. சுப்பிரமணியபிள்ளை என்பது அவர் தம் முழுப் பெயர்.

திருநெல்வேலியிலே 'பி.ஏ.' பிள்ளை என ஒருவர் இருந்தார். அவர் புட்டா புரத்தியம்மன் கோயில் தெருவில் வாழ்ந்தார். அவரே சைவ வேளாண் குடியில் முதற்கண் பி.ஏ. பட்டம் பெற்றவர். ஆகலின் பி.ஏ. பிள்ளை என்று அழைக்கப் பெற்றார். காந்திமதிநாத பிள்ளை என்பது அவர் தம் இயற்பெயர்.

பி.ஏ.பிள்ளையின் மைந்தர் எத்தகையவர் ஆனார்? ''புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?'' என்பது பழமொழி. பி.ஏ.பிள்ளையின் மைந்தர் எம்.எல் பிள்ளை ஆனார். எம்.எல். என்னும் உயர் பட்டம் பெற்ற முதற் சைவ வேளாளர் இவரே ஆவர். மகன் தந்தைக்குச் செய்யும் உதவி இதைப் பார்க்கிலும் ஒன்று உண்டா?

காந்திமதி நாத பிள்ளையின் அருமைத் திருமனைவியார் மீனாட்சியம்மையார். இவர் தம் இல்லறத்தின் கனியாகக் காசு திருவள்ளுவராண்டு 1919 ஐப்பசித் திங்கள் 22ஆம் நாள் (5.11.1888) பிறந்தார்.

புட்டா புரத்தியம்மன் கோயில் தெருவில் ஒரு திண்ணைப் பள்ளி இருந்தது. அதில் நம் காசு மூன்றாண்டுக் காலம் பயின்றார். தந்தையாரிடம் தனிப்பாடமாகத் தமிழும் ஆங்கிலமும் கற்றார். ஏழாம் வயதைக் 'காசு' எய்தவில்லை. இவர் தம்பியார் குஞ்சிதபாதத்திற்கு இரண்டாம் வயதும் எய்தவில்லை. அதற்குள் அன்னை மீனாட்சியார் இறைவன் திருவடி எய்தினார். ஏற்றமிக்க எதிர்காலம் உடையவர்க்கு இளமைப் பருவத்திலே இத்தகைய இடர்ப்பாடுகள் நேருவது இயற்கை போலும்!

இல்லத்தரசியை இழந்தார் காந்திமதி நாதர். உற்றார் உறவினர் உருகினர். ஆனால், ஏழாண்டுக் காசு ''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?'' என்னும் ஔவையார் பொன் மொழியை உரைத்து ஆறுதல் கூறினராம். எத்தகைய தெளிந்த நெஞ்சம்! எத்தகைய கலங்கா உள்ளம்!

**கா. சு. பிள்ளை அவர்களின் நூற்றாண்டுத் தொடக்கத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை இடம் பெறுகிறது.**

நெல்லையில் இருந்த சி.எம். கிழக்குக்கிளைப் பள்ளியின் நான்காம் வகுப்பில் சேர்ந்தார் காசு. அப்பொழுது நான்காம் வகுப்புத் தேர்வு தொடக்கத் தேர்வு என்றும், ஏழாம் வகுப்புத் தேர்வு 'நடுத்தரத்தேர்வு' என்றும், பத்தாம் வகுப்புத் தேர்வு 'பள்ளியிறுதித் தேர்வு' என்றும் பெயர் பெற்று அரசினரால் நடத்தப் பெற்றன. தொடக்கத் தேர்விலும், நடுத்தரத் தேர்விலும் காசு, மாநில முதல்வராகத் தேர்ந்தார். அதனால் எவ்வகுப்புக்கும் சம்பளம் கட்டிப் படிக்க வேண்டியது இல்லாமல் போயிற்று. தேர்ச்சி தந்த பரிசு இது!



தொடக்கத்தேர்விலும், நடுத்தரத் தேர்விலும் மாநில முதன்மை பெற்ற காசு மேற்படிப்பை வயற்காட்டுப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். அப்பொழுது ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் அரிய தேர்ச்சி காட்டி ஆசிரியரின் பாராட்டுக்கு உரியவராக விளங்கினார். ஆயினும் ''ஆனைக்கும் அடி சறுக்கும்'' என்பது போல் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தோல்வி கண்டார். தோல்வி கண்ட ஆண்டில், மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் முதன்மைப் பரிசு பெற்றவர் 'காசு' வே! அடுத்த ஆண்டு நிகழ்ந்த அரசினர் தேர்வில் வெற்றி பெற்றார்.

நெல்லை இந்துக் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் சேர்ந்தார் காசு. 1908ஆம் ஆண்டு நடந்த தேர்வில் மாநில முதல்வரானார். தமிழ்ச்சங்கத் தமிழ்த்தேர்வில் இவரே முதற்பரிசும் பெற்றார்.

'காசு' பிள்ளையின் தந்தையார் காந்திமதி நாத பிள்ளை சிவநெறிச் செல்வர்; இறையுறையும் நிறைதிருவினர்; வழிபாட்டையே வாழ்வுப் பணியாகக் கொண்டவர். நாள் தவறாமல் திருக்கோயிலுக்குப் போதலைத் தவறாதவர். அடியார்களைப் பேணுதலில் ஆர்வம் மிகக் கொண்டவர். செப்பறைச் சிதம்பர அடிகளாரும், திருப்பதிசார அடிகளும் அவருடன் பெரும்பாலும் தங்கியிருப்பர். அடிகளார் இருவரும் தமிழிலும் வடமொழியிலும் வளமான புலமையுடையவர்கள். அவர்கள் தொடர்பு இளமைப் பருவத்திலேயே காசுக்கு வாய்த்தது திருவருட் செயலேயாகும்.

காசு, தமிழ் இலக்கண நூல்களை முறையே அவர்களிடம் பாடம் கேட்டார். சமய நூல்களையும் பாடம் கேட்டார். ஒருமுறை கேட்ட பாடம் மறுமுறை ஓதாமலே மனத்தில் தங்கும் திறம் வாய்த்திருந்தார். ஆதலின் சிறுப்பெரியாராகத் திகழ்ந்தார் காசு. செப்பறைத் திருமடம் சென்று சிவதீக்கையும் பெற்றுக் கொண்டார். இளம் பெரியார் தாமே காசு!

இறைவழிபாட்டில் மிக ஈடுபாடு கொண்டார் காசு. விளையாடும் எண்ணம் என்றும் ஏற்பட்டது இல்லை. ஒரொருவேளை ஏற்பட்டு விளையாடச் சென்றாலும் தோழர்கள் இவரைச் சேர்த்துக் கொள்ளாது 'பூசைப்பிள்ளை' எனத் தள்ளிவிடுவர். அதற்காக இவர் வருந்துவதும் இல்லை.

உயர் வகுப்பில் படிக்கும்போது காசு நெல்லையில் 'சைவ சித்தாந்த சங்கத்தை'த் தோற்றுவித்தார். ஞாயிறுதோறும் அச்சங்கம் கூடும். அரிய தலைப்புகளில் சொற்பொழிவு நடத்தும்; ஆராய்ச்சியும் செய்யும். அச்சங்கத்தின் தலைவர் காசுவே ஆவர்.

சைவசித்தாந்த சங்க உறுப்பினர் ஒத்த வயதினரே எனினும் ஒருவரை ஒருவர், ''அவர்கள், இவர்கள்'' என்றே அழைக்க வேண்டும் என்றும், காபி குடிக்கக்கூடாது என்றும், நாடகம்

**கலப்பு மணம் தேவை**

கலப்பு மணம் தமிழர்களுக்குள் இருந்த தென்பது சங்கநூற்செய்யுள்களால் தெரிய வருகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதம் அதற்குச்சான்றாகும்.

— **காசு**

பார்த்தால் ஆகாது என்றும், கடைப்பிடியாகக் கொண்டனர். குடுமித் தலையராகவும் இருந்த னர். இளம் பருவத்திலேயே இத் தகைய கட்டுப்பாடுகளை அமைத் துக் கொள்வது எதிர்கால உயர் வுக்கு வாய்ப்பு அல்லவா!

நெல்லையில் கல்வியை முடித்த காசு சென்னை மாநிலக் கல்லூரி யில் இளங்கலை வகுப்பில் (பி.ஏ) சேர்ந்தார். அவ்வகுப்பில், மாநில முதல்வராகத் தேர்ச்சி பெற் றார். அதனால் பவர்மூர்கெட் என்னும் ஆங்கிலப் பெருமகனார் தமிழ் ஆராய்ச்சிக்கு என அமைத் துள்ள பரிசு காசுவுக்குக் கிடைத் தது. அப்பரிசு வாய்ப்பால், 1913ஆம் ஆண்டில் ஆங்கிலத்தி லும், 1914ஆம் ஆண்டில் தமிழி லும் இவர் முதல்வராகத் தேர்ச்சி யடைந்து இரண்டு மொழிகளிலும் முதுகலைப் பட்டம் (எம்.ஏ) பெற்றார்.

அடுத்த ஆண்டில் தத்துவக் கலையை எடுத்துப் பயில முயன் றார். ஆனால் இரண்டு பாடங் களில் தேறியவர் மூன்றாவது பாடத்திற்குப் போதல் கூடாது என்றொரு விதி இருந்தமையால் அதனை விடுத்துச் சட்டக்கல்லூ ரியில் சேர்ந்து பி.எல். பட்டம் பெற்றார்.

எம்.எல்.பட்டத் தேர்வுக்குப் பணமும் கட்டிவிட்டார். தேர் வுக்கு நாற்பத்தைந்து நாள்களே இருந்தன. இவர் எடுத்துக் கொண்டதோ 'சொத்துரிமைச் சட்டம்' என்பது. அது மிக உழைத்துப் படிக்க வேண்டிய பாடம். ஆயினும் நாற்பத்தைந்து நாள்களிலேயே தெளிவாகக் கற் றுத் தேர்ச்சியும் பெற்றார்.

நெல்லையிலே சைவ சித்தாந்த சங்கம் அமைத்த காசு, சென்னை யிலே பயிலும்போது 'நண்பர் சங் கம்' என ஒரு சங்கத்தை உண் டாக்கினார். அதன் தலைவர் இவரே. மற்றை உறுப்பினர் மூவர். அவருள் ஒருவர் சொல் லின் செல்வர் சேதுப்பிள்ளை ஆவர். 'நான்கு பேர் போன வழி நல்வழி' என்று பாராட்டுமாறு நண்பர் சங்கம் பயனுற நடை பெற்றது.

பலரும் எட்டமுடியாப் பட்டங் களையெல்லாம் பெற்ற காசு நெல்லைக்கு வந்தார். திருமணப் பேச்சு எழுந்தது. தொடர்ந்தது; நிறைவேறவும் செய்தது. திரு நெல்வேலி நெல்லை நாயகம் பிள்ளை என்பார் திருமகளார் பிரமு அம்மாள் தமிழ்க்காசுவின் தகுதி வாய்ந்த மனைக்கிழத்தி ஆயினார்.

''பொருள் இல்லார்க்கு இவ் வுலகம் இல்லை'' என்பது பொய்யாமொழி. ஆதலின் வாழ் வுக்கு இன்றியமையாத பொருள் ஈட்டுவதற்கு ஒரு வேலை வேண் டுமே! வேலை தேடுவது அடுத்த கடமை ஆயிற்று.

சட்டத் தேர்வில் வெற்றி கொண்ட காசு வழக்கறிஞர் தொழிலை விரும்பினார் அல்லர். ஆசிரியத் தொழிலை விரும்பி னார். ஆம்! சட்டக்கல்லூரியில் கற்பிப்பவரும் ஆசிரியர் தாமே! அப்பணியை விரும்பினார். நீதி பதி சேசகிரி ஐயர் என்பார் துணையால் சட்டக்கல்லூரி ஆசி ரியர் ஆனார். பேராசிரியர் ஆவதற்கு உரிய தகுதி காசுக்கு இருந்தது. நீதிக் கட்சித் தலைவர் சர். பிட்டி. தியாகராயச்செட்டி யார் முயற்சியால் அவ்வாய்ப்புக் கிடைத்தது. காசு அவர்கள் பேராசிரியர் ஆகியதைத் தம் வெற்றியாகவும் நீதிக்கட்சியின் வெற்றியாகவும் கருதி மகிழ்ந் தார் தியாகராயர்.

பேராசிரியர் 'காசு'வுக்கு வேறொரு பெருமை காத்து நின் றது. ''உண்மை அறிவே மிகும்'' என்பது உண்மையாயிற்று.

உலகப் பெருங் கவிஞர் தாகூர். அவர் தம் குடும்பப் பெயரால் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ''தாகூர் சட்டவிரிவுரையாளர் பரிசு'' என்ற ஒரு பரிசுத் திட் டம் அமைந்துள்ளது.

சட்டக்கலை பற்றி மூன்று பொருள்கள் கொடுக்கப்பெறும். அவற்றுள் ஏதாவது ஒன்றைப் பற்றிப் பன்னிருசொற்பொழிவு கள் செய்தல் வேண்டும். அப் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர் சொற் பொழிவுச் சுருக்கத்தை எழுதி அனுப்புதல் வேண்டும். அவற்றைச் சட்ட நுணுக்கம் அறிந்த குழு ஆய்ந்து தக்கதொன்றைத் தேர்ந் தெடுக்கும். அவ்வாறு தேர்ந் தெடுக்கப்பெற்றகட்டுரையாளர், தாகூர் சட்ட விரிவுரையாளர் எனச் சிறப்பிக்கப்பெற்றுக் கல் கத்தாவுக்குச் சென்று தம் பன் னிரு சொற்பொழிவுகளையும் ஆற்றுவர். பல்கலைக்கழகம் அவருடைய செலவுகளை ஏற்றுக் கொண்டு, பத்தாயிர ரூபா பரிசு வழங்கிப் பாராட்டும். இதுவே தாகூர் சட்டவிரிவுரையாளர் பரிசுத் திட்டமாகும்.

பேராசிரியர் காசு அவர்கள் எடுத்துக்கொண்ட ஆய்வு, 'குற்றங்களின் நெறி முறைகள்' ( Principles of Criminology ) என்பதாகும். மிகச் சிக்கலான இத்தலைப்பை ஆராய்ந்து கட் டுரைச் சுருக்கம் அமைத்து அனுப்பினார். இவர் அனுப்பி யதே பரிசுக்குரியதாகத் தேர்ந் தெடுக்கப்பெற்றது. பரிசும் கிடைத்தது. அது முதல் ''தாகூர் சட்ட விரிவுரையாளர்'' என்னும் பட்டம் பேராசிரியர்க்கு வாய்த் தது. இந்திய நாடு முழுவதற் கும் பொதுவாக அமைந்த போட்டியில் வெற்றி வீரராகத் திகழ்ந்த பேராசிரியரை அன்பர் களும் நண்பர்களும் பாராட்டி மகிழ்ந்தனர்.

1919 முதல் 1927 வரை சட் டக்கல்லூரியில் பணிசெய்தார் பேராசிரியர் காசு. மாணவப் பரு வத்திலேயே அவை கூட்டி ஆராய்ந்த காசு, ஆசிரிய நிலை யுற்ற பின்னர் மறப்பரோ? மயி லாப்பூரில்''திருவள்ளுவர் கழகம்'' என ஒரு கழகத்தைத் தோற்று வித்தார். அதன் தலைவராக இருந்து அரிய பணி செய்தார். எப்பணி செய்தாலும் எங்கே சென்றாலும் செந்தமிழும் சிவ நெறியும் பேராசிரியர் காசுவுடன் ஒன்றுபட்டே நின்றன.

1927இல் ஒரு புதிய சட்டம் வந்தது. சட்டத்துறைத் தலைவ ராக சர்.சி.பி.இராமசாமி ஐயர் அமர்ந்தார். சட்டக்கல்லூரிக்கு நிலையான பேராசிரியரோ விரி வுரையாளரோ வேண்டுவதில்லை. அவ்வப்போது தக்கவர்களை அமர்த்திக்கொள்ளலாம் எனப் புதியதோர் ஆணைபிறப்பித்தார். அவ்வாணையால் இவர் பதவி விலகி வரும் கட்டாயம் உண்டா யிற்று.

சட்டக் கல்லூரிப் பணியில் இருந்து விலகிய பேராசிரியர், நெல்லைக்கு வந்தார். பொதுப் பணியும், தமிழ்ப்பணியும் அவ ரைப்போட்டிபோட்டிக்கொண்டு ஆட்படுத்தின. அப்போது வெளி யிடப்பட்ட நூல் ''இலக்கிய வர லாறு'' ஆகும்.

1929-30இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராக

இருந்து பணிபுரிந்தார். 1932இல் நெல்லை நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அதன்பின் நெல்லையப்பர் கோயில் அறங்காவலராக விளங்கினார். இவர் காலத்தேதான் தேவாரப் பாடசாலை, வேதாகமப்பாடசாலை என இரண்டு பாடசாலைகளைக் கோயிலில் தோற்றுவித்தார். கோயிலில் பல நல்ல திட்டங்களை உருப்படுத்தினார்.

1934ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தோன்றியது. அதன் தலைவராகப் பேராசிரியர் கா.சு. பிள்ளையையே தேர்ந்தெடுத்தனர். நான்கு ஆண்டுகள் தமிழ்ச் சங்கத் தலைவராக விளங்கிப் பலரும் பாராட்டும் பணிகள் புரிந்தார். அதன் பின்னர்க் காஞ்சி மாநகர் சென்று சிலகாலம் தங்கினார். அக்காலத்தில் ''பழந்தமிழ் நாகரிகம் அல்லது பொருளதிகாரக் கருத்து'' என்னும் நூலையும்,''வானநூல்'' என்னும் நூலையும் படைத்தார். அதன் பின்னர் சென்னைக்குச் சென்றார்.

பேராசிரியர் சென்னையில் இருந்தபோது அண்ணாமலை அரசர் திருப்பார்வை மீண்டும் கிடைத்தது. பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களும் துணை நின்றனர். அதனால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மீண்டும் பேராசிரியப் பதவியைப் பெற்றார். இயல்பாக இருந்த உடல் நலிவும் வளர்ந்தது. அதனிடையிலேயும் நான்காண்டுக் காலம் சீர் சிறக்கப் பணி செய்தார்.

உழைப்பதற்கு உள்ளம் மட்டும் இருந்தால் போதுமா? உடலும் ஒத்துவர வேண்டுமே! இவர்க்கு நெடுநாட்களாக இருந்த வாதநோய், கைகளை வலுக்குன்றச் செய்தது. நடையையும் தளர்த்தியது. இனிப் பணிசெய்ய இயலாது என்னும் நிலைமையும் உண்டாயிற்று.

பேராசிரியர் அவர்களின் புலமை மாண்பை உள்ளவாறு அறிந்தவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ.சுப்பையா பிள்ளை அவர்கள். ஆதலால் அவர் நலம் பெற்று நற்றமிழ்த் தொண்டு செய்தற்கு ஆவனவெல்லாம் செய்தல் கடன் எனக் கொண்டார். பேராசிரியர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் துணையுடன் தமிழ்க் காசு நெல்லை சைவ சித்தாந்தக் கழக மாளிகைக்கு வந்துசேர ஏற்பாடு செய்தார்.

கழக மாளிகையில் பேராசிரியர் தங்கினார். நோய் நீங்குவதற்குத் தக்க வகையெல்லாம் ஆய்ந்து மருத்துவம் செய்விக்கப் பெற்றது. நோயும் நீங்கினாற் போலத் தோன்றியது. தமிழன்பர்களும் உற்றார் உறவினரும் மகிழ்ந்தனர். எனினும் இறைவன் எண்ணத்தை எவரே அறிவார்? நோய் மீண்டும்முதிர்ந்தது. இனித் தீராது என்னும் நிலைக்கு சென்றுவிட்டது. அந்நிலையில் பேராசிரியரின் மாமனார் நெல்லை நாயகம் பிள்ளை அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பெற்றார். 30.4.1945ஆம் நாள் அம்மை அம்பலவாணர் திருவடியை நினைந்து பேருறக்கத்தில் ஆழ்ந்தார்.

அருமை மனைவியார் பிரமு அம்மாள் ஆருயிர்த் தலைவரைப் பிரிந்து ஆறாத் துயருற்றார். அத்துயரிலேயே ஆறு திங்கள் அளவு உயிர் தாங்கி நின்றார். பின்னை, அவரும் இறைவன் திருவடிக்கு ஆளாயினார்.

பேராசிரியர் அவர்களுக்கு மக்கள் மூவர் உளராயினர். அவர்கள் மீனாட்சி சுந்தரம், திருநாவுக்கரசு, மங்கையர்க்கரசி என்பார்.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்'' என்பது வள்ளுவர் வாய்மொழி! காசு விட்டுச் சென்ற செல்வங்களை இவ்வளவு என்று வரையறுக்க முடியுமோ? வரலாற்று நூல்கள், ஆராய்ச்சிநூல்கள், சமய நூல்கள், அறிவுச் சுடர் நூல்கள், கதைநூல்கள், கலை நூல்கள், பதிப்பு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆங்கில நூல்கள், சட்டநூல்கள், கட்டுரைகள் என்னும் பல்வேறு தலைப்புகளில் நாற்பதுக்கு மேற்பட்ட நூல்கள் தமிழுலகுக்குக் காசு வழங்கிய அழியாச் செல்வங்களாகும்.

பேராசிரியர் காசு அவர்கள் இதழாசிரியராகவும் விளங்கினார். 'மணிமாலை' என்பது இவர் நடத்திய திங்கள் இதழ், அது ஓராண்டே நடைபெற்றது. அதில் வெளிவந்த கட்டுரைகள் எல்லாமும் இவரால் எழுதப்பட்டனவேயாகும். ஒன்பது பகுதிகளாகப் பிரித்து ஒன்பது துறைகளில் ஒருவரே கட்டுரை எழுதுவது எத்தகைய அரிய செயல்!

## நினைவாற்றலுக்கு ஒரு கா. சு

**பே**ராசிரியர் கா சு., நினைவாற்றலில் வல்லவர். மாணவப் பருவத்திலேயே இந்தத் திறமை அவரிடம் மண்டிக் கிடந்தது.

அவர் இடைநிலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்த சமயம், ஆங்கிலப் பேராசிரியர் அந்தோணி என்பவர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவர் சொல்லச் சொல்ல, மாணவர்கள் அதனை எழுதிக் கொண்டிருந்தனர். ஆனால் கா சு மட்டும் எழுதாமல், பேராசிரியரின் உரையைச் செவிமடுத்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ணுற்ற பேராசிரியர் பாடம் சொல்லி முடித்ததும், எழுதியதைப் படிக்குமாறு மாணவர் கா சுவுக்குக் கட்டளையிட்டார். உடனே கா சு, பேராசிரியர்சொல்லியதில் எந்தவித மாற்றமும் இல்லாமல் முழுமையாகச் சொல்லி முடித்தார். பேராசிரியர் வியப்பில் ஆழ்ந்தார்; உடன் பயின்ற மாணவர்கள் எல்லாரும் அதிசயித்துப்போயினர். அத்தகைய நினைவாற்றல் கா சுவிடம் உறைந்திருந்தது.

## நம்முடைய மொழி

**ந**ம்முடைய மொழியை நாம் கண்போல் காத்து வருகிறோம். அந்தக் கண்ணில் சிறு துரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும். அந்த நேரத்தில் யாராவது ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம். இது பட்டவர்களுக்குத்தான் தெரியும். கண்ணுக்கு மை இடுவது போல் பிற மொழிகளைப் பயன் படுத்த வேண்டும்; மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ, அதுபோல் பிறமொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலைமையை உண்டாக்கும்.

—பேரறிஞர் அண்ணா

# நான் கண்ட மாத்தமிழ்த் தெய்வம்!

**பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்**

**அ**னுபவமற்ற இளைஞனாக நான் 1930-இல் என் குடும்ப வறுமை நீக்கத் தக்க பணிநாடி நாகர்கோவிலிலிருந்து புகைவண்டிக்கட்டணம் மட்டும் சட்டைப் பையில் கொண்டு, சென்னை புறப்பட்டேன். என் உறவினர் ஒருவரிடமிருந்து நெல்லை கா.சு. பிள்ளை அவர்களுக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் பெற்றுச் சென்றேன்.

நெல்லை வடக்குத் தேர் வீதியில் மணிவாசக மன்றம் என்ற மேல்வரிப் பலகை தொங்கிய மாளிகையை அடைந்தேன். பெரிய கம்பளம் விரித்து அதில் அமர்ந்து திருநீறும் தாழ்வடமும் அணிந்த முனிவர் ஒருவரைக் கண்டேன். பூசை முடிந்ததும் நான், ''கா. சு. பிள்ளையவர்களைப் பார்க்க வேண்டும்'' என்றேன். முனிவர், ''நான்தான் கா. சு. பிள்ளை! அமருங்கள்'' என்றார். ஒரு பணியாளை அழைத்து மோர் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். பருகிக் கொண்டே கடிதத்தை அவரிடம் கொடுத்து, ''நான் ஏழைக் குடும்பத்தவன். பணி நாடிச்சென்னை செல்கிறேன். வழியில் மதுரை, திருச்சி, தஞ்சை, சிதம்பரம் ஆகிய நகரங்களோடு செல்கிறேன். தமிழகத் தலைவர்களுக்குப் பரிந்துரைக் கடிதங்கள் தரும்படி வேண்டுகிறேன்'' என்றேன்.

நான் கொடுத்த கடிதத்தையே பிரிக்காமல் முன் இருந்த பெட்டியிலிருந்து ஒரு கடிதக் கட்டையும் தாள் உறைகளையும் எடுத்தார். மதுரையில் பி.டி. ராஜன், பெரும் புலவர் கார்மேகக் கோனார், கூட்டுறவுத் துறை மாவட்டத் தலைவர் சி.டி. நாயகம், திருச்சியில் தேவர்பெருமான், தஞ்சையில் தமிழவேள் உமாமகேஸ்வரம் பிள்ளை, சிதம்பரத்தில் கல்யாண சுந்தர முதலியார், சென்னையில் திராவிட இயக்க மூலவர் டாக்டர் சி. நடேசமுதலியார், தலைவரை ஆக்கும் தலைவர் (King Maker) என்று புகழ்பெற்ற பி.என். மார்த்தாண்டம் பிள்ளை, 'திராவிடன்' ஆசிரியர் ஜே. என். கண்ணப்பர் ஆகிய இத்தனை பேருக்கும் தனித்தனி மடல்கள் எழுதி, தாள் உறைகளில் முகவரி எழுதி, பட்டு நூல் கயிற்றால் கட்டாகக் கட்டி அம்முனிவர் என்னிடம் கொடுத்தார். ''சிவபெருமான் பிச்சாடனர் வடிவாகி ஏழைகளின் துயரங்களை அறிந்தவர். அவர் உங்களுக்கு உதவுவார்'' என்று எனக்கு விடை தந்தார்.

இந்த முனிவர் தான் நெல்லை மக்களால் காசு. பிள்ளை என்றும், எம். எல். பிள்ளை என்றும் அன்புடனும் மதிப்புடனும் அழைக்கப்பட்டவர். தமிழ் மாமலை, சைவப் பெருந்தலைவர், தமிழகத்தின் முதல் ஆராய்ச்சியாளர், தமிழ் இலக்கிய வரலாற்றை முதன் முதல் எழுதியவர் என்ற பன்முகப் புகழுக்கு உரியவர் இவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் எம். ஏ. பட்டம் பெற்றவர் என்ற தனிச் சிறப்பு அவருக்கு உண்டு. வழக்கறிஞர் துறைக்குரிய எம். எல். பட்டத்தைப் பெற்று அத்துறையில் தாகூர் சொற்பொழிவுப் (Tagore Law Award) பரிசு பெற்ற பெரும் சிறப்பும் அவருக்கு உண்டு. இத்தனை பல துறைச் சிறப்பும், அவை தெரியாமல் மறைக்கும் முனிவர் தோற்றமும் உடைய ஒருவரை நான் பெரும்புலவரென்றோ, பேர் அறிஞர் என்றோ, பெருந்தலைவரென்றோ கூறினால் போதாது. இதனாலேயே அவரை மாத்தமிழ்த் தெய்வம் என்று குறிப்பிட்டேன்.

இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து, நான் காரைக்குடியில் ஆசிரியராய் இருந்த பொழுது தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது எதிரே முனிவர் கா.சு. பிள்ளை நடந்து வருவதைக் கண்டு நான் வியப்புற்றேன். அவரோ, ''என்ன அப்பாதுரை, நல்ல நிலையில் இருக்கின்றீர்கள் என்று கேள்விப்பட்டேன். இப்பொழுது இங்கே தான் வேலையா?'' என்றார். இவ்வளவு காலம் கழித்தும் என்னை நினைவு வைத்துக் கொண்டு என்னைப் பெயரிட்டு அழைத்த அவர் அன்பாற்றலைக் கண்டு நான் வியந்தேன். என் நிலையை எடுத்துக் கூறினேன். காரைக்குடி தேசிய வாலிபர் சங்கத்தில் சைவச் சொற்பொழிவாற்ற அவர் வந்திருப்பதாக அறிந்தேன். ''நான் தங்களைப் பார்க்க விரும்புகிறேன். தாங்கள் எங்கே தங்குகிறீர்கள்?'' என்று அவரிடம் கேட்டேன்.'' ''சைவத் திருமடத்தில்தான். அங்கேதான் செல்கிறேன்; வேண்டுமானால் என்னுடன் வாருங்கள்' என்றார். நான் உடன் சென்றேன்.

காரைக்குடி சிவன் கோவில் தெப்பக்குளத்தின் கீழ்புறம் இருந்த ஆண்டிகள் மடத்தில் ஆண்டிகளுடன் ஆண்டியாக கா.சு பிள்ளை அமர்ந்து பேசினார். 'ஆண்டிகளுடன் ஆண்டியாகவா நீங்கள் இருக்க வேண்டும்'' என்று நான் எனக்குள் முனகிக் கொண்டேன். அவரோ அதைக் கேட்டு ஒரு சிறு சொற்பொழிவு ஆற்றினார். ''ஆண்டி என்ற தமிழ்ச்சொல் ஆண்டவன் என்பதன் மருவு ஆகும். ஆண்டான், அடிமை என்ற தொடர், கடவுளையும் பக்தனையும் குறிக்கும். ஆண்டவன் பெயரையே அடியவர் சூட்டிக்கொள்ளலாம். அம்முறையில் தமிழ்க் கோவில்களில் ஆண்டவன் பூசனையைப் பல இடங்களில் **ஆண்டிகளே நடத்துகின்றார்கள்.**



1840வரை பழனியில் ஆண்டிகளே பூசனை செய்தனர். முருகனை நாம் இன்றும் பழனியாண்டி என்றும், ஆண்டிப்பண்டாரம் என்றும் கூறவில்லையா?'' என்று தமிழ்ச் சொல்லாராய்ச்சி நடத்தினார் கா.சு. பிள்ளை.

தமிழ்த்தெய்வம் கா.சு.பிள்ளை அவர்கள் தமிழ்ப் புலமைத்துறையிலும் தமிழர் சமயத் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும் ஒப்புயர்வற்றுத் தலைவர்க்குத் தலைவராய், முடிசூடா மன்னராய் விளங்கினார். அம்முறையில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், நாவலர் சோம சுந்தரபாரதியார், ஆசிரியர் மறைமலை அடிகளார் ஆகிய தமிழ்த் தலைவர்கள் நெல்லை

வரும்பொழுது தமிழ்த் தெய்வத்தைக் கண்டு அளவளாவாமல் செல்வதில்லை. இது தமிழ்ப் புலவர்க்கு மட்டும் உரிய வழக்கமன்று. தந்தை பெரியார் ஈ.வெ.ரா. போன்ற அக்கால அரசியல் தலைவர்கள் அத்துணைப் பெரும் தமிழ் பற்றிய தங்கள் ஐயங்களை அவரிடமே சென்று கேட்டு அறிந்து கொள்வதே வழக்கமாகக்கொண்டிருந்தனர். இவ்வாறு இத்தமிழ்த் தெய்வம் பழமைக்கும், புதுமைக்கும், தமிழுக்கும், ஆங்கிலத்திற்கும், சமயத்துறைக்கும் சட்டத் துறைக்கும், வரலாற்றுத்துறைக்கும், ஆராய்ச்சித் துறைக்கும், அறிவுத் துறைக்கும், பண்புத் துறைக்கும் இடையே ஓர் ஒப்பற்ற தனிப் பெரும் பாலமாய் அமைந்திருந்தார்.

காந்தியடிகள் போன்ற ஒரு தென்னாட்டு மகாத்மாவாக, அவரினும் பழுத்த முனிவராக இத்தமிழ்த் தெய்வம் விளங்கினார். காந்தியடிகளின் கோயில் நுழைவு இயக்கத்தைத் திருவாங்கூர் அரசர் சித்திரைத் திருநாள் மதித்துக் கோயில்களை எல்லா மனிதர்கட்கும் திறந்து விட்டதற்கு நெடுநாள் முன்னரே திருநெல்வேலியில் கோயில் தக்காராக இருந்த இத்தமிழ்த் தெய்வம் அதை வழக்குமன்றத் தீர்ப்பு பெற்றே சாத்திரப்படி செய்து முடித்திருந்தார். ஆகம முறைப்படி பூசை செய்பவர் மட்டும் கருவறைக்குள் செல்லலாம் என்றும், மற்றஎல்லா சைவ மக்களும் சிவன் கோயில்களுக்குள் எல்லா இடத்துக்குள்ளும் செல்லலாம் என்றும் அவர் வழக்கு மன்றத் தீர்ப்புப் பெற்றபோது மிகச் சிறந்த புரட்சியாக இது அறிஞர்களால் வரவேற்கப் பட்டது.

கலைமகள் இருக்குமிடம் திருமகள் இருக்கமாட்டாள் என்றும், தமிழ்ப் புலவரிடம் ஆங்கிலப்புலமை இராது என்றும், மொழி இலக்கிய ஆராய்ச்சித் துறைத் தலைவர் சமயத் தலைவராய் இருக்கமாட்டார் என்றும், சமயத் தலைவர் முற்போக்கான சீர்திருத்தவாதியாகவோ பகுத்தறிவாளராகவோ இருக்க முடியாது என்றும், அரசியல் தலைவர் சிறந்த பண்புப் பழமாக இருக்க மாட்டார் என்றும் உலகினர் பொதுவாகக் கருதுவர். திரு. கா. சு. பிள்ளை அவர்கள் இதனைப் பொய்யாக்கி, கல்வியும் செல்வமும், சமய அறிவும், சட்டஅறிவும், பழமைச் சமயப் பண்பும், புதுமைச் சீர்திருத்தப் பண்பும், பகுத்தறிவுப் பண்பும் எல்லாம் ஒருங்கமையப்பெற்ற மாத்தமிழ்த் தெய்வமாய்த் திகழ்ந்தார்.

# காசுவின் கருத்துரைகள்

### தொழிற்கல்வி வேண்டும்

நல்லொழுக்கமும் அவசியக் கல்வியும் (கட்டாயக் கல்வி) பயில்விக்கப்பட்ட மாணவர்களுக்கு, பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேல் அவரவர் மனப்பான்மைக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு தொழிற்கல்வி பயிற்றுதல் வேண்டும். அல்லது தக்க நூற்கல்வி பயிற்றுதல் வேண்டும். செல்வர்கள் கல்வியாளர்களோடு கலந்து தொழிற் கல்விக்கு ஆவன செய்தல் வேண்டும்.

### செய்தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆற்றல் பிறவியில் உண்டு. அத்தொழிலில் அவர் ஈடுபடல் நன்று. பாவமற்ற தொழில் எதனைச் செய்தாலும் இழிவில்லை. தொழிலில் உயர்வு தாழ்வு என்பது இல்லை.

### பெண்ணின் பெருமை

பெண்கள் போதகாசிரியராய் வேலை பார்ப்பதில், பெண் கல்லூரிகளில் அவர்கள் அமர்தல் மிகவும் பொருத்தமாகும். அவர்கள் வழக்கறிஞர்களாய் இருப்பதற்குத் தகுதியுடையவர்களே (கண்ணகியார் சான்று)

அவரவர் ஆற்றலுக்கும் தன்மைக்கும் ஏற்ற தொழில்கள் செய்வதற்கும் வேலை நியமனம் பெறுவதற்கும் பெண்பாலர் என்ற காரணம் தடையாக இருத்தல் கூடாது.

தமிழர்தம் ஆதி நூல்களில் ஆண் மக்களுக்குப் பெண் மக்கள் அடிமை என்ற கருத்தில்லை.

### ஏழைக்குத் தொழில் தருக!

பிச்சைக்காரர்களுக்குத் தருமம் செய்ய விரும்பும் மக்கள் நன்கொடைகளை ஒருங்கு சேர்த்து ஏழைகளுக்குத் தொழிலும் உணவும் உதவும் நிலையங்களைக் கோயில் அலுவலர்கள் நிறுவி நடாத்தவேண்டும்.

### கோயில்களில் புனிதம் வேண்டும்!

கோயில்களில் மூலத் தானங்களையும் பிற இடங்களையும் எப்பொழுதும் புனிதமாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிறித்துவக் கோயில்களும் மகம்மதிப் பள்ளிகளும் மனங்கவர் புனிதத்தோடு விளங்குவது போல் நம்முடைய ஆலயங்கள் தூய்மையோடு திகழ்வதில்லை.

### தமிழர் சமயம்

தமிழ்ச் சைவ வைணவ சமயங்கள் அடிப்படையில் ஒத்த கருத்துடையன. சைவம், வைணவம் என இருபிரிவடங்கிய ஒரு சமயத்தைத் தமிழர் சமயமென்று கருதி அதனைத் தமிழ் மக்கள் போற்றுவாராக.

# நெசவாளர்களுக்கு உதவும் கூட்டுறவுச் சங்கங்கள்


கே. மலைச்சாமி இ.ஆ.ப.

இயக்குநர்,
கைத்தறி மற்றும் துணிநூல் துறை



நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலத்திற்கு முன்னே தோன்றி நின்று நிலைத்த தொழில்தான் கைத்தறித் தொழில். கலை அழகும் நுணுக்கமும் நிறைந்த அருந்தொழில். கணிசமான மக்களின் உழைப்பிற்கும் பிழைப்பிற்கும் பாத்திரமான பழந்தொழில்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், இத்தொழிலுக்கு உயர் தனிச்சிறப்புண்டு. தமிழன் மொழியால், இனத்தால், நாட்டால், பண்பாட்டால்சிறந்தவன். தனித்தன்மை பெற்றவன். ''தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு; அமிழ்தம் அவர்தம் மொழியாகும்; அன்பே அவர்தம் வழியாகும்'' என்ற நாமக்கல் கவிஞரின் கூற்றுக்கு முழுக்க முழுக்க பாத்தியமானவன். இத்தகு பெருமைக்குரிய தமிழன், கலையையும், கலாச் சாரத்தையும் தம் வாழ்க்கையோடு பின்னிப் பிணைத்தவன், ஒன்றறக் கலந்தவன். அதனால் தான் அவன் செய்யும் தொழிலும் கூட, அக்கூறுபாடுகளைப் பளிச்சிட்டுக் காட்டுகின்றன. அந்த வகையில் தமிழகத்தில், கைத்தறித் தொழில் முந்திய மூத்த தொழில் மட்டுமல்ல; கலை அம்சம் கோலோச்சும் - கொப்பளிக்கும் ஒப்பில்லா உயரிய தொழிலுமாகும்.

சின்னச்சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறி ஆடைகளின் திறத்தால், தரத்தால், ரகத்தால் ஆடை உலகில் ஓர் உச்சக்கட்டத்தை எட்டி, ஒரு உயர்தனி இடத்தைத் நக்க வைத்திருக்கிறது தமிழகம். இன்றும்கூட, பளபளக்கும் பட்டுச் சேலைகளுக்குக்காஞ்சிபுரம், அதை அடுத்து வரும் ஆரணிப் பட்டு, கும்பகோணம் பட்டு; பட்டு வேட்டிகளுக்குச் சேலம், ராசிபுரம். இயற்கைப் பட்டிலே நின்று விடாது செயற்கைப் பட்டிலும் எழில் ரகங்கள் உண்டெனக் காட்டும் சின்னாளப்பட்டி, மதுரை, பரமக்குடி; நாடு போற்றும் போர்வை, துண்டு, தலையணை உறை ரகங்களுக்கு நாட வேண்டிய இடங்கள் சென்னிமலை, கரூர், ஈரோடு. நடுத்தர வகுப்பினர், நலிந்த மக்கள் விரும்பும் கைலிகளைக் கணிசமான அளவிற்கு உற்பத்தி செய்து புகழ் ஈட்டிய தென் ஆர்க்காடு மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம், டெர்ரி துண்டு, ஜாக்காடு துண்டு தயாரிப்பதில் தலைசிறந்த மதுரை, ஜமக்காளப் புகழ் பவானி - இப்படியாக ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு பகுதி என்ற வகையில் நுணுக்கத்தையும், தனித்தன்மையையும் பெருக்கி மாநில ரீதியில், தேசிய ரீதியில், ஏன் உலக ரீதியில் புகழ்க் கொடி நாட்டி இத்தொழிலால் தமிழகம் பெருமை பெற்று விளங்குகிறது.

இத்தனை சாதனைக்கும், அதற்கான சாத்தியக்கூறுகளுக்கும் காரணம் இங்கே அமைந்துள்ள அடிப்படை வசதிகள், தரப்படும் ஆதரவுகள்தான்.

ஆரம்பக் கட்டத்தில் நெசவாளப் பெருமக்கள் தனித்தனியாகச் சிதறிக் கிடந்தனர். தனியார் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தனர். சுரண்டப்பட்டனர். வறுமையால் வாடினர். ''வாழத் தொழிலின்றி வறுமையால் சாவதெல்லாம் கூடித் தொழில் செய்யாக்குற்றத்தால்'' என்ற தத்துவத்தை உணர்ந்த காரணத்தால், இவர்களுக்கென ஒரு அமைப்பை அதாவது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க முனையப் பட்டது. அந்த வகையில் தமிழகத்தில் உள்ள சுமார் 5 இலட்சம்





கைத்தறிகளில் சுமார் 3.92இலட்சம் கைத்தறிகள் அதாவது 71% தறிகள் கூட்டுறவுக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. அகில இந்திய ரீதியில் தமிழகத்திற்கு இதில் முதலிடம் உண்டு. தமிழகத்தில் இன்று 1667 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதோடு நில்லாது ஆண்டு ஒன்றுக்கு 20,000 தறிகளைக் கூட்டுறவு அமைப்புக்குள் கொணரும் திட்டம் உள்ளது. தனியார் பிடியில் சிக்கிக் கடன்பட்ட நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் கொணருமுன், அவர்கள் பட்ட கடனைத் தீர்ப்பதற்கும், உறுப்பினர் கட்டணம் நுழைவுக் கட்டணம், பங்குத் தொகை போன்றவற்றைச் செலுத்துவதற்கும், வங்கிகள் மூலமாகவும், அரசு மூலமாகவும் குறைந்த வட்டியில் கடன் அளிக்கப்பட்டு, அவற்றைச் சன்னஞ் சன்னமாக தாம் ஈட்டும் ஊதியத்திலிருந்து பிடிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கென நடப்பு ஆண்டில் அரசு செலவிடும் தொகை ரூ.30 இலட்சமாகும். நெசவாளர் சங்கங்களில் செயல்திறம், பொருளாதாரத்திறம் ஓங்க, அரசே மேற்படி சங்கங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.1 இலட்சம் வரை பங்குத் தொகையாக முதலீடு செய்கிறது. நடப்பு ஆண்டில் மட்டும் ரூ.100 இலட்சம் இதற்கெனச் செலவிடப்படும்.

இவ்வாறாகக் கூட்டுறவுச் சங்கத்திற்குள் கொணரப்பட்ட நெசவாளர் பெருமக்களின் தொழிலுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் மூலப்பொருளாகிய நூலைத் தரமானதாகவும், நியாயவிலையிலும் கிடைக்க வகைசெய்யப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பு ஆலைகள் நிறுவப்பட்டு, நெசவாளர்களுக்குத்தேவையான நூலைத் தாராளமாகவும் ஏராளமாகவும் உற்பத்தி செய்து, நெசவாளர்களுக்கென ஏற்பட்ட கூட்டுறவுச் சங்கமாகிய கோ-ஆப்டெக்ஸ் மூலமாக பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு விநியோகிக்கப்படும் நூலின் விலையை நிர்ணயிக்க, கைத்தறி இயக்குநர் தலைமையில் அரசே ஒரு குழுவை நியமித்துள்ளது. ''கொள்வதும் மிகை கொள்ளாது கொடுப்பதும் எல்லோரும் ஏற்கக் கூடியது'' என்றாலும், கூட்டுறவு நெசவாளர் நலத்தைக் கருதி, நிர்ணயிக்கப்படும் நூலின் விலை வேண்டுமென்றே வெளிச்சந்தை விலையைவிடக் குறைவாகவே நிர்ணயிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அளவுக்கு மீறி நூல் விலை ஏறியுள்ள இக்காலத்தே, இதுபோன்ற முறை, கூட்டுறவு சங்கத் தறியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.

கோ-ஆப்டெக்ஸ் மூலம் விநியோகம் செய்யப்பட்ட நூலை, கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தித் திட்டப்படி, தொழில்நுட்ப அறிவுரைப்படி கூட்டுறவுச்சங்கங்கள் ஆடையாக நெய்த பின், அவற்றை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமே பெற்று நாடுமுழுவதும் பரவிக்கிடக்கின்ற தமது 500-க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் மூலமாக விற்க ஏற்பாடு செய்கிறது. இவ்வாறு விற்கப்படும் சரக்கு ஏறத்தாழ 50 சதவீதமாகும்.

சுருங்கக் கூறின், மூலப்பொருளைக் கொடுப்பது, ஆடை ஆக்கியபின் பெரும்பகுதியை விற்பனை செய்வது ஆகிய இரு பெரும் பொறுப்பைச் சங்கங்களுக்காக கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. இதுபோக, சங்கங்களில் சரக்கு மிஞ்சி, தேங்கிவிட்டால், ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை தள்ளுபடி மானியம் (Rebate) அளித்து அதாவது குறைந்த விலையில் விற்க ஏற்பாடு செய்து தேங்கிய சரக்கு தீர்க்கப்படுகிறது. இவ்வாறு விலை குறைத்து Rebate கொடுத்து விற்பதால், ஏற்படும் நட்டத்தைச் சங்கங்களுக்கு மானியமாக அரசு கொடுத்து ஈடுகட்டுகிறது. இவ்வாறு அரசு அளிக்கும் தள்ளுபடி, சாதாரணமாக விற்கும் விலையிலிருந்து 20 சதவீதமாகும். சென்ற ஆண்டில் மட்டும் அரசு அளித்த மானியம் ரூ.37.25 கோடியாகும். இதைத்தவிர கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் 10% தள்ளுபடி தருகிறார்கள்.

சுருங்கக்கூறின் நெசவாளப் பெருமக்களைக் காக்க மூலப்பொருள் மலிவு விலையில் கொடுக்கப்படுகிறது; உற்பத்தி செய்யப்பட்ட துணிகளைக் கோ-ஆப்டெக்ஸ் மூலமாகக் கொள்

முதல் செய்து விற்கப்படுகிறது. மிஞ்சிய,தேங்கிய துணிகளைச்சங்கங்களே குறைந்த விலையில் விற்றுக் கொள்ள மானியம் அரசால் வழங்கப்படுகிறது. இந்த அளவிற்கு அரசின் பேருதவியை ஒட்டுமொத்தமாகப் பெறும் பேற்றைக் கூட்டுறவு நெசவாளப் பெருமக்கள் பெற்ற அளவிற்கு வேறு சமுதாயம் பெற்றதாகத் தெரியவில்லை.

சொந்தத்தில் தறியில்லா நெசவாளர்களுக்கென, தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படுகின்றன. சுமார் 100 தறிகளைக் கொண்ட கூடத்தை அரசே அமைத்து, அதில் தறியற்ற நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கி, ஊதியம் வழங்குகிறது. இம்மாதிரியான தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை தமிழகத்தில் 179 அமைக்கப்பட்டு, செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 9 தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் முழுக்க முழுக்க ஆதி திராவிடப் பெருமக்களுக்கானது என்பது குறிப்பிட்டுக் காட்டத்தக்கது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தறிகளின்உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் வேலையை எளிதாக்க, சுற்றுச் சூழ்நிலையை வசதியாக்க, தறிகளை நவீனப்படுத்தும் நல்ல திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுப்புதுக் கருவிகள், இணைப்புகள் வழங்குவதும் நவீன யுக்திகளைச் செயல்படுத்தும் வசதிகளைச் செய்து தருவதும் ஆகிய பல உதவிகள் இத்திட்டத்தில் அடங்கும். இது ஒரு அருமையான திட்டம். இதற்கான செலவில் 3ல் ஒரு பகுதியை மான்யமாகவும், மீதியை சொற்ப வட்டிக்கடனாகவும் அரசு வழங்குகிறது. ஆகும் செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொள்கின்றன. நடப்பு ஆண்டில் மட்டும் இதற்கென,சுமார் ரூ.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

போட்டி நிறைந்த இந்தக் காலத்தில், புதுப்புது ரகங்களை உற்பத்தி செய்யவும், நவீன யுக்திகளைக் கடைப்பிடிக்கவும், தரத்தையும், திறத்தையும் பெருக்கவும்,கூட்டுறவு நெசவாளர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிற மாநிலங்ளுக்கு நம்மவர்களை அனுப்பி அங்குள்ள தொழில் நுட்பங்களையும் ஏனைய கூறுபாடுகளையும் கண்டுவரவும், வகை செய்யவும் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அடுத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வனே இயங்கப் போதுமான நிதி உதவி வேண்டும். குறிப்பாக, காசுக்கடன் வசதி வேண்டும். இப்பெரும் உதவியை தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கி (Nabard) கூட்டுறவு வங்கிகள் மூலம் அளிக்கிறது. இதற்கான உத்தரவாதத்தைத் தமிழக அரசு அளிக்கிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கான காசுக்கடனும், நிதி உதவியும் அதே வகையில் அளிக்கப்படுகி கிறது. இந்த வகையில் பிரதம சங்கங்களுக்குச் சுமார் ரூ.80 கோடியும், கோ-ஆப்டெக்சுக்கு ரூ.75 கோடியும் சென்ற ஆண்டில் குறைந்த வட்டியில் வழங்கப்பட்டுள்ளது. இது இந்திய ரீதியில் 58 சதவீதமாகும். அதாவது ஏனைய மாநிலங்கள் எல்லாம்கூடி, பெற்ற அளவு 42%; நம் மாநிலம் மட்டும் 58 சதவீதம். இது ஒரு மிகப் பெரிய சாதனை என்பது தெளிவு.

ஒரு தொழிலை உயர்த்த வேண்டின் அதில் ஈடுபட்டோர் நலம் பேணப்படவேண்டும். கைத்தறித் தொழில் வாழ, வளர வகை செய்த அரசு,அத்தொழிலில் ஈடுபட்ட நெசவாளர்கள் நலத்தில் பெரிதும் அக்கறை காட்டியதோடு ஆக்கப்பூர்வமான அருந்திட்டங்களைச் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இத்திட்டத்தின்படி, நெசவாளர்கள் தாம் ஈட்டும் ஊதியத்தில் ரூபாய்க்கு 6 காசு வீதம் செலுத்த வேண்டும். அரசு ரூபாய்க்கு 3 பைசா வீதம் செலுத்தி, சேரும் தொகைக்கு 7% வட்டிபோட்டு உறுப்பினர் 55 வயதுக்குள் இறக்க நேரிடின் வாரிசுதாரருக்கு வட்டியும், முதலும் கொடுக்கப்படுவதோடு காப்புறுதித் தொகையாக ரூ. 3000 மும், கோ-ஆப்டெக்ஸ் மூலமாக ரூ.2000 மும் ஆகக்கூடி ரூ.5000 வாரிசுக்கு வழங்கப்படுகிறது. அதாவது ஆயுள்காலத்தே செலுத்திய சிறுதொகை பல்கிப் பெருகித் தன் வாரிசுதாரருக்கு வெகுவாகக் கிடைப்பதால் இத்திட்டம் நெசவாளர்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது.

இதை அடுத்து, குறிப்பிட்டுக் கூறக்கூடிய நலத்திட்டம் அவர்களுக்கெனக் கட்டப்படும் வீடு, அதையொட்டி எழுப்பப்படும் தொழிற்கூடம். உடுக்க உடை அளிக்கும் உன்னத சமுதாயத்திற்கு இருக்க இடம் வேண்டாமா? தொழில் செய்யக் கூடம் வேண்டாமா? வீட்டுடன் கூடிய கூடம் கட்டும் திட்டத்தை, மத்திய, மாநில அரசு மானியம் வழங்கி ஹட்கோ நிறுவனத்தின் கடன் உதவி பெற்று,தமிழகத்தின் பல இடங்களில் செயல்படுத்தியிருக்கின்றன. இத்திட்டம் தமிழகத்தில் செயல்படும் திறத்தை, மத்திய அரசு வெகுவாகப் பாராட்டி, மற்ற மாநிலங்களைப் பின்பற்றப்பணித்திருக்கிறது. இத்திட்டத்தின்படி ஒரு வீடும் கூடமும் கட்ட ரூ.15,000 வழங்கப்படுகின்றது. இதில் மத்திய அரசு, மாநில அரசு மானியம் ரூ.5000. எஞ்சிய ரூபாயை ஹட்கோ கடனாக வழங்குகிறது. இதில் நெசவாளர்கள் ஆரம்பத்தில் ரூ.300 செலுத்தினால் போதும்.



இவ்வாறாக, நீண்ட நெடிய பாரம்பரியத்திற்குப் பாத்தியமான இத்தொழிலைக் கட்டிக் காத்து, இதில் ஈடுபட்டவர்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உத்தரவாதம் கொடுக்கும் வகையில், தமிழக அரசும் இந்தியப் பேரரசும் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டு வருவது கண்கூடு.



# காலநடைப் பராமரிப்பில்
# கூட்டுறவுச் சங்கங்கள்

**ஏழை எளியவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவது கால்நடைகள். அவற்றை வளர்ப்பதில் கால்நடைப் பராமரிப்புத்துறை ஆற்றும் பணிகள் ஏராளம்! அதிலும் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக கிராமங்களில் வளமை கொலுவோச்சுகின்ற வரலாறு இங்கே அரங்கேறுகிறது.**

தமிழகத்தில் கால்நடைவளர்த்தல் கிராம மக்களின் முக்கிய உப தொழில் ஆகும். பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு போன்ற பல்வேறு கால்நடை வளர்ப்பு முறைகளை மேம்படுத்துவதே கால்நடைப் பராமரிப்புத் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நோக்கமாகும். வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கப்பூர்வமான கால்நடைப் பராமரிப்புத் திட்டங்களைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. சமுதாயத்தில் நலிவுற்ற சிறு, குறு விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை 'எளியவர்கள் கால்நடைப் பராமரிப்பைத் துணைத் தொழிலாகக் கொள்வதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

இதன் பொருட்டுப் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் மூலமாக மானிய விலையில் கறவைப் பசுக்கள், வேலை மாடுகள், ஆடுகள், பன்றிகள், மற்றும் கோழி இனங்கள் விநியோகிக்கப்படுவதுடன், நிதி உதவியும் அளித்துத் தமிழகமெங்கும் மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்ல ஊக்கம் அளிக்கப்படுகிறது. கால்நடைத் தீவனப்பயிர் வளர்ப்பு, கன்று வளர்ப்பு போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசு மானியங்களும் வழங்குகிறது. இத்திட்டங்களின் மூலமாகப் பழங்குடியினர், மலைவாழ் மக்கள், வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் வாழும் மக்கள் ஆகியோர் மீது தனிக்கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர். பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு சிறந்த கால்நடைப் பராமரிப்பு வசதிகளை அளிப்பதற்குக் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் மற்றும் கேந்திர கிராமத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கோழி வளர்ப்பைத் தொழிலாகக் கொண்டுள்ள ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காக, கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் துவக்கப்பட்டுள்ளன. 30-6-87 முடிய கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 157 உள்ளன. அவற்றில் 18 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சங்க அங்கத்தினர்கட்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகக் கடன் வழங்கப்படுகின்றது. கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலை

டாக்டர்
**சி. கே. கல்யாணசுந்தரம்,**
இயக்குநர்,
கால்நடைப் பராமரிப்புத் துறை.

யங்கள் மற்றும் கோழி விஸ்தரிப்பு நிலையங்கள் 29 மூலம் இன விருத்திக்கான முட்டைகளும் கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்களின் மூலமாக மாநில உதவியுடன் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஈரோட்டில் ரூ. 3.18 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. புள்ளி விவர ஆய்வின்படி தமிழகத்தில் தற்போது 1986-87-இல் முட்டை உற்பத்தி 0.44 சதவீதம் உயர்ந்துள்ளது.

### பயனடையும் உறுப்பினர்கள்

தமிழகத்தில் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக 10,551 உறுப்பினர்களும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக 1,69,667 உறுப்பினர்களும் பயன் பெற்று வருகின்றனர்.

### ஆடு வளர்ப்புச் சங்கங்கள்

தமிழகத்தில் 1971-72 ஆம் ஆண்டு முதல், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் வளர்ச்சி பெற்று வருகின்றன. 30-6-87 முடிய ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 1468 பதிவு செய்யப்பட்டுள்ளன. சங்க உறுப்பினர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுத் தரமுள்ள ஆடுகளை வாங்கிப் பயனடைகின்றனர். உறுப்பினர்களின் ஆடுகளுக்கு மருத்துவ வசதி, குடற்புழு நீக்கம், உண்ணிநீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு ஊசி போடுதல் போன்ற பணிகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் செய்து வருகின்றனர். சங்க உறுப்பினர்களின் ஆடுகட்குக் காப்பீடு (இன்ஷ்யூரன்ஸ்) செய்வதற்கு வழி வகைகள் செய்யப்படுகின்றன.

சங்கப் பேரேடுகள் கூட்டுறவு அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ், 1986-87 வரை 5,115 ஆடு அலகுகள் விநியோகிக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றன. 106.84 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### பிற விவரங்கள்

(அ) வேளாண்மை மறுநிதிக் கழகம்:

வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 39 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் ரூ. 83 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகம் ரூ. 38.21 இலட்சம் அளித்துள்ளது. தமிழக அரசு ரூ. 12.7 இலட்சம் அரசு பங்குத்தொகையாக வழங்கியுள்ளது.

(ஆ) சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம் :

மத்திய அரசால் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. ஐந்தாவது மற்றும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 20,115 யூனிட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு யூனிட் என்பது (அலகு) 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் ஆகும். ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 4500 வழங்கப்படுகிறது. அதில் சிறு விவசாயிகளுக்கு ரூ.1125 (25 சதவீதம்), நடுத்தர விவசாயிகள் மற்றும் வேளாண்மைத்தொழிலாளர்கட்கு ரூ.1500 (33 சதவீதம்) மானியமாக வழங்கப்படுகிறது. மீதியுள்ள தொகை வங்கிக் கடன் மூலம் அளிக்கப்படுகிறது. இதுவரை ரூ. 20.918 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு 905 யூனிட்டுகள் நிறுவப்பட்டு, ரூ.16.32 இலட்சம் மானியமாகவழங்கப்பட்டுள்ளது. 1987-88 முதல், யூனிட் ஒன்றுக்கு ரூ. 7,000 வழங்கப்படுகிறது.

### ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் வாழும் 5,869 பழங்குடி மக்கள் பயன் அடைந்துள்ளனர். 1976-77 முதல் 1986-87 வரை இத்திட்டத்தின் கீழ் அரசு மானியமாக ரூ. 61.90 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

### வறட்சிப்பகுதி மீட்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 1987-ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்குக் கொள்முதல் செய்யப்பட்ட விலையில் வைக்கோல் தீவனம் வழங்கப்பட்டுவருகிறது. இதற்கான போக்குவரத்துச் செலவினம் அரசு மானியமாய் வழங்கப்பட்டு, திட்டம் செயல்பட்டு வருகிறது.

### மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு மற்றும் கம்பளி நெசவுக் கூட்டுறவுச் சங்கங்கள் 4 செயல்பட்டு வருகின்றன.

### ஆட்டுப் பண்ணைகள்

சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் மேச்சேரி இன ஆடுகளும் சாத்தூர் ஆட்டுப்பண்ணையில் ராம்நாட், வேம்பூர் இன ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. ஒசூர்ப்பண்ணையில் மாண்டியா மற்றும் சொரிடல் இன ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. புதிய இன ஆடுகளை உருவாக்குவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.





# பொருளாதார நிலையை உயர்த்தும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் (i) சமுதாயத்தின் நலிந்த பகுதியினரது பொருளாதார நிலையை உயர்த்தவும் தொழிலாளர்கள், உழைப்பாளிகள் ஆகியோரது பொருளாதார நிலையை உயர்த்தவும், (ii) தேயிலை, மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவோருக்கு உதவி செய்து அவர்கள், தரம் மிக்க பொருள்கள் மற்றும் மூலப் பொருள்கள் உற்பத்தி செய்யவும், (iii) சிறு தொழில் செய்வோருக்கு உதவி செய்யவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளாகும். இயற்கையாகவே சிறு தொழிற் கூடங்கள் போதிய மூலதனம் இல்லாமல் உள்ளன. மூலப் பொருட்களைப் பெரிய அளவில் கொள்முதல் செய்ய இயலாமை, முடிவடைந்த பொருள்களை நியாய விலைக்கு விற்க இயலாமை, போதிய மூலதனம் பெற இயலாமை ஆகிய குறைபாடுகளை நீக்கத் தொழிற் கூட்டுறவு சிறந்த வழியாகும். குறிப்பாகச் சொல்லப்போனால் தொழிற் கூட்டுறவின் நோக்கங்கள் வருமாறு:

(அ) தொழிலாளர், கைவினைஞர் மற்றும் தொழில் நுண்ணியர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளித்தலும்,

(ஆ) சிறிய உற்பத்தியாளர், தொழிலதிபர், விவசாயி ஆகியோருக்கு நிதி வசதி செய்தல், தொழில் நுட்பம், விற்பனை மற்றும் நிர்வாகத்தில் உதவி செய்தல்,

(இ) நுகர்வோருக்குப் பயன்படும் வகையில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

தொழிற்கூட்டுறவினால் பயனடைந்த சில முக்கிய தொழில்களின் விவரங்கள்:

நீலகிரி மாவட்டத்தில் இதுவரை 13 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, இவை சிறு தேயிலைஉற்பத்தியாளர்களுக்குச் சேவை செய்து வருகின்றன. இந்த 13 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் சேவை செய்ய நீலகிரி மாவட்ட சிறு தேயிலை வளர்ப்போர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் என்கிற கூட்டுறவு நிறுவனமும் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து


> **தொழிற் கூட்டுறவுச் சங்கங்களால் தொழில்கள் வளருகின்றன ; உறுப்பினர்களின் பொருளாதார நிலை வளம் பெறுகின்றது.**


**வே. சங்கரசுப்பையன்,**
**இ.ஆ.ப.**
**தொழில் ஆணையர்,**
**மற்றும் தொழில் வணிக இயக்குநர்.**


சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மரவள்ளிக்கிழங்கு பெருமளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சிறு பதனிடும் தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தையில் சரியான விலை பெறுவதில்லை. இந்த மரவள்ளிக் கிழங்கு சாகுபடியாளர்களுக்கும், ஸ்டார்ச் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலை அதிபர்களுக்கும் தங்கள் பொருட்கள் சந்தையில் சரியான விலை பெற உதவி செய்யும் நோக்குடன் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 2, சேலத்திலும், தர்மபுரியிலும் முறையே 'சேகோசேர்வ்' மற்றும்' ஸ்டார்ச்சர்க்' என்கிற பெயரில் நிறுவப்பட்டு 1982 முதல் செயல்பட்டு வருகின்றன.

**தீப்பெட்டித் தொழில்**

தீப்பெட்டித் தொழில் 'டி' வகையைச் சேர்ந்த சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள், கனரகத் தீப்பெட்டி உற்பத்தியாளர்களால் பெரிதும் சுரண்டப்பட்டார்கள். சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பண்டல்களுக்குச் சரியான விலை கொடுக்கப்படாமல் இருந்து வந்தது. இச்சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பண்டல்களை மத்திய நாட்டுச் சந்தைகளில் சரியான விலைக்கு விற்றுத்தர, தீப்பெட்டி சேவைத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இச்சங்கங்கள்



தங்கள் உறுப்பினர்களுக்குத் தரமான மூலப் பொருட்களை நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து தருகின்றன. மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்வதுடன் பொட்டாசியம் குளோரேட், குச்சிகள், அட்டைகள் இவற்றையும் இச்சேவைச் சங்கங்கள் உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளன. லேபில்கள் அச்சிடுதல் மற்றும் அட்டை போர்டுகள் தயாரித்து அச்சிடுதல் ஆகியவற்றையும் இச்சேவைச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன. அனைத்துத் தீப்பெட்டிச் சங்கங்களின் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தவும், அவற்றின் தேவைகளைச் சீரமைக்கவும், மாநில அளவில் செயல்படும் தமிழ்நாடு தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் நிறுவப்பட்டுள்ளது.

தென்னை நார் உற்பத்தியில் அகில இந்திய அளவில் கேரளம் முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. பழுப்பு நார் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தென்னைத் தவிட்டைச் சரியானபடி பயன்படுத்தவும், வீணாகும் இப்பொருள்களைச் செல்வமாக்கவும், வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் தமிழ்நாடு அரசும், கயிறு வாரியமும் முயன்று வருகின்றன.

தற்பொழுது தமிழ்நாட்டில் 400 தனியார் நிறுவனங்களும், 65 கயிற்றுக் கூட்டுறவுச் சங்கங்களும் தென்னை நார்க்கயிற்றுத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தென்னை நார் எடுத்தல் ,கயிறு திரித்தல், சுருள் நார் உற்பத்தி கயிற்றுப் பாய் மற்றும் மிதியடி செய்தல், மற்றும் ரப்பர் கலந்த கயிற்றுப் பொருட்கள் உற்பத்தி செய்தல் ஆகியவற்றில் சிறந்த கவனம் செலுத்தி வருகின்றன.

தமிழ்நாடு கைவினைப் பொருட்களுக்குப் பெயர் பெற்றது. இக் கைவினைத்திறன் தஞ்சை, மதுரை, திருச்சி, திரு



நெல்வேலி ஆகிய இடங்களில் வசிக்கும். சில குடும்பங்களில் மட்டும் காணப்படுகிறது. இக் கைவினைத் திறனைப் பாதுகாக்கவும் இக் கைவினைஞர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் கைவினைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

'கைவினை' என்பது இசைக் கருவிகள் உற்பத்தி, காகிதம் மற்றும் களிமண் பொம்மைகள் செய்தல், கற்சிலைகள் வடித்தல், பஞ்சலோகச் சிலைகள் செய்தல், வெண்கல மற்றும் உலோகத்தால் செய்யப்படும் பொருட்கள், மரச் சிற்பங்கள் செய்தல், அலங்காரத் தட்டுகள் செய்தல், மற்றும் செயற்கை வைரம் தீட்டுதல் ஆகியவற்றைச் சுட்டும்.

கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்டிர்க்கும் காவல்துறை அலுவலர்களின் பெண்டிர்க்கும், மேல் வருமானம் தரும் வகையில் தையல் தொழிற்கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் சீருடை வழங்கும் திட்டத்தில் பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடைகள் வழங்கப்படுவதால் ஏறத்தாழ 4000 பெண்களுக்கு தலா ரூ. 10. 25 தினமும் பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பொறியியல் தொழிலின் மூலமும் பலர் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். கிராமப்புறங்களில் வாழும் திறன் மிக்க தொழிலாளர்கள், ஐ.டி.ஐ. கல்வித் தகுதி பெற்றோர் ஆகியோர்க்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்குடன் பொறியியல் தொழிற் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அலுமினிய அண்டாக்கள் செய்தல், பூட்டுகள் செய்தல், நெசவுத் தொழிலுக்குத் தேவையான பாபின்கள் செய்தல், எஃகு மேஜை, நாற்காலிகள், பீரோக்கள் ஆகியவை செய்தல் இத் தொழிலில் அடங்கும். அடுத்து பதனிடப்பட்ட தோலுக்கு, மேல் நாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது.

தோல் பதனிடும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவும் நோக்குடன் தோல் பதனிடும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வாணியம்பாடி, ராணிப்பேட்டை, பேரணாம்பேட்டை மற்றும் திண்டுக்கல்லில் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இரயில் வாகன்கள் தட்டுப்பாட்டினால், தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரக் கூடிய நிலக்கரியின் அளவு போதுமானதாக இல்லை. ஆகவே சில தொழில் நிறுவனங்கள் வேறு பல வகைகளில் அதிகவிலைகொடுத்து நிலக்கரியை வாங்குகின்றன. இச்



சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான விலையில் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தே வாகனங்கள் மூலம் அனுப்பிவைக்கின்றன. இச்சங்கங்கள் நிலக்கரி கோடவுன் மற்றும் எடை பார்த்தல் ஆகிய வசதிகளைக் கொண்டவை.

## கூட்டுறவுத் தொழில்பேட்டைகள்

சிறு மற்றும் மிகச் சிறுதொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் கூட்டுறவுத்தொழிற் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன. தொழிற் கூடங்கள் மற்றும் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்தல், மின்விசை விநியோகம் செய்தல், தண்ணீர் விநியோகம் செய்தல் மற்றும் சில தொழிற் கூடங்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவை இத்தொழிற் பேட்டைகளின் நோக்கமாகும். இந்த ஒதுக்கீட்டிற்காக இத்தொழிற் பேட்டைகள் மிகவும் குறைவான ½% வட்டி அதாவது 3 முதல் 6 வரை வசூலிக்கின்றன.

சென்னை, பொள்ளாச்சி, சிவகாசி, சேலம் ,தூத்துக்குடி ஆகிய இடங்களில் கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் செயல்படுகின்றன.

## கூலி ஒப்பந்த சங்கங்கள்

தொழில்களில் கூலி ஒப்பந்தம் என்பது சட்டப்படி கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒன்றாகும். தமிழ்நாட்டில் இது சீரிய முறையில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களால் அமல்படுத்தப்படுகின்றது. இச்சங்கங்கள் மூலம் தற்காலிகப் பாட்டாளிகள் நிரந்தரமாக வேலை பெறவும், முழுச்சம்பளம் பெறவும் ஏதுவாகிறது. இடைத் தரகர்கள் மற்றும் ஒப்பந்தக் காரர்களின் சுரண்டல் தவிர்க்கப்படுகிறது. இவ்வகையில் முதல் முதலில் பதிவு செய்யப்பட்ட சங்கம் எம்.ஆர்.எல். கூலி ஒப்பந்த சங்கமாகும். இது 1983-இல் பதிவு செய்யப்பட்டது.

நியாயமான கூலி, மொத்த இன்ஷ்யூரன்ஸ், பிராவிடெண்ட் நிதி, மருத்துவக் கட்டணம் வழங்கல், குறைந்த விலையில் உணவுப் பண்டங்கள் வழங்கல் இன்னும் பலவும் இச்சங்கச் செயல்பாடுகளில் அடங்கும்.

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 1956-இல் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இச்சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல் மிகக் கடினமாகியது. ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருந்த கூட்டுறவு வங்கிகள் விவசாயம் மற்றும் நுகர்வோர் கடன் ஆகியவற்றில் மட்டும் கவனம் செலுத்தி வந்தன. மத்திய அரசின் செயற்குழு ஒன்றின் பரிந்துரையின் பேரில் தொழிற் கூட்டுறவுகளுக்கென்று பிரத்தியேகமாக ஒரு கூட்டுறவு வங்கி ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிற்று. ஆகவே 1961ஆம் ஆண்டில் இவ்வங்கி சென்னையைத் தலைமையகமாக கொண்டு இயங்கத் தொடங்கியது. அநேகமாக எல்லாத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் இதில் உறுப்பினர்களாகி இவ்வங்கியின் மூலம் நிதிவசதி பெற்று வருகின்றன.

ஆகவே தமிழ்நாட்டில் மொத்தம் 588 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல் பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த உற்பத்தி ரூ. 100 கோடியாகும். இச் சங்கங்களில் 98,017 பேர் பணிபுரிகின்றனர். இச்சங்கங்களுக்குத் தமிழக அரசு பெருமளவில் கூட்டுறவு வங்கிகள் மூலமும் மூலதனத்தில் பங்கிடு கொள்வது மூலமும் நிதியுதவி செய்து வருகிறது. கைவினைஞர்களும், சிறுதொழில் புரிவோரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடையக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பொது மக்கள் இச்சங்கங்களின் உற்பத்திப் பொருட்களை வாங்குவதன் மூலம் இவற்றிற்கு ஆதரவு தரக் கேட்டுக் கொள்கிறேன்.



5-11-87 அன்று ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் முன்னிலையில், மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நல அமைச்சராகப் பதவியேற்ற திரு இராம. வீரப்பன் அவர்களுக்கு, மேதகு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## படமும் செய்தியும்

தஞ்சை மாவட்டத்தில் நரிமணம், கோயில் களப்பால் பகுதியில் எடுக்கப்படும் பெட்ரோலின் மாதிரியை - மண்டல எண்ணெய் மற்றும் தேசிய எரிவாயுக் குழுவின் இயக்குநர் திரு கே. ஆஞ்சநேயலு, 4-11-87 அன்று மாண்புமிகு தமிழக தொழில் அமைச்சர் திரு க. இராசாராம் அவர்களிடம் அளித்தார்.



புதுக்கோட்டை மாவட்டம்



# சோலையாக்கும் வேளாண்மைப் பொறியியல்

புதுக்கோட்டை மாவட்டத்தில் வற்றாத ஆறுகளோ, வளம் கொழிக்கும் பகுதிகளோ இல்லை. மழை பெய்தால் செழிப்பு சில பகுதிகளில் தென்படும் விவசாயம் செய்ய முடியாத பகுதி என்று ஒதுக்கப்பட்ட நிலங்களை வேளாண்மைப் பொறியியல் துறை வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மூலம் வளப்படுத்தி வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் இத்திட்டத்தின் மூலம் வளம் பெறுகின்றன. வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்திட்டம் வரப் பிரசாதமாகப் பயனளித்து வருகிறது.

இத்திட்டம் முழுமையாக நிலம் உள்ளவர்களின் சொந்த நிலத்தில்தான் செயல்படுத்தப்படுகிறது. செயல் விளக்கம் மூலம் அறிவுரைகூறி, அவர்களுக்குள் நிலத்தை ஒன்று சேர்த்து வரப்புக் கட்டி, கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அதன் பராமரிப்புக்கு வழி செய்யப்படுகிறது. தொடர்ந்து வறட்சியையே பார்த்து வந்த இப்பகுதி மக்கள், தற்பொழுது வறட்சி என்றால் என்ன, என்று கேட்கும் அளவுக்கு, ஆழ்குழாய்க் கிணறு மூலம் விவசாயம் செய்து பயனடைந்து வருகிறார்கள்.

## தனித்தனிப் பிரிவுகள்


வேளாண்மைப் பொறியியல் துறையினர் ஒருங்கிணைந்த திட்டம் மூலம், கசிவு நீர்க்குட்டை, மண் அரிப்புத் தடுப்பு, மண் வளப் பாதுகாப்பு, நர்சரி, ஆழ்குழாய் அமைப்புப்பணி போன்றவற்றில் ஆலோசனைகளை வழங்கிச் செயல்படுகிறார்கள்.

## கசிவு நீர்க் குட்டை

விவசாயிகளுக்கு மிகவும் பயன் தரத்தக்க வகையில் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது கசிவு நீர்க்குட்டையாகும். வனப்பகுதியில் இருந்து வரும் மழை நீர் காட்டாறாக வந்து எதற்கும் பயன் தராமல் வீணாக கடலுக்கோ அல்லது பெரிய ஏரிக்கோ செல்வது வழக்கம். இதனைச் சாதாரண மண் மூலம் தடுத்து நிறுத்துவது என்பது முடியாத காரியம். வெள்ளம் போகும் சமயத்தில் நீரோட்ட ரேகை மூலம் அருகில் உள்ள கிணறுகளில் தண்ணீர் ஊறும். ஆனால் நிரந்தரமாக ஊறாது. தேங்கி நிற்காது. இதனை அறிந்த வேளாண்மைப் பொறியியல் துறையினர், வீணாக எவருக்கும் பயன்தராமல் செல்லும் நீரைத் தேக்கி விவசாயத்திற்கு உதவியாக இருக்க ஏற்பட்ட கண்டுபிடிப்பு கசிவு நீர்க்குட்டையாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்தகைய கசிவு நீர்க் குட்டைகள் 10 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை ஒன்றியத்திலுள்ள சோத்துப்பாளை கிராமத்தில் இதுபோன்ற கசிவு நீர்க் குட்டை அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தண்ணீர் தஞ்சை-திருச்சி சாலை வழியே உள்ள வனாந்தரக் காட்டுப்பகுதிகளில் இருந்து வருகிறது. இத்தண்ணீர் புதுக்கோட்டை-தஞ்சை சாலையில் கரம்பக்குடி வழியே செல்லும் அக்கினி ஆற்றுக்குச் செல்கிறது. இத்தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கசிவு நீர்க்குட்டை அமைக்கும் பணிக்கு ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் செலவிடப்பட்டு 6 மாத காலத்தில் முடிக்கப்பட்டுள்ளது. இதில் 0.544 மெட்ரிக் அடி தண்ணீர் தேக்கி வைக்கலாம். தண்ணீர் தேக்குவதன் மூலம், அதனைச் சுற்றியுள்ள 54 கிணறுகளில் தண்ணீர் நிலையாய் நின்று

**வி. புண்ணியமூர்த்தி**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை மாவட்டம்.**



விவசாயத்திற்குப் பயன்படுகிறது. அந்த வகையில் சுமார் 100 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுகின்றன. கசிவு நீர்க்குட்டை விவசாயிகளுக்கு ஒரு மினி அணைக்கட்டாக அமைந்து, வறட்சிக் காலத்தில் கால்நடைகளுக்கு உதவும் குளமாகவும், குளிக்கும் குளமாகவும் மாறியுள்ளது.

கட்டான் தரை என்றும், சாரளைக் களி என்றும், விவசாயிகள் தம் நிலத்தை ஒதுக்கி விட்டு, புல் பூண்டு முளைத்தால் அதனைக் கால்நடைகளின் மேய்ச்சல் காடாகப் பயன்படுத்தி வந்தார்கள். அத்தகைய பகுதிவிவசாயப்பகுதியாகவறட்சி மேம்பாட்டுத் திட்டம் மூலம் மாற்றப்படுகிறது. இதன் ஆக்கபூர்வமான பணியினை புதுக்கோட்டை ஒன்றியத்தில் கல்லுக்காரன்பட்டியில் காணலாம். இப்பகுதியில் 50 ஏக்கர் நிலம் டிராக்டர், புல்டோசர் ஆகிய இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு, யூகலிப்டஸ் போன்ற பயன்தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன. இது போன்ற பணிகள் ஆலங்குடி தாலுகாவில் செய்யப்பட்டு இன்று விவசாயிகளுக்கு நல்ல வருவாய் தந்துகொண்டிருக்கிறது. கல்லுக்காரன்பட்டியில்நவம்பர்1986-ஆம் ஆண்டுதான் யூகலிப்டஸ் நடப்பட்டுப் பயிராக உள்ளது. யூகலிப்டஸ் தவிர கருவேலம் போன்ற பயிர்களும், விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்ப வேளாண்மைப் பொறியியல் துறையினரே இலவசமாகக் கன்றுகள் வழங்கி, அவற்றை விதைக்கும் அல்லது நடும் பணியை ஏற்றுக்கொள்கிறார்கள். கண்காணித்தும் வருகிறார்கள்.

**நர்சரிப் பண்ணை**

விவசாயத்திற்குப் பிரதானம் நல்ல விதை. இதனை உற்பத்தி செய்ய நர்சரி பண்ணை அமைக்கப்படுகிறது. புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புள்ளான் விடுதியில் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் 1987-88-ஆம் ஆண்டிற்கு ரூ. 67 ஆயிரம் மதிப்பீட்டில் நர்சரி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3 இலட்சம் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் 1 இலட்சம் கன்றுகள் பண்ணைக் காடுகள் திட்டத்திற்கும், இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதியில் விவசாயிகளுக்கு உதவ 2 இலட்சம் கன்றுகளும் (செடிகள்) விநியோகிக்கப்படுகின்றன. யூகலிப்டஸ், வேம்பு, புளி, கருவேலம் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

**மண் அரிப்பைத் தடுக்கும் அணைகள்**

மண்வளப் பாதுகாப்புத்துறையின் மற்றுமொரு பணிதான் மண் அரிப்பைத் தடுக்க மண்அணைகள் உருவாக்குவதாகும். விளை நிலமாகத் தரிசு நிலம் மாறியவுடன் மழைக்காலத்தில் வெள்ளம் வந்து மண் அரிக்காத வண்ணம் மண் அணை 2 அடி உயரத்தில், மேல் தளம் 1.5 அடி அகலத்தில், 6 அடி அடித்தள அகலத்தில் அமைக்கப்படுகிறது வரும் தண்ணீரைத் தேக்கி மண் வெளியேறாமல் தடுப்பதன் மூலம் 40 சதவீத தண்ணீர் ஈரம் நிலவச் செய்வதால், 20 சதவீத கூடுதல் விவசாய உற்பத்தியும் கிடைக்கின்றது. கல்லுக்காரன்பட்டியில் பண்ணைக் காடுகள் திட்டத்தின் கீழ் யூகலிப்டஸ் நட்ட பகுதிகளில் மண் அணைகள் கட்டப்பட்டுள்ளன. கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் வலங்கொண்டான் விடுதியில் மண் அரிப்பைத்தடுக்கும் அணைகள் 2 ரூ.37,500 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இது அப்பகுதி மக்களுக்கு மிகுந்த பலனைத் தருகிறது.

**ஆழ்குழாய்க் கிணறு**

விவசாய உற்பத்திக்கு நல்ல நிலமும், நல்ல நிலத்தடி நீர் வளமும் இருந்தும், அந்த நீரை வெளியில் கொண்டு வந்து விவசாயம் செய்ய விவசாயிக்கு வசதி இல்லாமையால் அது வீணாகிப் பயிரிடப்படாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலங்களை ஒருங்கிணைத்துக் கூட்டுறவுச் சங்கம் அமைத்து விவசாயம் செய்வதற்கு உரிய பணிகளை வேளாண்மைப் பொறியியல் துறை செய்து வருகிறது.

கூட்டுறவுச் சங்கம் அமைத்து, பின் கடனுதவிக்கும் ஏற்பாடுகள் செய்து 111.07 மீட்டர் ஆழத்திற்கு ஆழ்குழாய் அமைத்து 10 எச். பி. திறன் உள்ள மோட்டார் பொருத்தி விவசாயிகளுக்கு உதவும் பணியினையும் இத்துறை செய்து வருகிறது. கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கருப்பட்டி கிராமத்தில் ரூ. 1.70,822 மதிப்பீட்டில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இது மணிக்கு 27,100 காலன் தண்ணீர் சப்ளை செய்கிறது. இதனால் 36 எக்டேர் நிலம் பாசனம் பெறுகிறது. வறண்ட பூமி, வளம் கொழிக்கும் பூமியாக மாற்றப்பட்டுள்ளது. இதே ஒன்றியத்தில் கிருஷ்ணம்பட்டியிலும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு ரூபாய் 1,48,683 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, மணிக்கு 31,100 காலன் தண்ணீர் சப்ளை செய்கிறது. இதன் மூலம் 14 எக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது. புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த ஒசுவப்பட்டி கிராமத்தில் ரூ. 74,162 மதிப்பீட்டில் ஆழ்குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு மணிக்கு 10,000 காலன் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

**மாவட்ட ஆட்சித் தலைவரின் வேண்டுகோள்**


புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியின் கோரப் பிடியில் அடிக்கடி சிக்கித் தவிக்கும் மாவட்டமாகும். வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது இம்மாவட்டத்தில் புதுக்கோட்டை, திருவரங்குளம், கந்தர்வகோட்டை, கரம்பக்குடி ஆகிய ஒன்றியங்களில்தான் செயல்படுத்தப்பட்டுவருகின்றது. இத்திட்டத்தினை இம்மாவட்டத்திலுள்ள 13 ஒன்றியங்களிலும் செயல்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் முயற்சி செய்து வருகிறார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002